# விதைகள்...

பகுதி–II

# விதைகள்...

**பகுதி-11**

## ஒரு நிமிஷம் நில்லுங்கள்:

தலை நசுக்கப்பட்ட சாத்தானின் உடல் பகுதியின் அட்டூழியங்களை எதிர்த்து, சமாளித்து, அவன் கிரியைகளை அழித்து, மேற்கொண்டு, ஜெயித்து, வெற்றியாக விதைகள் 10 பகுதிகளை வெளியிட வைத்த நம் அப்பா பிதாவாகிய தேவனுக்கு பல கோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுத்து, இந்த விதைகள் 11–ஆவது பகுதியை கர்த்தராம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஆசையாய் தொடருகிறேன்!

*"வார்த்தையினாலாவது" "கிரியையினாலாவது", நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள். கொலோ. 3:17"*

இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு வந்தது பாவிகளை இரட்சிக்க மாத்திரம் தான் என்று நினைத்துக் கொண்டு, இன்னமும் நியாயப்பிரமாணத்தின் அடிப்படையிலேயே கிறிஸ்மஸ் கொண்டாடிக்கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களுக்கு; இயேசுவின் மூலமாய் சிலுவையில் ஏற்படுத்தப்பட்ட கிறிஸ்துவின் பிரமாணத்தின் வெளிச்சத்தில் வேதத்தின் சத்தியங்களை பகிர்ந்து கொண்டு வருகிறோம். எளிதாக புரிய வேண்டும் என்பதற்காக பழைய ஏற்பாட்டின் பிரமாணமான நியாயப்பிரமாண (மோசேயின் பிரமாணம்) சத்தியங்களை சிவப்புக் கண்ணாடிக்கு ஒப்பீடாகவும், புதிய ஏற்பாட்டின் விசுவாசப்பிரமாண (நீதியின் பிரமாணம், கிருபை பிரமாணம், கிறிஸ்துவின் பிரமாணம்) சத்தியங்களை பச்சைக் கண்ணாடிக்கு ஒப்பீடாகவும் வைத்து இரண்டு சத்தியங்களின் வித்தியாசத்தை பிரித்துக் காட்டி வருகிறோம்.

வேத வசனங்களின் பூட்டுகளை பரிசுத்தாவியானவரின் உதவியுடன் திறந்து, உங்களை உள்ளே அழைத்துச் சென்று ஒளிப்பிடத்து பொக்கிஷங்களைக் காட்டுவதில் கர்த்தருக்குள் சந்தோஷப்படுகிறேன். மட்டுமல்ல... அந்தப் பொக்கிஷங்களை எடுத்துக் கொண்டு வெளியேறுவதற்கும் இந்த வேத ஆராய்ச்சி புத்தகங்கள் உங்களுக்கு பேருதவியாக இருக்கும்.

"புத்தகங்கள்" – காலம் என்னும் கரையில் நிறுத்தப்பட்டுள்ள கலங்கரை விளக்கம் என்றார் ஒரு அறிஞர். பாதையைத் தவற விட்டவர்களுக்கு ஒரு வாய்ப்பு; உங்கள் விசுவாசக் கப்பலுடன் இங்கே வாருங்கள். நாங்கள் அல்ல, எங்களுக்குள் வசிக்கும் பரிசுத்தாவியானவர் உங்களை நடத்துவார்.

# இன்னும் ஒரு நிமிஷம்!:

விதைகள் முதல் பகுதியை எழுத ஆரம்பிக்கும்போது என் கண்ணில் சிவப்பு கண்ணாடிதான் இருந்தது. மிகவும் பழையதான அந்தக் கண்ணாடிகள் அதன் பிரேமிலிருந்து கழண்டு விழுந்துவிடுமோ என்று நினைக்கும் அளவுக்கு லூசாக இருந்தது, அழுக்கடைந்து, கீறல்கள் விழுந்திருந்தது.

அந்தக் கண்ணாடியை கழட்டிவிடவேண்டும் என்ற தூண்டுதல் மனதில் இருந்தது. பச்சைக் கண்ணாடி உறைக்குள் இருந்தது, அதை எடுத்துப் பார்த்துவிட்டு மீண்டுமாக மேஜையின் மீது வைத்துவிட்டேன். சிவப்புக் கண்ணாடியைக் கழட்ட நான் எத்தனித்தபோது பச்சைக் கண்ணாடி தன் உறைக்குள் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டது!

*"... விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப்பிரமாணத்தின் கீழ் காவல் பண்ணப்பட்டிருந்தோம்."*

*"இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. கலா. 3: 23, 24"*

வசனங்களை வாசித்துவிட்டு நிதானிக்கும்போது ...
புரிந்துவிட்டிருக்கும்!
என் இடது கை என் கண்களிலிருந்த சிவப்பு கண்ணாடியை கழட்டிக்கொண்டு கீழிறங்கிக் கொண்டிருக்கும் போதே, என் வலது கை உறையிலிருந்த பச்சைக் கண்ணாடியை எடுத்துக் கொண்டு மேலேறி வந்து கொண்டிருந்தது.
இரண்டும் உரசிக் கொண்டன ...

அதே வேகத்தில் பச்சைக் கண்ணாடி கண்ணுக்கேறியது, சிவப்பு உறைக்குள் சிறையாகிப்போனது.
தேவையில்லாத பழைய பொருட்களை சேகரித்து வைக்கும் ஒரு பெட்டிக்குள் அதை எடுத்து வைத்து மூடினேன்.

*"புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார், பழமையானதும்*

*நாள்பட்டதுமாயிருக்கிறது, உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது. எபி. 8:13"*

உங்களது சந்தேகங்கள் – கேள்விகள் – ஆலோசனைகள் ஏதேனுமிருப்பின் எங்களுக்கு எழுதுங்கள்.
தொடர்பு கொள்ளுங்கள்.


எங்கள் முகவரி:

சகோதரி. **லதா டேவிட்**
**நித்தியர் இயேசு ஊழியங்கள்**
5-A/233, கால்டுவெல் காலனி 2-ம் தெரு கிழக்கு,
தூத்துக்குடி-628 008

தொலைபேசி:
+91-461-23 77 88 9
அலைபேசி:
+0-9003456506 &
+0-9442466250

**Our Address:**
**Sis. LATHA DAVID**
**SOVEREIGN JESUS MINISTRIES**

**5-A/233, CALDWELL COLONY**
**SECOND STREET (EAST)**
**TUTICORIN-628 008**

**Phone:**

**+91-461-23 77 88 9**

**Mobile:**

**+0-90034 56506 &**
**+0-94424 66250**

Email : sovereignjesus@gmail.com
sovereignjesus@hotmail.com

Web : www.sovereignjesus.com

www.tamilchristian.com/ebook/index.html

## தேவன் எழுதிய அன்புக் கடிதம்:

தேவன் தன்னைப் போலவே மனிதனைப் படைத்து, இந்தப் பூமியில் அவன் தன்னுடைய சித்தத்திற்கேற்றபடி வாழ்வதற்கான சட்ட திட்டங்களை, ஆலோசனைகளை நமக்கு தன்னுடைய பரிசுத்தாவியானவரின் மூலமாக எழுதிக் கொடுத்தார். அதுதான் பரிசுத்த வேதாகமம் என்கிறோம். அப்படியிருக்க, அதை வாசித்துப் புரிந்து கொள்ள இத்தனை கெஜகர்ணம் தேவையா? வாசித்தவுடன் புரிந்து கொள்கிற மாதிரி வேதம் ஏன் எழுதப்படவில்லை? இதைப் புரிந்து கொள்ள இத்தனை சபைகள், போதகர்கள், வேதபாட வகுப்புகள், கருத்தரங்குகள், புத்தகங்கள், **E-books** தேவையா?

அப்படியானால் ஏழை எளியவர்கள், படிக்காதவர்கள், பாமரர்கள் இவர்களுக்கெல்லாம் வேதம் புரிய வேண்டிய அவசியமில்லையா? அவர்கள் என்ன தள்ளப்பட்டவர்களா? அல்லது மனித ஜென்மங்களில்லையா? அக்கறை மிகுந்த கேள்விகள், பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்.

தேவன் மனிதர்களிடம் பட்சபாதம் காட்டுவதேயில்லை. அவருக்கு எல்லா தரப்பினரும் சமம் தான் **(equal)**. ஆதியிலே வேதம் எல்லோருக்கும் புரியும்படிதான் இருந்தது. மேலோட்டமாகத்தான் இருந்தது. ஆதாமும் ஏவாளும் தேவனோடு தொடர்பு கொண்டிருந்த விதத்தைப் பார்த்தாலே இது புரியும். அந்தக் காலகட்டத்தில் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பிரகாசமுள்ள மனக்கண்கள் இருந்தன. அதனால் தேவனுடைய மகத்துவங்களை யாரும் விவரித்துச் சொல்லாமலேயே பார்த்து புரிந்து கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருந்தார்கள். ஒரு சக மனிதனோடு பேசுவது போல, தேவனோடு பேசிக்கொண்டிருந்தார்கள், பேசிக்கொண்டே ஏதேன் தோட்டத்திற்குள் நடந்து திரிந்தார்கள். அந்த அளவுக்கு தேவனுடனான தொடர்பு எளிதாக இருந்தது.

மனிதன் விழுந்து போனபின்பு ஏற்பட்ட பூமியின் சாபமும், அதைத் தனக்கு அனுகூலமாக்கிக்கொண்ட சாத்தானும் தான் வேதத்தின் இரகசியங்கள் உள்வாங்கிப் போவதற்கு காரணமாகிப் போனார்கள். மனிதன் பாமரனாக, கல்வியறிவில்லாதவனாக, ஏழை எளியவனாக இருப்பது தேவ சித்தமில்லை... மனிதன் இப்படியெல்லாம் ஆகிப்போனதற்கு தேவன் காரணகர்த்தாவும் அல்ல. அதெல்லாம் சாபத்தால் வந்தது. அப்படியே இருந்தாலும் ஒரு மனிதனின் பாமரத்தனமோ, படிப்பறிவின்மையோ, ஏழ்மையோ அவன் தேவனை அறிந்து கொள்வதற்கு ஒரு தடையாக இருப்பதும் இல்லை.

வேதத்திலேயே எத்தனையோ உதாரணங்களை இதற்குக் காட்டலாம். படிப்பறிவில்லாத எத்தனையோ பரிசுத்தவான்களைக் கொண்டு தேவன் தன்னுடைய மகத்துவங்களை உலகத்திற்குக் காட்டவில்லையா? (உம். தாவீது, யோவான்ஸ்நானகன், பேதுரு ...) படித்த, உலக பணக்காரர்களின் பட்டியலில் இடம் பிடித்திருக்கும் எத்தனையோ பேருக்கு இன்றளவும் இயேசுவைத் தெரியாது, அவர்கள் வேதத்தை படித்திருக்கவில்லை, படித்தாலும் அவர்களுக்குப் புரியவில்லை, மூடி வைத்துவிட்டார்கள், இதற்கென்ன சொல்லுகிறீர்கள்?

பூமி அதிர்ச்சியால் புதையுண்டு போன மொஹஞ்சோதரோ, ஹரப்பா என்ற இரண்டு பட்டணங்களைப் பற்றி படித்திருப்போம். அந்த பட்டணங்களின் கதைகள் அதோடு முடிந்துவிடவில்லை. புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் புதையுண்டு போன அந்த இரண்டு நகரங்களை மாத்திரமல்ல, அங்கே வாழ்ந்த மக்களின் வாழ்க்கையையும், அவர்களின் இறந்தகால சரித்திரத்தையும் சேர்த்து தோண்டி எடுத்துவிட்டார்கள்!

இப்போது பள்ளிக்கூட பிள்ளைகள் அதை வரிவரியாக கற்று, புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஏறக்குறைய பரிசுத்தாவியானவரும் இந்த ரீதியில்தான் நம்மை நடத்துகிறார். சத்தியத்தை அறிந்து கொள்வதற்கேதுவாக வசன ஆழங்களுக்குள் நம்மை இறக்கி நடத்திப் போகிறார். வேதத்தை நம் அப்பா நமக்கு எழுதிய ஒரு அன்புக் கடிதமாக ஒப்பீடு செய்யலாம். *"உலகத் தோற்றத்திற்கு முன்னதாக நாம் எப்படி இருந்தோம்"* என்பதையும், *"நமக்காக தேவன் என்னென்ன செய்து வைத்திருந்தார்"* என்பதையும் அதில் எழுதியிருக்கிறார்.

*"பூலோகம் உருவாகிய ஆரம்பக்கட்டத்தில் என்ன நடந்தது"* என்பதையும், *"அதனால் பூமிக்கு வந்த ஆபத்து என்ன"*வென்பதையும் எழுதியிருக்கிறார். தப்பு நடந்து விட்டது, இனி *"அதை எப்படி சரி செய்வது"* என்பதையும் எழுதினார். ஒன்றல்ல இரண்டல்ல சுமார் 6500 முதல் 8000 வருஷங்களாக பரிசுத்தாவியானவர் பல்வேறு காலகட்டங்களில் பலவேறு மனிதர்கள் மூலம் ஒரு நீண்ட கடிதத்தை எழுதினார்... எழுதிக்கொண்டே இருக்கிறார்... இன்னும் எழுதுவார்.

*"தன்னுடைய வார்த்தையை பல்வேறு மனிதர்களின் மூலமாக தீர்க்கதரிசனமாகப் பேச வைத்து"*, *"அதை இயேசுவாக உருவெடுக்க வைத்து, பாவ பரிகாரியாக, சாபம் போக்குபவராக, வியாதி நீக்குபவராக, ஏழ்மை மாற்றுபவராக அனுப்பினார்"*. *"சிலுவையில் என்ன நடந்தது, என்னென்ன நமக்காக செய்யப்பட்டது என்பதை"*யும், *"அதை எப்படி நாம் எடுத்து கையாள்வது என்பதை"*யும் எழுதி வைத்திருக்கிறார். அவருடைய வார்த்தைகளை பிரகாசமுள்ள மனக்கண்களைப் பெற்று, வாசித்து, *"பரிசுத்தாவியானவரோடு சேர்ந்து ஆராய்ச்சி நடத்தினால் ஒரு NASA என்ன ஒன்பதினாயிரம் NASA விண்வெளி ஆராய்ச்சி மையங்களை நாம் ஆவி மண்டலத்தில் அமைத்து சாதனை படைக்கலாம்"* என்பதையும் சொல்லித் தந்தார். அப்படி நாம் சாதனையாளர்களாக மாறிய பிறகு நடக்கப்போகும் காரியங்களைத்தான் வேதத்தின் முடிவில் (வெளி.)—ல் பார்க்கிறோம்.

1902ம் வருஷத்தில் மேற்கு இந்திய தீவில் ஒரு எரிமலை வெடித்தது, 3 நிமிடங்களில் 40,000 பேர் மூச்சுத் திணறி இறந்தார்கள். அந்த நகரத்தில் ஒரு தூக்குத் தண்டனை கைதி பாதாள சிறையில் அடைக்கப்பட்டிருந்தான். எரிமலை வெடித்த அன்றுதான் அவன் தூக்கில் போடப்படுவதாக இருந்தது. ஆனால் அவனை தூக்கில் போடுவதற்கு ஆயத்தமாக இருந்த சிறைச்சாலை அதிகாரிகள் எல்லோரும் இறந்து போனார்கள், தூக்குத் தண்டனை கைதி மாத்திரம் தப்பித்துவிட்டான்! அதிர்ஷ்டசாலிகளே கேளுங்கள்; உங்களுக்கு ஒரு நற்செய்தி: சாபமும் சாத்தானும் நம்மை பாதாளத்தில் சிறைவைத்ததென்னவோ உண்மைதான். ஆனால் தேவன் தன் வார்த்தையை அனுப்பி (இயேசு – வார்த்தையானவர்) அவன் தலையை உடைத்தார்; மூளை சிதறியது!

தலையில்லாத உடலுக்கு உயிர் இருப்பதாக ஒத்துக் கொள்ள முடியாது. ஒரு மனிதனின் மூளையின் இயக்கம் நின்றுவிட்டால்; அவன் "முழுமையான மரணம்" அடைந்து விட்டான் என்பதே மருத்துவ ரீதியிலான உண்மை. இருதயம் இயங்கிக் கொண்டிருப்பதால் அவன் உயிருடன் இருக்கிறான் என்று அர்த்தமாகாது! இந்த மருத்துவ உண்மையை மனதில் கொண்டு யோசித்துப் பாருங்கள். சாத்தான் செத்துவிட்டான், அவன் கதை முடிந்தது. தலையில்லாத உடலின் உயிர்த்துடிப்பை வைத்து அவனால் எதுவுமே செய்ய முடியாது. சாத்தான் அல்ல, அவனைக் குறித்ததான பயமே மனிதர்களை சாகடிக்கிறது. பாதாளச் சிறைச்சாலையின் கதவின் வெளியே தொங்கிய பூட்டுகள் என்றோ இயேசுவால் உடைக்கப்பட்டாயிற்று. பூட்டப்பட்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும்; தேவனைப் பற்றிய சரியான வெளிப்பாடில்லாத தேவபிள்ளைகளே, கதவைத் தள்ளிக்கொண்டு வெளியே வாருங்கள்! *"ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் ... வெளி. 3:22"* பரிசுத்தாவியானவர் எழுதிக் கொடுத்த இந்த அன்பின் கடிதத்தை கண்ணுள்ளவன் பார்க்கக்கடவன், வாயுள்ளவன் வாசிக்கக்கடவன்!

## நதிமூலம், ரிஷிமூலம்:

எந்த காரியமானாலும் அது இடையிலிருந்து ஆரம்பிப்பதில்லை, அதற்கென்றொரு துவக்கம் இருக்கும். ஒரு மனிதனின் துவக்கம் 2 மாதத்திலிருந்தோ, 17 வயதிலிருந்தோ ஆரம்பிப்பதில்லை, அவனுடைய துவக்கம் கண்ணுக்குத் தெரியாத ஒரு அணுவிலிருந்து ஆரம்பமாகிறது. மனுக்குலத்தின் ஆரம்பக்கட்டத்தைப் பெரும்பாலும் யாருமே யோசிப்பதில்லை. அது தேவையில்லாத ஒன்று என்றே நினைக்கிறார்கள். சாதாரண மனிதர்கள் அப்படி நினைத்தால் பரவாயில்லை விட்டுவிடலாம், அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான். ஆனால் வானத்தையும் பூமியையும் உண்டாக்கிய சர்வவல்ல தேவனை ஆராதிக்கும் தேவஜனங்களும், சுவிசேஷகர்களும், போதகர்களும், மேய்ப்பர்களும், தீர்க்கதரிசிகளும், வரம்பெற்ற தேவதாசர்களும்,

உலகளவில் பிரபலமாகிய ஊழியர்கள் கூட இதே **category-ல்** இருப்பார்களானால் **...** என்னவொரு வேதனையான காரியம்? முதலும் வேண்டாம் முடிவும் வேண்டாம் என்றால் பரிசுத்தாவியானவர் ஆதியாகமத்தையும், வெளிப்படுத்தின விசேஷத்தையும் வேதத்திலிருந்து எடுத்திருப்பார். ஒரு கதைப்புத்தகத்தை கையில் எடுத்தால், அதை திறந்து ஒன்றாம் பக்கத்திலிருந்து வாசிக்கத் துவங்குகிறோம் இல்லையா? அதற்கு முன்னதாக இருக்கிற முன்னுரை, ஆசிரியர் உரைகளைக்கூட சிலர் படித்துவிடுவதுண்டு. ஒன்றாம் அத்தியாயம், அப்புறம் இரண்டு **...** இப்படியே போய் கடைசி அத்தியாயம் வந்து, முடிந்தது வரை வாசித்துவிட்டுதான் புத்தகத்தை மூடுவோம்.

ஆனால் வேதத்தை மட்டும் அப்படி வாசிப்பதில்லை. திறந்தவுடன் ஏதாவது ஒரு சங்கீதம், அல்லது அன்றைய தேதி எண்ணையுடைய நீதிமொழிகள்! நானும் இதற்கு விதிவிலக்கல்ல, பிரசங்கி எனக்கு பிடித்த புத்தகம் என்பதால் அதை அடிக்கடி வாசிப்பதுண்டு. நம்மோடு சேர்ந்து புலம்புவதற்கு ஒருத்தர் கிடைத்திருக்கிறாரே என்று சற்று ஆறுதலாக இருக்கும். மனிதனின் வாழ்க்கையே மிக மோசமான ஒன்றுதான், தேவன்தான் அப்படி அமைத்திருக்கிறார் என்று முடிவெடுத்தேன். நம் கையில் எதுவுமில்லை, எல்லாம் தேவன் வைத்தபடிதான் (மிக மோசமாக – அப்படித்தான் என் எண்ணம்) நடக்கும், நாம் பேசாமல் இருந்தால் போதும் என்று நினைத்தேன். என்னுடைய அறியாமை, பூமியின் மீது காணப்படும் சகல நாசமோசங்களும் சேர்ந்து என்னையும் என் வாழ்க்கையையும் விழுங்குவதற்கு காரணமாகிப் போனது. நான் தவறாக நினைத்த காரியங்களெல்லாம் எனக்கு வந்தது. நினைப்போடு நிறுத்திக் கொண்டிருந்தால் ஒன்றும் நடந்திருக்காது, நினைத்ததையெல்லாம் வாய்விட்டுப் பேசித்தொலைத்ததால் அவையெல்லாம் எனக்கு வந்தது!

அப்படி நான் என்ன பேசினேன்? அதனால் எனக்கு என்ன நடந்தது? எனக்கு மற்றவர்களுக்கு இருப்பதைப் போன்ற அழகோ, அறிவோ, பணமோ, திறமையோ, வேறு எந்த **(+)ம் Plus-ம்** இல்லை என்று நினைத்தேன், அதையே சொன்னேன். நான் எதை தொட்டாலும் அது **failure** ஆகிவிடும் என்ற நினைப்புதான், அதே ரீதியிலான என் பேச்சுதான் வாழ்க்கை **break-down** ஆகிப் போனதற்கு முக்கிய காரணமாகிவிட்டது. வேதத்தை அறியாததினால், அதை ஒழுங்கும் கிரமமுமாக தியானிக்காததினால், யாரும் அதைச் சொல்லித் தராததினால், எப்படிச் சொல்லித் தருவது என்பது அவர்களுக்கே தெரியாததினால் இது நடந்தது. வேதத்தில் சங்கீதம், நீதிமொழிகள், யோபு, எஸ்தர், ரூத், என்று ஏதாவது ஒன்றைப் படிப்பதினால் நாம் பரிபூரணமான சத்தியத்தை அறிந்து கொள்ள முடியாது.

ஒரு நாவலின் **50–வது** பக்கத்தை திறந்து வாசிக்க ஆரம்பித்தால் ஏதாவது புரியுமா? *"கதையின் கதாநாயகி ஒரு ஜன்னலின் ஓரமாக உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். பக்கத்தில் அவளின் அம்மா வைத்துவிட்டுப் போன டீ கப்புக்குள் ஒரு ஈ உயிர்ப்போராட்டம் நடத்திக்கொண்டிருந்தது".* கதையில் வருகிற இந்த வரிகளை வைத்து, கதையை புரிந்து கொள்ள முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது! நாட்டில் எத்தனையோ பெண்கள் அழுது கொண்டுதான் இருக்கிறார்கள், டீயை உடனே குடிக்காமல் வைத்தால் ஈ விழத்தான் செய்யும், இது தெரிந்த விஷயம் தான். அவள் ஏன் அழுகிறாள்? முன்னாட்களில் அவள் விதைத்தது என்ன? அதன் விளைச்சல் அவளை ஏன் இப்படியாக பாதிப்படைய வைத்தது? இதற்கெல்லாம் பதில் தெரிய வேண்டுமானால் முதல் அத்தியாயத்திற்குள் போக வேண்டும்.

அதை விட்டுவிட்டு **95–வது** பக்கத்தைப் புரட்டி வாசித்தால் *"... ஊரே வீட்டு வாசல் முன்பாக திரண்டிருந்தது. ஆளுக்கொன்றைப் பேசினார்கள், யாருக்கும் பிரச்சனை என்னவென்றே புரியவில்லை. வீட்டுக்குள்ளிருந்த பெரியவர் பயத்தில் ஓடி வந்து கதவை சாத்தினார் ..."* என்று இருக்கும்! **50–வது** பக்கத்தில் ஒரு பெண் அழுது கொண்டிருந்ததற்கும், **95–ம்** பக்கத்தில் ஊரே கூடி வந்திருப்பதற்கும் என்ன சம்பந்தம்? பூசாரிக்கும் உச்சிக் குடும்பிக்கும் என்ன சம்பந்தமோ அந்த சம்பந்தம்தான்!

இயேசுவை ஏற்றுக் கொள்ளாத பெயர்க்கிறிஸ்தவர்களாக இருந்தாலும், இரட்சிக்கப்பட்ட தேவ சபையினராக இருந்தாலும் சரி! வேதத்தை வாசித்து, புரிந்து கொள்ளும் இலட்சணம் இப்படித்தான் இருக்கிறது. சரி, அந்த நாவலில் **50** மற்றும் **95–வது** பக்கங்களுக்கு இடையில்

நடந்தது என்ன? பிரகாசமுள்ள மனக்கண்கள் இல்லாததினால் வாசிப்பவர்களுக்கு நடந்தது எதுவும் புரியவில்லை. அதனால் ஒரு அநுமானத்திற்கு வருகிறார்கள். *“இதில் ஏதோ குடும்பப்பிரச்சனை இருப்பதாகத் தெரிகிறது. அழுது கொண்டிருக்கும் பெண் அவள் கணவனுடன் சண்டை போட்டுவிட்டு தாய் வீட்டுக்கு வந்திருக்கிறாள். ஆனால் கதையில் வரும் பெண்ணுக்கு 18 வயதுதான் ஆகிறது, அதனால் ஏதாவது காதல் பிரச்சனையாக இருக்குமோ? அதனால்தான் ஊருக்குள் ஜாதிக் கலவரமோ? ...”* இப்படி ஆளுக்கொன்றைப் பேசி அந்தக் கதைப் புத்தகத்தில் கொஞ்சம் கூட இல்லாத ஒரு புதுக் கதையை ஜோடித்தார்கள்.

கடைசியாக, தங்களுடைய யூகம்தான் சரி என்று ஒரு முடிவுக்கு வந்து, எதற்கும் ஒரு **glance** (ஒரு வேகமான கண்ணோட்டம் – நுனிப் புல் மேய்தல்) பார்த்துவிடுவோம் என்று கடைசிப் பக்கத்தை புரட்டுகிறார். *“வீட்டுக் கதவின் வெளிப்புறம் பூட்டுத் தொங்கியது”* என்று இருந்தது. நான் **guess** (அநுமானித்தது) ரொம்ப சரி என்றபடி புத்தகத்தை மூடினார் ஒருவர்.

இந்த முறையிலான வேத வாசிப்பால், அதைச் சார்ந்த பிரசங்கங்களால் சபைக்குள் ஏற்பட்டிருக்கும் கலவரங்கள், குளறுபடிகள் சொல்லி முடியாது. சபையைவிட்டு வெளிநடப்பு செய்தவர்களின் எண்ணிக்கை எண்ணிமுடியாது. தவறான உபதேசங்கள் பிரிவினைகளைத்தான் கொண்டு வரும். சபைகள் துண்டாடப்படுவதால் தெருவுக்கு மூன்று சபைகள். சத்தியத்தை அறியாமல் இன்னமும் நியாயப்பிரமாண சாபங்களையே பிரசங்கித்துக் கொண்டிருக்கும் சபைகள் எவ்வளவாய் பெருகுகிறதோ அவ்வளவாய் ஆபத்தும் அதிகரிக்கிறது. தவறான பாதையில் நடந்து கொண்டிருப்பவர்களிடம் போய் சரியான வழியைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் பேதை கிறிஸ்தவர்கள்! ஒரு குருடனின் கையை பிடித்தபடி வரிசையாக நிற்கும் குருடர்கள்! இவர்கள் வாகன நெருக்கடி நிறைந்த ரோட்டைக் கடக்க முயற்சிக்கிறார்கள். **signal** குறித்து இவர்கள் கவலைப்படுவதில்லை; வாகனங்கள் இவர்களை கவனிப்பதில்லை!

மனிதனால் கைக்கொள்ள முடியாது, முயற்சி செய்தாலும் தோற்றுப் போவான் என்று தேவன் இயேசுவின் மூலமாக சிலுவையில் முடித்து வைத்த ஒரு விவகாரத்திற்கு உயிர் கொடுக்க முயற்சிக்கும் துணிகரம் சபையில் அக்காலம் தொட்டே நடந்து கொண்டேதான் இருக்கிறது. பவுல் அதைத்தான் தட்டிக் கேட்டார். *“.. நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக்கூடாதிருக்கிற நுகத்தடியைச் சீஷர் கழுத்தின்மேல் சுமத்துவதினால், நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்? அப். 15:10”* என்று கண்டித்துப் பேசுகிறார். பவுல் இப்படி கண்டிப்பாக பேசுமளவிற்கு சபையில் அப்படி எதை உபதேசித்தார்கள்? கவனியுங்கள்: *“சிலர் யூதேயாவிலிருந்து வந்து நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனமடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம் பண்ணினார்கள். அப். 15:1. அப்போது பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளான சிலர் வந்து, அவர்களை விருத்தசேதனம் பண்ணுகிறதும் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு கற்பிக்கிறதும் அவசியம் என்றார்கள். அப். 15:5.”*

இக்காலத்திலும் இதே பிரச்சனை ... கண்டித்து பேசினால், பேசியவருக்குப் பிரச்சனை! பவுல் சிலுவையில் இயேசு நமக்காக ஏற்படுத்தின புதிய உடன்படிக்கையான கிறிஸ்துவின் பிரமாணத்தை உபதேசித்ததால் பட்டபாடுகளை அவரின் நிருபங்களில் நெடுக பார்க்க முடியும். அவரே அதற்கு ஒரு பட்டியல் தருகிறார். 2 கொரி 11: 23–28 வாசித்தால் தெரியும். என்றாலும் பவுல் விட்டுவிடவில்லை, முற்றும் முடிய பிரசங்கித்துவிட்டுத்தான் ஓய்ந்தார்! *“தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே, எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு ... அப். 20: 26, 27.”* பவுல் ஒன்றையும் மறைத்து வைக்கவில்லை. ஆயிரம் எதிர்ப்புகள் மத்தியிலும் சொல்ல வேண்டிய புதிய உடன்படிக்கைகளின் சத்தியத்தைக் கடிதம் கடிதமாக, பக்கம் பக்கமாக எழுதினார்.

எத்தனையெத்தனையோ எதிர்ப்பாளர்களைத் தாண்டி, நியாயப்பிரமாண தீவிரவாதிகளின் கண்களில் படாமல் இரகசியமாக ஊடுருவி, இன்று பகிங்கரமாக எங்கள் மூலமாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. பூமியின் சாபத்தாலோ, சாத்தானாலோ, பாரம்பரியவாதிகளினாலோ, தீவிரவாதிகளினாலோ, அவர்கள் தீ வைத்து வேதத்தை எரித்ததினாலோ, சுவிசேஷகர்களை

கொன்று குவித்ததினாலோ சத்தியத்தை மறைத்து வைக்க முடியவில்லை. *“அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்; வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை, அறியப்படாத இரகசியமும் இல்லை. மத். 10: 26, 27”*

உனக்கு வேறு வேலையில்லையா? பிள்ளைகளைக் கவனிக்க வேண்டாமா? புத்தகம் எழுதாதே என்றான் சாத்தான்! அவன் வாயை மூடிக்கொண்டு சும்மா இருந்திருந்தால் ஒரு புத்தகத்துடன் விஷயம் நின்றிருக்கும். அவனுடைய எதிர்ப்பு ஊழியத்திற்கு ஒரு நீர்ப்பாய்ச்சல் போல ஆகிவிட்டது. வரிசையாக 2, 3, 4, 5, 6, 7, 8, 9,10 என்று விதைகள் **E-books** பூமியை பிளந்து கொண்டு முளைத்தது! *“ஆனாலும் அவர்களை எவ்வளவு ஒடுக்கினார்களோ அவ்வளவாய் அவர்கள் பலுகிப் பெருகினார்கள். ஆகையால் அவர்கள் இஸ்ரவேல் புத்திரரைக்குறித்து எரிச்சல் அடைந்தார்கள். யாத். 1:12”* என்ற வசனத்தின்படி நடந்தது. தலை நசுக்கப்பட்டதால் சேதமடைந்த மூளையோடு போராடிய சாத்தான் செய்த அட்டூழியங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. நான் புத்தகங்கள் எழுதாமலிருப்பதற்கேதுவான சாத்தியக்கூறுகளை அதிகப்படுத்தினான். ஆவியில் சோர்வை உண்டாக்கினான். “... அவனுடைய (சாத்தான்) தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே. 2 கொரி. 2:11”. என்றாலும் *“... எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன். பிலி. 1:12”*

## இராஜ்ஜியத்தின் சுவிசேஷம்:

*“ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும். மத். 24:14”.* கர்த்தர் இயேசு சொன்ன தீர்க்கதரிசன வசனங்கள் நிறைவேறி வரும் காலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆம், ராஜ்யத்தின் சுவிசேஷத்தைத்தான் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறோம். சுவிசேஷம் என்றாலே இரட்சிப்பின் செய்தி மட்டும் தான் என்று முடிவு செய்கிறோம். ஒரு நற்செய்தி கூட்டத்தில் ஒரு சுவிசேஷ பிரசங்கியாரின் பிரசங்க வாக்கியம் கேட்டு இரட்சிக்கப்படுகிறோம். மிகவும் அற்புதமான காரியம் இது. இரட்சிக்கப்படும்போது இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கிறோம், அவர் நம் இருதயத்தில் வந்து வசிக்க ஆரம்பித்து விடுகிறார்... தெய்வீக சமாதானம் உள்ளத்தை ஆட்கொள்கிறது... ஞானஸ்நானம், அபிஷேகம், அந்நியபாஷை, ஆராதனைகள், சுவிசேஷ ஊழியங்கள் ... இதற்கு மேல் தொடர்ச்சியாக போய்விடாதபடி சாத்தான் கதவுகளை பூட்டிவிடுகிறான். உண்மையில் ராஜ்ஜியத்தின் சுவிசேஷம் இங்கே முடிந்துவிடவில்லை, இங்கேதான் ஆரம்பிக்கிறது என்பது ஆச்சரியகரமான உண்மை!

பரலோக இராஜ்ஜியத்தில் உள்ள சகல ஆசீர்வாதங்களையும் நாம் பெற்றுக் கொள்ள நம்முடைய இரட்சிப்பு ஒரு முகப்பு வாசலாக இருக்கிறது. பொருளாதார ஆசீர்வாதங்கள், பொன், சகல சம்பத்துக்கள், சுகம், சமாதானம், சந்தோஷம், பாவ, சாபத்திலிருந்து விடுதலை, வெற்றி என்ற ரீதியில் கோடிகோடியான ஆசீர்வாதங்கள் கொட்டிக் கிடக்கிறது. கடல் நீரைப் போல ஆசீர்வாதங்கள் அலையலையாக பிரவாகிக்க, ஒரு சொம்பு தண்ணீரை மாத்திரம் எடுத்துக் கொண்டு திரும்பினால்...? சூரியன் ஜோதிமயமாக பிரகாசிக்க, ஒரே ஒரு ஒளிக்கீற்றை மட்டும் உள்வாங்கினால்...?

இப்படியெல்லாம் நடக்கக்கூடாது, தேவபிள்ளைகளாகிய நாம் பூமியையும் அதன் நிறைவையும் நமக்குச் சொந்தமாக்க வேண்டும். ஒரு செரட்டை அல்லது பிய்ந்து போன செருப்பின் வார் கூட சாத்தான் வசம் போகக்கூடாது! அதற்காகத்தான் இத்தனை பாடுகளையும் படுகிறோம். பரலோக இராஜ்ஜியத்தின் இந்த நற்சு“விசேஷத்தை” பிரசங்கிக்கிறோம்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சியில் ஒரு முக்கியமான மைல் கல் **Mile-stone** சந்திரயான்–1. இந்திய ஆராய்ச்சியாளர்களின் கனவுகளின் தொகுப்பு தான் இந்த சந்திரயான். ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும்போது விஞ்ஞானிகள் சும்மா இருந்திருக்க மாட்டார்கள். அதைக் குறித்த்தான காரியங்களைப் பேசியிருப்பார்கள். அவர்களின் வார்த்தைகளின் வெற்றி உருவம் தான் சந்திரயான்–1. 2008 அக். 22ந் தேதி ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி மையத்திலிருந்து சீறிப்பாய்ந்து; சந்திரனுக்கு ராக்கெட் அனுப்பிய அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், சீனா போன்ற

நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இடம் பிடித்தது. நாங்களும் சாதனை செய்துவிட்டோம் என்று பெருமையடித்துக் கொள்ள இந்தியா இதைச் செய்யவில்லை; ஒரு பிரமாண்டமான தரிசனத்துடன் **(Vision)** இலட்சியத்துடன் இதைச் செய்தது.

ஏழை நாடு, கடன் கார நாடு, சாபம் பிடித்த நாடு என்றெல்லாம் பெயர் வாங்கிய இந்தியா என்ன பெரியதாக செய்து கிழித்துவிடப்போகிறது என்று நினைப்பவர்களுக்கு ... கிழித்துக் காட்டுகிறோம்; சாத்தானின் & சாபத்தின் முகத்திரையை! *"ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, .... இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாக பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார். 1 கொரி. 1: 27, 28, 29"*

சந்திரயானின் மொத்த செலவு 400 கோடி ரூபாய். 316 டன் எடையை கொண்ட இதன் பயண தூரம் 4 லட்சம் கி.மீ. புறப்பட்ட 18.2 நிமிடங்களில் பூமியின் சுற்றுப்பாதையை அடைந்தது. பிறகு தன்னிடமிருந்த ராக்கெட்டுகளை பயன்படுத்தி 3.80 லட்சம் கி.மீ. தூரத்திற்கு அப்பாலிருந்த சந்திரனின் சுற்றுப்பாதையில் செயற்கைகோளை செலுத்தியது. இந்த சந்திராயன்–1–ன் முக்கிய நோக்கம்? இது சந்திரனைக் குறித்ததான மர்ம முடிச்சுகளை கட்டவிழ்க்கும் என்று உலக விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். மின் பற்றாக்குறையால் அவதிப்படும் பூமியின் இருள் நீக்கி, பல நூற்றாண்டுகளுக்கு வெளிச்சம் தரும் திறன் பெற்ற ஹீலியம்–3 இருப்பை கண்டறிவது இதன் முக்கிய நோக்கமாகும். ஹீலியம்–3 மின் அணு உலையில் பயன்படுத்தப்படுகிறது. பூமியின் ஆற்றலுக்குத் தேவையான சக்தி இந்த ஹீலியம்–3ல் உள்ளது. இந்த ஹீலியம்–3 பூமியில் ஒரு சில கிலோக்கள் தான் உள்ளது, ஆனால் சந்திரனிலோ டன் கணக்கில் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (குறிப்பிட்ட காலத்துக்கு முன்பாகவே சந்திராயன் – 1 செயலிழந்தாலும்; அது அனுப்பப்பட்டதற்கான நோக்கத்தை நிறைவேற்றி விட்டுத்தான் ஒய்ந்தது.)

நான் இவ்வளவு வேகமாக சந்திராயன்–1ல் பயணித்ததற்கு சந்திரனைக் குறித்த ஆர்வம் காரணமல்ல, ஒரு முக்கியமான ஆவிக்குரிய சத்தியத்தை விளக்குவதற்காகத்தான்... தேவன் உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே நமக்காக ஏற்படுத்திய ஆசீர்வாதங்களை ஆவிக்குரிய ரீதியில் (கண்கள் காணக்கூடாத அளவில் – ஆவி ரூபத்தில்) உன்னதங்களில் வைத்தார். அதைப் பூமியில் வைக்க அப்போது பூமியும் இல்லை, கையில் வாங்க மனிதனும் இல்லை! நம் பிதாவாகிய தேவன் நம்மை இந்தப் பூமிக்கு வெறும் கையோடு அனுப்பவில்லை; நாம் பூமியில் வாழ்வதற்குத் தேவையான சகல வாழ்வாதாரங்களையும், ஆசீர்வாதங்களையும் ஏற்படுத்தி வைத்துவிட்டுத்தான் அனுப்பினார். நாம் பரம்பரை ஆண்டி அல்ல, பஞ்சத்தால் ஆண்டியாகிப் போனோம். எழுதியிருக்கிறபடி; *"தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளை கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ, தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்." 1 கொரி. 2: 9, 10*

தங்களுடைய முகவரியைத் தொலைத்துவிட்ட மனுக்குலம் 6500 வருஷங்களுக்கும் மேலாக அதைத் தேடி அலைந்து அவதிப்படுகிறது. சரியான அட்ரசைக் கண்டுபிடித்தவர்கள் அதைச் சொன்னாலும் நம்பத் திராணியில்லை. சாபத்தால் அலைக்கழிக்கப்பட்ட பூமியின் உருக்குலைந்த காட்சி... அதனால் மனிதனின் மனதில் விழுந்துபோன தவறான வரைபடங்கள். ஒரு சில வரைபடங்களைப் பார்க்கலாம்: பிரசங்கி (சாலோமோன்) சாபம் விழுந்து போன பூமியின் காரியங்களை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு, இதுதான் தேவன் மனிதனுக்கு நியமித்த வாழ்க்கை என்று நினைத்து பல காரியங்களை எழுதுகிறார். *"சூரியனுக்கு கீழே... எல்லாம் வருத்தத்தினால் நிறைந்திருக்கிறது; ... மனுபுத்திரர் கடுந்தொல்லையில் அடிபடும்படிக்குத் தேவன் அதை அவர்களுக்கு நியமித்திருக்கிறார் (!) பிர. 1: 3, 13."*

பழைய உடன்படிக்கையின் காலத்தில், சாத்தான் தோற்கடிக்கப்படாத சூழ்நிலையில்,

இயேசு வெளிப்படாத காலங்களில் சாலமோன் ராஜா இப்படியாகப் புலம்பினார்... பரவாயில்லை, சகித்துக் கொள்ளலாம். இந்தப் பிரச்சனைகளையெல்லாம் ஒன்று விடாமல் இயேசு சிலுவையில் மாற்றிய பிறகும் இதே புலம்பல்களைப் பாடிக்கொண்டிருப்பது... *"அவர்களுடைய மனது கடினப்பட்டது; இந்நாள்வரைக்கும் பழைய ஏற்பாடு வாசிக்கப்படுகையில், அந்த முக்காடு நீங்காமலிருக்கிறது; அது கிறிஸ்துவினால் நீக்கப்படுகிறது. 2 கொரி. 3:14."* அந்தப்படியே எங்களுடைய முக்காடு நீக்கப்பட்டது, மோசேயின் பழைய உடன்படிக்கையின் ஊழியத்தின் மூலமாக வந்த முக்காடு என்னை விட்டு அகன்று போயிற்று. மேகம் விலகிய பிறகு காணப்படுகிற பளிச்சென்ற நீல வானம் என் வசமாயிற்று, தேவனுடைய விரல்கள் அதில் எழுதிய இரகசியங்கள் எனக்கு வெளிப்பாடாக கிடைத்தது.

அந்த வெளிப்பாட்டின் அடிப்படையில் எனக்கு அறிவிக்கப்பட்ட காரியங்களில் ஒன்றுதான் தேவனிடம் கொட்டிக்கிடக்கும் ஆசீர்வாதங்கள். பலர் தேவனிடம் ஆசீர்வாதத்தைக் கேட்கும்போது பிசினித்தனம் செய்கிறார்கள்! ஒரு பழைய கார் தேவன் தந்தால் போதும் என்ற ஒரு தேவ பிள்ளையைப் பார்த்து அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை. நம் தேவனின் ஐசுவரியத்தைப் பற்றி ஓரளவுக்காவது தெரிந்திராததினால்தானே இப்படிப்பட்ட ஜெபங்கள்!

ஹீலியம்–3 ஒரு சில கிலோக்கள் மட்டுமே பூமியில் இருந்தாலும்; அது டன் கணக்கில் கொட்டிக்கிடக்கும் சந்திரனிலிருந்து அதை எப்படியாவது கொண்டு வந்துவிட வேண்டும் என்று ஆராய்ச்சி நடத்துகிறானே அவன் ஆவிக்குரியவனா? இல்லை... இந்த ஆராய்ச்சியாளர்களுக்கு தேவனையும் தெரியாது... அவரையே போலிருக்கிற மனிதனையும் தெரியாது! உள்ளான கண்காணாத ஆவி மனிதன்தான் உண்மையான மனிதன் என்ற இரகசியமெல்லாம் இவர்களுக்குத் தெரியாது. ஆவி உருவத்தில் இருக்கிற மனிதன் தங்கியிருக்கும் பூமிக்குரிய ஒரு கூடு (கூடாரம்) தான் சரீரம் என்ற அடிப்படை இரகசியம் கூட தெரியாதவர்கள் தான் இவர்கள். சரீரத்தையே மனிதன் என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கும் தேவனைத் தெரியாத மனிதனுக்கு இருக்கும் அபாரமான தரிசனத்தை சற்று கவனியுங்கள்... இந்தப் பூமியின் சகல ஆற்றலுக்கும் தேவையான ஹீலியம்–3ஐ அதிக அளவில் பெற்றுக்கொள்வதற்காக ஒரு பக்கம் 110 டிகிரி வெப்பமும் மறுபக்கம் 0 டிகிரிக்கும் குறைந்த குளிரைக் கொண்ட சந்திரனோடு மல்லுக்கு நிற்கிறான்... இதற்காக கோடிக்கணக்கில் உலக நாடுகள் பணத்தைப் பணமென்று பார்க்காமல் செலவழிக்கின்றன.

உன்னதங்களில் கோடி கோடியான ஆசீர்வாதங்கள் குவிந்து கிடக்கின்றன. அதுவும் நமக்காகத்தான் வைக்கப்பட்டிருக்கின்றன. அதை எடுத்துக் கொள்வதற்கேதுவான வசதிகளையும் தேவன் செய்து விட்டார். பூமியின் மீது தோன்றிய, தோன்றிக்கொண்டிருக்கிற முக்கால மனிதர்களுக்கும் ஆளுக்கொரு பூமியைக் கூட தேவன் கொடுக்கலாம்... அவருடைய சொத்து ஒன்றும் குறைந்துவிடப்போவதில்லை! அப்படியிருந்தும் அறியாமையினால் மனிதன் பூமியில் இருக்கிற காரியங்களையே 6500 வருஷங்களாக **recycling** செய்து பூமியைச் சீர்கேடடைய வைத்துவிட்டான். *எல்லாம் வருத்தத்தினால் நிறைந்திருக்கிறது; அது மனுஷரால் சொல்லிமுடியாது; ... பிர. 1:8. ... குறைவானதை எண்ணி முடியாது பிர. 1:15.*

சந்திரனுக்குப் போய் இத்தனை கஷ்டப்பட்டு ஹீலியம்–3ஐ கொண்டு வரத்தான் வேண்டுமா? பூமியில் இருப்பதை வைத்து வாழ்ந்துவிட்டு போய்ச் சேர வேண்டியதுதானே? பூமிக்குத் தேவையான ஆற்றலுக்காக போராடி இவன் சாதிக்கப்போவது என்ன? என்று சொல்லி சலித்துக் கொள்ளத் தோன்றுகிறது. ஒரு தீவிர வளர்ச்சியடைந்த மிருகம் என்று அறிவியல் ரீதியாக தன்னைப் பற்றி தவறாக நினைத்துக் கொண்டிருக்கும் மனிதன், தானாக உருவானதாக நினைத்துக் கொண்டிருக்கும் பூமிக்காக இந்த அளவுக்கு அர்ப்பணம், தியாகங்கள், முயற்சிகள் செய்ய முன் வருவானானால் ... ?

தேவனுடைய சாயலாக படைக்கப்பட்டு அவரைப் போலிருக்கிறோம் என்ற சத்தியத்தை அறிந்த நாம், பூமியை தேவன் அஸ்திபாரப்படுத்தினார் என்பதை அறிந்த நாம்; நமக்காகவும், இந்த பூலோகத்துக்காகவும் ஏன் உன்னத ஆசீர்வாதங்களை சுதந்தரிக்க முயற்சிக்கக்கூடாது? ஹீலியம்–3ஐ கொண்டு வர வேண்டும் என்று யாரும் மாம்சீக மனிதனைக்

கட்டாயப்படுத்தவில்லை, கொண்டு வரவில்லையென்பதால் யாரும் அவனைக் கொல்லப் போவதும் இல்லை, என்றாலும் ஒரு எதிர்பார்ப்போடு, திருப்தியில்லாத மனதோடு, வானத்தை நோக்கி முன்னேறத் துடிக்கிறான்!

ஆவி மனிதர்களோ தரையில் குழிதோண்டி பல்லாங்குழி ஆடிக்கொண்டிருக்கிறார்கள்! இயேசு போதுமே, இரட்சிப்பு போதுமே, பரலோகம் போனால் போதுமே என்று பாடிக்கொண்டு, வாழ்க்கையின் முடிவை எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள். இரட்சிக்கப்பட்டவுடனே எல்லோரும் பரலோகம் போய்விட்டால்; இந்த பூலோகத்தில் தேவனுடைய சித்தத்தை செய்து முடிக்க யாரும் இருக்க மாட்டார்கள். இன்னும் இரட்சிக்கப்படாமல் இருக்கும் மனிதர்களால் பூலோகம் இன்னும் மோசமாகி போகும். பூலோகத்தை அம்போ என்று விட்டுவிட்டு ஓடத் துடிக்கும் சுய நல நோக்கத்துக்காக தேவன் நம்மை இரட்சிக்கவில்லை.

இரட்சிக்கப்படும்போது நமக்கு பரலோக வாசல் திறக்கிறது; உள்ளே நுழைந்து சகல உன்னத ஆசீர்வாதங்களையும் அள்ளிக் கொண்டு வந்து; பூமியின் மீது கொட்டி மீண்டும் பூமியை ஆதி நிலைக்கு உருட்டிக்கொண்டுப் போக வேண்டும் என்பது தான் நம்மைப் பற்றிய தேவனுடைய திட்டம். ஆனால் நாம் இந்த காரியங்கள் எதையுமே தெரிந்து கொள்ளாமல் பூமியோடு உருண்டு எங்கோ வந்துவிட்டோம். இப்போதுதான் உணர்வு வந்திருக்கிறது. மிகவும் காலம் தாழ்த்திவிட்டோம், என்றாலும் பரவாயில்லை இனிமேலாவது தேவசித்தம் நிறைவேற்றத் திரும்புவோம். வாசல் (இரட்சிப்பு) வரை போய்விட்டு, உள்ளே நுழையாமல் வெளியேறிய விசித்திர கிறிஸ்தவர்களைப் போல் இனிமேல் நடக்காமல்; உள்ளே நுழைந்து கலக்கியவர்களை பின்பற்றுவோம்!

## கெட்டகுமாரர்களே, திரும்புங்கள்!:

பூமியில் பிறந்து, பல பிரச்சனைகளின் மத்தியில் வளர்ந்து, உழைத்து, அறிவைப் பிரயோஜனப்படுத்தி முன்னேறி, கோடிகோடியாக பணம் சம்பாதித்தவர்கள் கோடாகோடி! அவர்களெல்லோரும் உலக கோடீஸ்வரர்களின் பட்டியலில் இருக்கிறார்கள். அவர்கள் சம்பாதித்ததினால் கோடீஸ்வரரானார்கள். ஆனால் நான் அந்த **category** கிடையாது. இதுவரை சொல்லாத ஒரு விஷயத்தை இப்போது சொல்கிறேன், நானும் கூட கோடீஸ்வரிதான். கஷ்டப்பட்டு சம்பாதித்து இந்தப் பாக்கியத்தைப் பெறவில்லை, இந்த பாக்கியத்துக்குரியவளாகவே பிறந்தேன். **Yes**, நான் கோடீஸ்வரருக்குப் பிறந்ததினால் கோடீஸ்வரி! இந்த வெளிப்பாடு நம் எல்லோருக்கும் கண்டிப்பாகத் தேவை.

*"சேனாதிபதி பிதியுத்திரமாக: நான் மிகுந்த திரவியத்தினாலே இந்த சிலாக்கியத்தைச் சம்பாதித்தேன் என்றான். அதற்குப் பவுல்: நானோ இந்தச் சிலாக்கியத்திற்குரியவனாகப் பிறந்தேன் என்றான். அப். 22:28"* பரலோகத்தையும், அதன் விரிவாக்கமாக பூலோகத்தையும் தனது ஐசுவரியத்தினால் சிருஷ்டித்த நம் அப்பா (தேவன்) நம்மை இந்த பூலோகத்திற்குள் எப்படி வெறுங்கையோடு அனுப்பியிருப்பார்? பெற்ற மகளை திருமணம் செய்து கொடுக்கும் போது, கூடவே தன் தலையைக்கூட அடகு வைத்து, அவளுக்குத் தேவையான காரியங்களை சீர்வரிசையாக வாங்கி அனுப்பும் தகப்பன்மார்கள் நிறைந்த தேசத்தில் இருந்து இந்த புத்தகத்தை எழுதும் எனக்கு இதைப் பற்றி அதிக வெளிப்பாடுகள் உண்டு! டன் கணக்கில் ஆசீர்வாதங்களை வண்டியேற்றி அனுப்பினார்! ஆனால் எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு; தேவனுடைய மானம் மரியாதையையும் கெடுத்துவிட்டு தெருவில் நிற்கிறோம்!

**Sunday Class**-லும் **Church** பிரசங்கங்களிலும் இந்த கெட்ட குமாரனைப் பற்றி நிறையவே கேட்டுவிட்டோம். எவனோ ஒருவன் சொத்தை எழுதி வாங்கிக்கிட்டுப் போனானாம், கெட்டு சீரழிந்து பன்றி தவிடுகூட கிடைக்காமல் திருந்தி அப்பாவிடமே திரும்பி வந்தானாம். அதைப் பற்றி நமக்கென்ன என்று நினைத்துக் கொண்டு தூங்கிக்கொண்டிருப்பவர்களை தண்ணீர் தெளித்து எழுப்புகிறோம். கிறிஸ்துவுக்குள்ளான சகோதர, சகோதரிகளே! அந்த கெட்ட குமாரன் (குமாரர்கள்!) வேறு யாரோ அல்ல... நாம்தான்!

## ஓர் புதிய பார்வை (A new view) :

லூக்கா 15–ம் அதிகாரத்தில் வரும் இந்த சம்பவம் சிறுவர்களுக்குக்கூட தெரிந்த

கதை; ஆனால் பெரியவர்கள் கூட அறியாத சத்தியம்! "ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். அவர்களில் இளையவன் ... தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான்; அந்தப்படியே அவன் அவர்களுக்கு ... பங்கிட்டுக் கொடுத்தான்." தேவன் நமக்கென்று உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே சகல ஆசீர்வாதங்களையும் ஆயத்தம் செய்து; அவற்றை உன்னதங்களில் வைத்துவிட்டார் என்று பார்த்தோம். இளையவன் தன் தகப்பனிடம் தனக்கென்று தேவன் வைத்திருந்த ஆஸ்தியைத்தான் கேட்டான், அவன் தவறு எதுவும் செய்யவில்லை. தேவன் நமக்கென்று வைத்திருக்கும் ஆசீர்வாதங்களைக் கேட்பதற்கு எந்தவித தயக்கமோ, யோசனையோ தேவையில்லை. நமக்குரியதைக் கேட்கிறோம், தேவன் தந்து தான் ஆகவேண்டும். அதுமட்டுமல்ல தேவனுக்கு அவை தேவை இல்லை... தேவன் தனக்கென்று எதையும் வைத்துக் கொண்டதாக வேதத்தில் இல்லவே இல்லை. தன்னுடைய ஒரே ஒரு செல்லப்பிள்ளை உட்பட எல்லாவற்றையும் தந்துவிட்டார்! பரலோகத்தையே **empty** ஆக்கி (காலியாக்கி) எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, பரலோகத்தின் அதிபதியே நமக்காக இந்தப் பூமியின் மீது இறங்கினார்! ஆவியான தேவன் மண்ணான பூமியில் தங்க முடியாது என்பதால் மனுஷரூபத்தில் இறங்கினார்.

"... இளையமகன் ... தூரதேசத்துக்குப் புறப்பட்டுப்போய், ... துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப் போட்டான்." ஏதேனின் ஆசீர்வாதங்கள் முற்றிலும் அழிந்து, இப்போது மனிதன் பஞ்சப் பரதேசியாக ஆகிப் போன கதையைச் சொல்ல வருகிறோம். மனிதனின் பாவத்தால் வந்த சாபம் இந்த பூமியை ஆக்கிரமித்து அழித்த சோகக்கதையைதான் பரிசுத்தாவியானவர் இங்கே சொல்ல வருகிறார். ஏதேனின் சூழல், அதன் ஆசீர்வாதங்கள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக உருமாறி, நிறம் மங்கி, அழிந்து, மாயையாகிப் போனது. இப்போது ஆதியாகமத்தை வாசிக்கும் போது மனிதனின் இருதயத்தில் எஞ்சி நிற்பது; முடிவுற்ற ஏதேனின் சோக நினைவுகள் மாத்திரமே!

"... எல்லாவற்றையும் ... செலவழித்தபின்பு, ... தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று ... அவன் குறைவுபடத் தொடங்கி, ... குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக்கொண்டான். அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான். ... பன்றி ... தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான், ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை." ஆதி மனிதனுக்கு என்ன நடந்தது? என்பதைத்தான் பரிசுத்தாவியானவர் இங்கே வெளிப்படுத்துகிறார். சின்னப்பிள்ளைகளுக்கு "சன்டே கிளாசுக்கு" கதை வேணுமே என்று இது இங்கே எழுதப்படவில்லை.

ஏதேனின் தேவன் மனிதனுக்குக் கொடுத்த சொகுசு வாழ்க்கையை வாசிக்கும்போது; அது என்னவோ கதை போல தோன்றுகிறது, உண்மை என்று நம்பக்கூட முடிவதில்லை. அந்த அளவுக்கு 6500 வருஷங்களாக பூமியின் சாபம் மனுக்குலத்தை மாயைக்குள் தள்ளிவிட்டிருக்கிறது. ஒரு பக்கம் சாபம், இன்னொரு பக்கம் சாத்தான். இவ்விதமாக இரண்டு கைகளையும் கோர்த்தபடி மனிதன் வாழ பழகிப் போனான். இந்த பூமியினாலும், சாத்தானாலும் உண்டான பாவ சந்தோஷங்கள்கூட அவனுக்குச் சரிவர கிடைக்கவில்லை! சினிமாவுக்குப் போக, சிகரெட் வாங்கக்கூட கையில் காசில்லை! ஒரு சாதாரண உலக மனிதன் நடத்தும், தேவனைச் சாராத சராசரி வாழ்க்கையை நடத்தி முடிக்கக்கூட அவனுக்குத் திராணியில்லை! மனிதனின் பிழைப்பு நாய்ப்பிழைப்பாகிப் போனது (இல்லை, பன்றிப் பிழைப்பாகிப் போனது) மிருகங்களின் மனநிறைவு கூட இல்லை, பாவபாரத்தால் தொங்கிப் போன இருதயம்!

"அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்கு பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன்." தேவபிள்ளைகளின் அறியாமை இங்கே வெளிப்படுத்தப்படுகிறது. உலகத்தார், தேவனை அறியாத வேற்று மதஸ்தர்கள், தேவனே இல்லையென்று சொல்பவர்கள் எல்லோரும் **max.** நன்றாக, செல்வ செழிப்புடன், சுகத்துடன், பலத்துடன், செழிப்புடன் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் வேதம் கூலிக்காரர் என்றுதான் அழைக்கிறது! பிரசங்கி கூட இந்த காரியத்தைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லியிருக்கிறார். *வேலைக்காரர் குதிரைகள்மேல் ஏறிப்போகிறதையும், பிரபுக்கள் வேலைக்காரர்போல் தரையிலே நடக்கிறதையும் கண்டேன். பிர. 10:7* இங்கே பிரபுக்கள் என்ற வார்த்தை, தேவனை அறிந்த, இரட்சிப்படைந்த விசுவாசிகளை,

சபை ஜனங்களை குறிக்கிறது. பிரபுவுக்கு (Lord) ஒப்பீடான நான், வெயிலில் குடையைப் பிடித்தபடி கால் வலிக்க நடக்கும்போது; உரசியபடி செல்லும் கார்கள். max. தேவபிள்ளைகளுக்குரியதல்ல என்று அதிலிருக்கும் வாசகங்களை வைத்துக் கண்டுபிடிப்பேன். சாலையில் ஓடும் வாகனங்களின் (2 or 4 wheeler) மோட்டார்களின் இயக்க அளவீட்டை Horse-power என்று குறிப்பிடுவது தெரிந்த ஒன்றுதான். அதைத்தான் பிரசங்கி இங்கே குறிப்பிடுகிறார் என்பது அநேகருக்குத் தெரியாத ஒன்று.

நாம் யார்? எப்படி இருந்தோம்? எப்படி உருவாக்கப்பட்டோம்? என்பதை ஆராய்ந்து வருகிறோம். இப்போது நாம் எப்படி இருக்கிறோம்? ஏன் இப்படி நடந்தது? என்னவாச்சி நமக்கு? என்பதையும் ஆராய்ந்து வருகிறோம். இனி என்ன செய்வது? இனிமேல் என்ன நடக்கும்? என்பதையும் விளக்கி வருகிறோம். நடந்தது நடந்து விட்டது, தேவனைப் போல சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் பிசாசைவிட கேவலமானவனாகிப் போனான். என்றாலும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. ஏகப்பட்ட வாசல்களைத் தேவன் திறந்து வைத்திருக்கிறார். Exit (வெளியேறிச் செல்) என்ற எழுத்துக்கள் வாசல்களின் மேல் மின்னிக் கொண்டிருக்கின்றன. முதலில் இந்த கேவலமான, அவமானம் நிறைந்த இந்த வாழ்க்கையை விட்டு வெளியேறுவோம்.

பெயர்க்கிறிஸ்தவளாக இருந்த நான், நியாயப்பிரமாணத்திற்குள் வந்து; சாபத்தின் பிடியில் இருந்து தப்பிக்க வழி தெரியாமல் திண்டாடித் தவித்த போது; ஒரு புதிய உடன்படிக்கையின் பிரசங்கத்தைக் கேட்டேன். அவர் கிறிஸ்துவின் புதிய பிரமாணத்தை பிரசங்கித்துக் கொண்டிருந்தார். நியாயப்பிரமாண உபதேசங்களால் ஆன பாலைவனத்தில் நடந்து கொண்டிருந்த எனக்கு; பாலைவன நீரோடையாக அது காட்சியளித்தது. தண்ணீரை அள்ளி முகத்தில் தெளித்துக்கொண்டேன், புத்தி தெளிந்தது! "அவனுக்கு புத்தி தெளிந்தபோது" ... அர்த்தம் புரிகிறதா? பாலைவன நீரூற்றாக இந்தப் புதிய உடன்படிக்கையின் உபதேசம் உங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. புத்தியைத் தெளிவித்துக் கொள்ளுங்கள்.

கெட்டகுமாரன் மீண்டுமாக தன் தகப்பனாரிடம் வருவதைப் பார்க்கிறோம். நம் அப்பாவையும், அப்பா வீட்டையும், அங்கே இருக்கும் தங்கப்புதையல்களையும் விட்டு எங்கெங்கோ வந்து விட்டோம், பாதையைத் தவறவிட்டுவிட்டோம். வழி தெரியாததினால் தெரிந்த வழியில் நடந்தோம். அதற்கேற்றபடி வாழ்க்கையை அமைத்துக் கொண்டோம். தேவாலயங்களில் போய் பழைய திராட்சை ரசத்தை வாங்கிக் குடித்தோம். வேறு வழியில்லை, புதிய திராட்சை ரசத்தை கொடுக்க ஆளில்லை. பழைய திராட்சை ரசம் புளித்து, போதை தலைக்கேறியதுதான் மிச்சம். இதோ, புதிய திராட்சை ரசத்தைத் தருகிறோம், வாங்கிக்கொள்ளுங்கள்.

*... நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் ... துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம். 1 கொரி. 5: 7, 8.*

திரும்பி வந்த தன் குமாரனுக்கு தகப்பனார் (அப்பா) வைத்திருந்த காரியங்கள் என்னென்ன? உயர்ந்த வஸ்திரம் – இயேசுவின் நீதி என்பது ஆவிக்குரிய அர்த்தம், நாம் நன்றாக உடுத்த வேண்டும் என்பதும் இங்கே பொருந்தும். வசனத்தில் இருக்கும் ஆவிக்குரிய காரியத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டு, அப்படியே விட்டுவிடக்கூடாது. நாம் சரீரத்தில் இருக்கிறோம், இந்தப் பூமியில்தான் வாழ்கிறோம். நம் ஆவி மனிதன் தங்கியிருக்கும் கூடாரமாக நம் சரீரம் இருக்கிறது. நாம் சரீரத்தில் எல்லா ரீதியிலும் நன்றாக இருந்தால் தான், நம் உள்ளான ஆவி மனிதன் அங்கே தங்கியிருக்க முடியும். சரீரத்தை நன்றாகப் பராமரிக்காமல் அதை வியாதியாலும், தரித்திரத்தாலும் மடிய விட்டோமானால்? நம் உள்ளான மனிதன் வெளியேறி தேவனிடம் போய்விடுவான், எச்சரிக்கை! நல்ல சாப்பாடில்லாமல், ஆடையில்லாமல், வியாதியோடு, அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கும் இந்த சரீரத்திற்குள் கிடந்து எத்தனை நாள்தான் மல்லுக்கட்ட முடியும்? பாவம் உள்ளான மனிதன், அவன் தேவனைப் போலிருக்கிறானே, இதெல்லாம் அவனுக்கு ஒத்துவராது!

மேலும் மோதிரம், பாதரட்சைகள், கொழுத்த கன்று, கீதவாத்தியமும் நடனமும். கவனியுங்கள், மோதிரம் (தங்கம்) விசுவாசத்தைக் குறிக்கிறது. புதிய கிறிஸ்துவின் பிரமாணமே விசுவாசத்தின் அடிப்படையில் ஆனது தான். விசுவாசத்துடன் நம் பிரச்சனைகளுக்குப் பரிகாரம் தரக்கூடிய வார்த்தைகளை, வேத வசனங்களில் இருந்து எடுத்து பேசிப்பேசியே அந்தப் பிரச்சனைகளை அழிப்பது. எழுத்தின்படியான அர்த்தம் தங்கத்தைக் (Gold) குறிக்கிறது. நம் சரீரமான கூடாரத்தில் தங்க நகைகள் போட்டுக்கொள்ள வேண்டும். திரும்பி (திருந்தி) வந்த மகனுக்கு அப்பா மோதிரத்தைப் போடச் சொன்னார். அப்படியானால் இதற்கு முன்பாக அவன் யார் சொல்லையோ கேட்டு கழட்டியிருக்கிறான் என்று அர்த்தம்! தவறான உபதேசங்களுக்கு (பரிசேயர் சதுசேயரின் புளித்தமாவு) எச்சரிக்கையாயிருங்கள். தங்கம் தவறல்ல, பொன் என்னுடையது என்றார் தேவன். தவறான ஒன்றை அவர் வைத்துக்கொண்டிருப்பாரா? என்னுடையதெல்லாம் உங்களுடையது என்றார். தப்பான ஒன்றை அவர் தருவாரா? விருப்பமில்லையென்றால் போட்டுக்கொள்ள வேண்டாம், ஆனால் அதை உபதேசமாக கொண்டுவராதிருங்கள். நீங்கள் தங்கம் போட்டுக்கொள்ளவில்லை என்பதற்காக அதைத் தவறு என்று உபதேசித்தால், அது வித்தியாசமான உபதேசம்.

*கால்களுக்கு பாதரட்சையைத் தருகிறார். சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை ... எபே. 6:15.* சுவிசேஷம் என்றாலே அது சமாதானத்துக்கடுத்தவைகளாக இருக்க வேண்டும். நாம் வியாதியில்லாமல், எந்தக் குறையுமில்லாமல், சகல சம்பத்துக்களோடு, ஒரு பரிசுத்த ஜீவியம் செய்தால் தான் சமாதானமாக இருக்க முடியும். தேவன் நம்மை திருத்துவதற்காக கையை காலை உடைப்பார்... கண்ணீரோடு, உபவாசத்தோடு முகங்குப்புற விழுந்து கிடந்தால் தான் தேவன் பதில் கொடுப்பார், சிலுவைகளைத் தூக்கிக்கொண்டு தான் நடக்க வேண்டும், வழியில் கல்லும் முள்ளும் உண்டு... வியாதியைப் பிரயோஜனப்படுத்தி தேவன் நம்மை உருவாக்குகிறார்... பணம் தேவையில்லை இதுபோன்ற பிரசங்கங்கள் சமாதானத்தை கெடுக்கிற சுவிசேஷம்! அடுத்தபடியாக எழுத்தின்படியான அர்த்தத்தைப் பார்ப்போம்.

*... உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார். யாத். 3:5.* ஏன் செருப்பைக் கழட்டச் சொன்னார்? அக்காலகட்டம் தான் காரணம். சாபம் விழுந்த பூமி, சாத்தான் தோற்கடிக்கப்படாத காலம், தேவன் மனிதனுக்குள் வந்து வாசம் செய்யவில்லை, ஏனென்றால் இயேசு வெளிப்படவில்லை. மனிதனின் பாவம் மன்னிக்கப்படவில்லை. அதனால் தேவனிடம் நெருங்கும் தகுதியை மனிதன் இழந்திருந்தான். அதனால் செருப்பை கழட்டிவிட்டு, சற்று தூரத்தில் நின்று கொள்ளும்படி, மோசேயினுடைய நன்மைக்காகத்தான் அப்படிச் சொன்னார். பாவம் தேவனுக்கு ஒவ்வாத காரியம், அவன் அருகில் வருவதால் செத்துப்போகக்கூடாதே என்ற அன்பினால்... கரிசனையினால்... அப்படிச் சொன்னார். ஆனால் புதிய ஏற்பாட்டில் காலச்சூழல் மாறிவிட்டதால் செருப்பை போட்டுக் கொள்ளலாம். *தூதன் அவனை நோக்கி ... உன் பாதரட்சைகளைத் தொடுத்துக் கொள் என்றான். அப். 12:8.*

ஆராதனை நேரத்தில் செருப்பை போடக்கூடாது என்றால்; எப்போதுமே போடக்கூடாது. ஏனென்றால் தேவன் இக்காலங்களில் மனுஷருக்குள் வாசம் செய்கிறார். அவர் நமக்குள்ளேயேதான் இருக்கிறார். அவர் எங்கும் போவதேயில்லை. அப்படியானால் நாம் செருப்பே போட முடியாதே! தங்கத்தைப் பற்றிய அதே பதில்தான் இதற்கும். ஆராதனை நேரத்தில் செருப்பைப் போட்டுக்கொள்ள விருப்பம் இல்லாவிட்டால் போடவேண்டாம். ஆனால் அதை உபதேசமாகக் கொண்டு வரக்கூடாது. இப்படிப்பட்ட உபதேசங்கள் இயேசுவினுடைய சுயாதீனப்பிரமாணத்திற்குள் வந்திருப்பவனை, மீண்டுமாக நியாயப்பிரமாணத்திற்குள் இழுக்கும் முயற்சி.

நம்முடைய சரீரம் ஒரு கூடாரம்தான், இது நிரந்தரமான ஒன்றல்ல. அரேபியர்கள் பாலைவனத்தில் தற்காலிகமாக ஒரு வீட்டை அமைப்பார்கள். மிக எளிமையானதாக அது இருக்கும், எரிமலை சீற்றம் ஆரம்பிக்கப் போகிறது என்ற அறிவிப்பு வந்தவுடன், கூடாரத்தைக் கழட்டி சுருட்டிக்கொண்டு இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடத்துக்குப் போய்விடுவார்கள். பவுல் 2 பேதுரு. 1:13ல் இந்த கூடாரத்தைப் (tabernacle - temporary habitation) பற்றித்தான்

பேசுகிறார். *“நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எனக்கு அறிவித்தபடி நான் என் கூடாரத்தை விட்டுப்போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து,”*

சிலகாலம் இந்தப் பூமியில் ஆவிக்குரிய மனிதனைத் தங்க வைப்பதற்காக உபயோகப்படுத்தப்படுகிற ஒரு தற்காலிக வீட்டை, பெரியதாக எண்ணி; உள்ளே தங்கியிருந்த ஆவி ரூப மனிதனை (அவன்தான் நிஜ மனிதன்!) கோட்டைவிட்டவர்கள் கணக்கிலடங்காதவர்கள். இயேசு மூலமாக புதிய நீதியின் பிரமாணம் தரப்பட்ட பிறகும்; இன்னும் நியாயப்பிரமாண சாப இருளுக்குள்; கண்தெரியாமல் தடவிக் கொண்டிருக்கும் விசுவாசிகளும் இதில் அடக்கம்!

அதற்காக சரீரத்தை எக்கேடோ கெட்டுப் போகட்டும் என்று நோயிலும், தரித்திரத்திலும் தவிக்க விடுவது தேவ சித்தமல்ல. பாவத்தோடு வாழ்ந்து, சாபத்தில் மரித்து, “அந்த நாலுபேருக்கு நன்றி” என்று பாடிக்கொண்டு அற்பாயுசில் கல்லறைத் தோட்டத்திற்குள் போவதும் தேவசித்தமில்லை. நாம் இந்த பூமியில்தான் இருக்கிறோம், மண்ணால் ஆன நம் மாம்ச சரீரம் மிக முக்கியமானது தான். ஏனென்றால் இந்தக் கூடாரத்திற்குள்தான் நாம் வாசம் செய்கிறோம். அதாவது ஆவி உருவத்தில் – மாம்ச கண்களால் பார்க்கக்கூடாத அளவில் வடிவமைக்கப்பட்ட நாம் இந்த மண்கூடாரமான சரீரத்திற்குள் தான் வசிக்கிறோம். நாம் தேவ சாயலில், தேவனைப் போலவே தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். *வேதம் நம்மை தேவர்கள் என்றும், தேவபுத்திரர்கள் என்றும் இயேசு என்றும்! (2 கொரி. 6:12)* அழைக்கிறது! நீங்க நினைக்கிற மாதிரி மனிதன் என்பவன் ஒரு சாதாரணமானவனல்ல. மனிதன் என்பவன் தேவனைப் போலவே இருக்கிற ஒரு ஆவி!

அதனால் அவன் தங்கியிருக்கும் கூடாரத்தைச் சுத்தமாக, அலங்காரமாக, ஒழுங்காக வைத்துக் கொள்வது மிக அவசியம் என்பது சொல்லித் தெரிய வேண்டிய விஷயம் அல்ல. தங்க நகைகள் போடுவது, விலையுயர்ந்த வஸ்திரங்கள் அணிவது, பூ வைப்பது, இன்னும் வேறெதையாவது செய்வது எல்லாம் கண்டிப்பாக அவசியம் என்று இங்கே நாங்கள் சொல்ல வரவில்லை. அது அவரவர் விருப்பத்தை, வெளிப்பாட்டைப் பொறுத்தது. ஆனால் இதெல்லாம் தவறு, இவற்றையெல்லாம் அனுபவிக்கக்கூடாது என்று உபதேசம் செய்வது கூடாது என்பதைத்தான் சொல்ல வருகிறோம். சந்தேகமா? பயமா? விருப்பமில்லையா? தாராளமாக இவற்றையெல்லாம் புறக்கணித்துவிடலாம். நாம் சுயாதீனம் உடையவர்கள், நமக்குக் கொடுக்கப்பட்டிருப்பதே சுயாதீனப் பிரமாணம் தான், (அதாவது விடுதலையின் பிரமாணம், உரிமைப் பிரமாணம்!) உலகத் தோற்ற முதற்கொண்டே ஆண்டாண்டு காலமாக தேவ ஜனங்களின் அறியாமையால் புறக்கணிக்கப்பட்ட உன்னத ஆசீர்வாதங்கள் எல்லாம் இன்று தேவனை அறியாத புறஜாதியாரின் எல்லைக்குள்! தேவன் நமக்கென்று ஆயத்தம் செய்து வைத்திருக்கும் உன்னத ஆசீர்வாதங்களை நம் அறியாமையினால் நாம் வேண்டாம் என்று புறக்கணிக்கும்போது, அதன் மேல் விருப்பம் வைக்காமல் அதை வெறுத்துத் தள்ளும்போது ... அது சாத்தானின் ஆளுகைக்குள்ளாக இருப்பவர்களின் எல்லைகளுக்குள்ளாகப் போய்விடுகிறது.

அங்கே போகும் நம்முடைய ஆசீர்வாதங்களுக்கு என்ன சம்பவிக்கிறது? *“... ஆரோன்: உங்கள் மனைவிகள் குமாரர் குமாரத்திகளுடைய ... பொன்னணிகளைக் கழற்றி, என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றான். ... கொண்டு வந்தார்கள். ... அவன் அந்தப் பொன்னை வாங்கி, ...ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான். அப்பொழுது: இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள். யாத். 32: 2–4”*

சிலருக்குப் புரியவில்லை, பொன்னை காணிக்கையாகக் கொடுக்கக்கூடாது என்று சொல்ல வரவில்லை. தாராளமாகக் கொடுக்கலாம், ஆனால் புதிய உடன்படிக்கையின் அடிப்படையில் கொடுக்க வேண்டும். பொன், பணம், எதுவானாலும் அதை பழைய உடன்படிக்கையினடிப்படையில் விதைக்கும் போது அதனால் மேற்சொன்ன காரியமோ, அல்லது வேறெதாவது பிரச்சனைகளோ நடக்கிறது. பெரும்பாலும் இந்தவிதமான காரியங்கள் நியாயப்பிரமாணம் சார்ந்த உபதேசங்கள் உள்ள சபைகளில் நடப்பதால்; இதைச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. மற்றபடி நாம் தேவனுக்காக எதை வேண்டுமானாலும், நமக்குள்ள

எல்லாவற்றையும் தாராளமாக, முழுமனதோடு, சந்தோஷமாக, தயங்காமல் கொடுக்கலாம்.

உன்னதங்களில் நமக்கென்று தேவன் வைத்திருக்கும் ஆசீர்வாதங்கள் எண்ணிக்கைக்கு அடங்காத அளவில் கொட்டிக் கிடக்கிறது. நாம் எவ்வளவு கொடுத்தாலும் அதனால் நமக்கு குறைந்துவிடப்போவதில்லை. அதே நேரத்தில் நாம் கண்டிப்பாக கொடுத்துதான் ஆக வேண்டும் என்ற கட்டாயமுமில்லை, அது பழைய உடன்படிக்கையின் நிர்ப்பந்தம். புதிய உடன்படிக்கையில் நிர்ப்பந்தமோ, கட்டாயமோ எதுவுமேயில்லை. தேவனுடைய ஆசீர்வாதங்கள் எல்லாமே இலவசம் தான். இரட்சிப்பு, சுகம், எப்படி இலவசமாக வருகிறதோ, அப்படியே பொருளாதார ஆசீர்வாதமும் இலவசமாகத்தான் வருகிறது.

பழைய உடன்படிக்கையில் கிரியை செய்தால் தான் ஆசீர்வாதம் என்ற முறைமை இருந்தது. அதனால் தசமபாகம் கொடுத்து (விதைத்து) ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார்கள். புதிய உடன்படிக்கையில் கிருபையால் ஆசீர்வாதம் வருகிறது. அதனால் இலவசமாகப் பெற்றுக் கொண்டு எதையும் எதிர்பார்க்காமல் விதைக்கிறோம். நாம் எதையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை, நமக்குத்தான் ஏற்கெனவே எல்லாம் உன்னதங்களில் இருக்கிறதே!

அப்படியானால் புதிய பிரமாண விதைப்பு என்பது “விசுவாசக் கிரியை” எனப்படுகிறது. கிரியையில்லாத விசுவாசம் செத்தது என்கிறது வேதம். விசுவாசம் என்பது ஒரு ஆவிக்குரிய காரியம், அது கண்களால் காணமுடியாத ஒன்று. நம்முடைய விசுவாசத்தை உலக ரீதியாக மாம்சீகக் கண்களால் காண வேண்டுமானால், அதற்கான ஒரே வழி அந்த விசுவாசத்தைக் கிரியையினால் வெளிப்படுத்துவதுதான். நம்முடைய விசுவாசத்தை நம்மைவிட்டு வெளியே கொண்டுவரும் ஒரு **container (bag, can, vessel, pouch, tank, holder, package, pan, etc)** போல நம்முடைய விசுவாசக் கிரியை செயல்படுகிறது. அதுமட்டுமல்லாமல் நாம் கொடுக்கும் போது; நம்மில் இருக்கிற தேவனுடைய தன்மையை, இயல்பை வெளிப்படுத்துகிறோம். ஒரு விதையை விதைக்கும்போது சில நாட்களில் அது முளைத்து வளர்ந்து நாளடைவில் விளைச்சலை, பலனைத் தருகிறது. இது இயற்கையில் நாம் காணும் பிரமாணம், தேவன் பூமியை பிரமாணத்தின் அடிப்படையில்தான் இயங்க விட்டிருக்கிறார். அந்த **principle**-ன்படி விதை முளைக்கிறது, அதே **principle**-ன்அடிப்படையில் நாம் விதைக்கும் காரியங்களுக்கும் நடக்கிறது. *“அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி. 9:7”* புதிய பிரமாணத்தின்படி விதைக்கிறவர்கள் இந்த வசனத்தின் அடிப்படையில் விதைக்கலாம். இது தொடர்பான காரியங்களுக்கு ஆவியானவர் ஆலோசனை தருவார்.

வீடு அல்ல, வீட்டிற்குள் வசிக்கும் மனிதன்தான் முக்கியம்; சரீரம் அல்ல அதன் உள்ளே வசிக்கும் ஆவி மனிதன் தான் முக்கியம். அதனால் மனிதனை கோட்டைவிட்டுவிடக்கூடாது அது மிக முக்கியம். மனிதனுக்கு என்று தேவன் ஏற்படுத்தியிருக்கும் ஆசீர்வாதங்களையும் கோட்டைவிட்டுவிடக்கூடாது. அதுவும் மிக மிக முக்கியம். நாம் பூமியின் மீது நற்காரியங்களை பிரசங்கித்து, தேவசித்தம் செய்து, மீண்டும் ஆதி நிலைமைக்கு பூமியைக் கொண்டுவருவதற்கு நம்முடைய விசுவாசம், விசுவாச வார்த்தைகளோடு கூடச் சேர்ந்து கிரியை நடப்பிக்கப்போவது நம்முடைய ஆசீர்வாதங்களே!

நல்ல குமாரனாக திரும்பி வந்த தன்னுடைய முன்னாள் கெட்டகுமாரனுக்காக தகப்பனார் கொழுத்த கன்றை அடித்து ஒரு பிரமாதமான விருந்துக்கு ஏற்பாடு செய்கிறார். நாம் நன்றாக சாப்பிட்டு, நன்றாக இருக்க வேண்டும் என்பது தான் தேவனுடைய சித்தம். அவருடைய சித்தத்தை செயல்படுத்துவதற்கேதுவாகவே திட்டங்களை அமைத்துள்ளார். அந்தத் திட்டங்களின்படியே உன்னதங்களில் ஆசீர்வாதங்களை குவித்துள்ளார். உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே ஆயத்தம்பண்ணப்பட்ட அந்தக் காரியங்களை நம் கண்கள் காணாதபடி, காதுகள் கேளாதபடி பூமியின் மாயை நம்மை மூழ்கடித்தது. *“நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; ... 1 கொரி. 2:10”*

*“... தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். 1 கொரி. 2:12”* பரிசுத்தாவி அபிஷேகம் நமக்கு

கொடுக்கப்பட்டிருக்கும் காரணத்தை அறிந்து கொள்ளுங்கள். ஆவியில் களிகூர்ந்து மகிழுதல், அந்நியபாஷை, வரங்கள் கிரியை செய்வது இதெல்லாம் அவசியம் தான். என்றாலும் பிரதானமானது அதுவல்ல என்பதை இந்த வசனம் நமக்குத் தெளிவாக்குகிறது. நாம் நன்றாக சாப்பிட்டு, திருப்தியடைந்திருப்பது தேவனுடைய சித்தம் என்பதையும் நாங்கள் அறிந்து கொண்டோம். உபவாசம் இருந்து, உடல் மெலிந்து, பலவீனமடைந்து, வியாதிப்பட்டு ஒடுங்கின நேரத்தில் இந்த வெளிப்பாடு எனக்குக் கிடைத்தது.

நமக்குள்ளாக வசிக்கும் தேவனோடு தொடர்பு கொள்ள, பட்டினிப் போராட்டம் நடத்த வேண்டிய அவசியமென்ன? பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவன் மனுஷருக்குள் வாசம் செய்யவில்லை. அப்போதிருந்த சூழ்நிலையே வேறு, தலைகீழ் என்று சொல்லலாம். அதனால் உபவாசித்தார்கள். சாம்பலில் உட்கார்ந்து, இரட்டுடுத்தி, தண்ணீர் கூட குடிக்காமல் துயரப்பட்டார்கள், அவர்களின் ஆவி ஒடுங்கிப் போனது. ஆனால் இயேசு இந்த பரிதாபக்காட்சியை சிலுவையில் மாற்றினார். *“சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்கு சாம்பலுக்குப் பதிலாக சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதில் ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாக துதியின் உடையையும் கொடுக்கவும் அவர் என்னை அனுப்பினார் ... ஏசா. 61:3”*

உபவாசத்திற்கு எதிராக நாங்கள் வரவில்லை... நன்றாக புசித்து குடித்து திருப்தியாக இருக்க வேண்டும் என்ற வாக்குத்தத்த ஆசீர்வாதத்திற்கு ஆதரவாகவே பேச வருகிறோம். *“... புசிக்கிறவன் தேவனுக்கென்று ஸ்தோத்திரஞ்செலுத்துகிறபடியால், கர்த்தருக்கென்று புசிக்கிறான்; புசியாதிருக்கிறவனும் கர்த்தருக்கென்று புசியாதிருந்து, தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறான். ரோம. 14:6”* வேதத்தில் இரண்டுமே இருக்கிறது; என்றாலும் **better and best choice** நம்முடையதாயிருக்கட்டும்.

உபவாசம் நல்லது தான்... உடலை அளவுடன் அழகாக வைத்துக் கொள்ள அது உதவி செய்கிறது. *சரீரமுயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; ... 1 தீமோத். 4:8.* உபவாசித்தால் ஜெபிப்பதற்கும், தேவனோடு தனித்திருப்பதற்கும் வசதியாக இருக்கிறது, தூக்கம் வராது என்கிறார்கள், நல்லது தாராளமாக செய்யலாம். நம் சாப்பாடு ஜெபத்திற்குத் தடையாக இருக்குமானால் அளவைக் குறைத்து சாப்பிடலாம்.

என்னுடைய அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன். நான் உபவாசித்து ஜெபித்து வந்த காலங்களில் உடல் அதிகமாக பலவீனமடைந்து, நோய்வாய்ப்பட்டேன். அந்நாட்களில் பழைய பிரமாணத்தின் அடிப்படையில்தான் என் உள்ளான மனிதன் விசுவாச தடகள போட்டியில் ஓடிக்கொண்டிருந்தான். பிரகாசமுள்ள மனக்கண்கள் இல்லாமல் இருந்தது, எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. முடியாமல் போனதால் உபவாசத்தைக் குறைத்து சுயமாக நிறுத்திக்கொண்டேன். நாட்கள் ஓடியது, நியாயப்பிரமாணத்தின் சாப இருள் சூழ்ந்திருந்த இருள் பகுதியில் ஒரு சூரியோதயம்! சிலுவையில் ஏற்படுத்தப்பட்ட புதிய உடன்படிக்கை சார்ந்த கிறிஸ்துவின் பிரமாணத்தின் வெளிச்சம் பிரகாசித்தது. கணுக்கால் அளவான ஆழம், முழங்கால் அளவுக்கு வந்தது; ஆவியானவர் என்னை கடக்கப் பண்ணினார். இடுப்பளவு ஆழத்தில் இருந்து மூழ்கும்படி இழுத்துக் கொண்டுப் போனார்.

*“இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது (ஏசா. 9:2) நிறைவேறும்படி இப்படி நடந்தது. மத். 4:15, 16.”* இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் பண்டிகையில் தேவாலயங்கள்தோறும் மேற்கோள் காட்டப்பட்டு பிரசங்கிக்கப்படும் இந்த வசனத்தின் அர்த்தம் இதுதான். பழைய பிரமாணத்தின்படி வாழ முடியாமல் அவதிப்பட்டு, தோற்றுப் போய் இருளில் மூழ்கியபடி கிடந்த ஜனங்களின் வாழ்க்கையில் ஒரு ஒளியூட்டுதலாக இயேசுவின் பிறப்பு அமைந்தது. புதிய கிருபை பிரமாணமே அந்த வெளிச்சம் என்பது இங்கே தெளிவாகிறது. மத். 4:14–ஐயும், ஏசாயா. 9: 1–4 யும் வாசித்துப் பார்த்தால் இந்த வசனம் வெறுமனே இயேசுவின் பிறப்பை மட்டும் குறிக்கவில்லை என்பது புரியும். நியாயப்பிரமாண இருளிலிருந்து கிறிஸ்துவின் புதிய பிரமாணம் – விசுவாச, கிருபை, நீதி பிரமாணம் ஒரு வெளிச்சமாக உதிப்பதை இங்கே பார்க்கிறோம்.

இப்படியாக, பூமியில் பிறக்கிற ஒவ்வொரு மனிதனும் பாவத்தில் பிறந்து, நியாயப்பிரமாணத்தில் வாழ்ந்து, தன்னை பெற்றெடுத்த தேவனை மறந்து எங்கெங்கோ அலைகிறார்கள். கெட்ட குமாரர்களுக்கு ஒப்பீடாக வரும் இவர்கள் எல்லோருமே மீண்டும் தன் தகப்பனிடம் திரும்பவில்லை. மிக மிக சொற்ப % தான் பரிசுத்தாவியானவரின் மூலமாக மயக்கம் தெளிந்து திரும்புகிறார்கள், மனம் திருந்திய மைந்தன் **list**- ல் சேருகிறார்கள். பெரும்பான்மையான **percentage** ஜனங்கள் தங்கள் தகப்பனிடம் இன்னும் திரும்பி வரவேயில்லை! பன்றி தின்னும் தவிடுகூட கிடைக்காமல் பஞ்சத்தில் செத்து மடிந்தார்கள். கொஞ்சம் பேருக்கு அந்த பன்றி தின்னும் தவிடு கிடைத்தது, ஆனால் அதைச் சாப்பிட முடியவில்லை! பரிதாபம், அவர்களும் செத்து மடிந்தார்கள்.

தனக்கு துரோகம் செய்து, ஏமாற்றிவிட்டுப் போன குமாரர்களுக்காக காத்திருக்கும் தேவன்! 99 ஆடுகளை வழியில் விட்டுவிட்டு காணாமல் போன ஒரு ஆட்டை தேடியலையும் இயேசு! திசை கெட்டுப் போன தேவ ஜனங்கள் மீண்டும் சரியான இலக்கை அடைவதற்காக; பூர்வபாதைகள் செப்பனிடப்படுகின்றன. வாருங்கள், ஆதி மேன்மையை பெற்றுக்கொள்ள!

## கண்காணாத உலகம்:

நாம் பிறந்து, வளர்ந்து, நினைவு தெரிய ஆரம்பித்த நாள் முதல்; நம் மாம்ச கண்களால் இந்த பூமியையும், அதிலுள்ள மனிதர்களையும், இயற்கையையும், சகல வஸ்துக்களையும் பார்த்து வருகிறோம். எல்லாவற்றையும் பார்க்க முடிவதால்; அவற்றை உண்மையென்று நம்புகிறோம், ஏற்றுக்கொள்கிறோம், அவற்றோடு சார்ந்து வாழப் பழகிக்கொள்கிறோம். மானுட வாழ்க்கையின் ஒரு சாதாரண சாராம்சம் இது. ஆனால் இதற்கு மேலாக நம்முடைய சிந்தனையை மேலேற விடுவதில்லை.

இப்போது, காணக்கூடிய அளவில் இருக்கும் இந்த உலகத்தை ஆளுகை செய்கிற கண்காணாத உலகத்தை நோக்கி நம் பார்வையை திருப்புவோம். நம்ப முடியாததாக இருந்தாலும்; இந்த சத்தியத்தைக் குறித்த ஒரு ஆராய்ச்சி மிகவும் அவசியம். அதாவது நம் கண்கள் காண்கிற இந்த பூமியையும், அதிலுள்ள எல்லாற்றையும் நம் கண்களால் காணமுடியாத ஒரு ஆவியுலகம் ஆளுகை செய்கிறது, **(domination)** அதாவது இயக்குகிறது என்று கூடச் சொல்லலாம். புயல் காற்றில் தூசி, வீட்டுக்கூரை, மரம், மட்டை எல்லாம் பறக்கிறது; ஆனால் அவற்றைப் பறக்கடிக்கிற காற்று கண்ணுக்குத் தெரிவதில்லை! ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும் என்பார்கள். தூக்க முடியாத அளவுக்கு கனமான அம்மியை பறக்கடிக்கும் காற்று அம்மியைவிட அதிக பலம், சத்துவம் வாய்ந்தது, ஆனால் கண்ணுக்குத் தெரிவதில்லை!

கண்களால் காண்கிற பொருட்களைவிட, கண்களால் காணமுடியாத காரியங்களுக்கு சக்தி, பலம், அதிகாரம் அதிகம் என்பதைப் புரிந்து கொள்வது இந்த **topic**-ன் (விஷயத்தின்) **basement** (அடித்தளம்). இது புரியாவிட்டால்; இந்த சத்தியத்தைக் குறித்ததான வேறெந்த காரியமும் விளங்காது. அதிக கவனத்தோடு பிரகாசமுள்ள மனக்கண்களுக்காக ஜெபித்துவிட்டு படியுங்கள். இந்த பூமிக்குரிய காரியங்களை, இந்த பூமிக்குரியதல்லாத காரியங்கள் ஆளுகை செய்கின்றன, தன்னுடைய **control**-ல் வைத்திருக்கின்றன, ஆட்டிப்படைக்கின்றன. இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் நாம் மாம்ச கண்களால் காணக்கூடிய பூமியின் வஸ்துக்கள் எல்லாவற்றையும்; நம் மாம்ச கண்களால் காணமுடியாத ஆவிக்குரிய காரியங்கள் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது! நம்பமுடிகிறதா?

தேவனுடைய சிருஷ்டிப்பில் மிக உன்னதமான ஒரு படைப்பு மனிதன் தான். அதனால் ஒரு மனிதனை வைத்தே இந்தக் காரியத்தை **Demonstrate** (நிரூபித்து) செய்து காட்டினால் எளிதாகப் புரியும். ஒரு மனிதன் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். இப்போது நாம் பார்ப்பது ஒரு மனிதனை அல்ல, மனிதனுடைய கூடாரத்தைத்தான் (சரீரத்தை). உண்மையான மனிதன் ஆவி ரூபத்தில் அதற்குள்ளாக இருக்கிறான். அவனைத்தான் உள்ளான மனிதன் **(inner man)** என்று வேதம் விளக்குகிறது. உள்ளான மனிதன் தான் உண்மையான மனிதன்; புரிய வேண்டும் என்பதற்காக மனிதன் என்ற வார்த்தைக்கு முன்னதாக “உள்ளான” என்ற பதம் சேர்க்கப்படுகிறது. ஏனென்றால் நாம் கண்களால் பார்க்கிற உடலைத்தான் மனிதன்

என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம், அது பழக்க தோஷமாகிவிட்டது.

அந்தப் பழக்கத்தை இங்கே மாற்றித்தான் ஆக வேண்டும்; இல்லாவிட்டால் ஒன்றும் புரியாது. சரீரத்திற்குள்ளாக வசிக்கிற மனிதன் என்ற அர்த்தப்படி உள்ளான மனிதன் என்று வருகிறது. அதற்காக சரீரத்தை வெளியான மனிதன் என்று அர்த்தம் எடுக்கக்கூடாது; சரீரம் மனிதனே அல்ல, அது மனிதன் வசிக்கிற ஒரு வீடு, அவ்வளவுதான். கண்களால் காணக்கூடிய இந்த சரீரத்தை பிறந்த நாள் முதல் இறக்கும் வரை உள்ளான மனிதன் தான் உள்ளே இருந்து இயக்குகிறான். அதாவது மனிதன் உடலை இயக்குகிறான். உள்ளான மனிதனை வேதம் ஆவி என்றும் அழைக்கிறது. அதாவது நாம் ஒரு ஆவி – ஆவி மனிதன் – அதாவது கண்காணா மனிதன்!

உங்களிடம் ஒருவர் வந்து மனிதனைப் பார்த்திருக்கிறாயா? என்று கேட்டால் என்ன நினைப்பீர்கள்? கேட்டவருக்கு பைத்தியம் பிடித்திருக்கிறது என்று முடிவு செய்து விடுவோம். இல்லை, அவர் புத்திசாலித்தனமாகக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்; அவர் தேவனையும், அவரைப் போலிருக்கும் மனிதனையும் நன்றாக அறிந்திருக்கிறார் என்று அர்த்தம். அவரை பைத்தியம் என்று நினைத்த நமக்குத்தான் புத்தியில் பிரச்சனை!

நாம் கண்களால் காணக்கூடிய சரீரத்தை, கண்களால் காணமுடியாத உள்ளே இருக்கிற ஆவி மனிதன் தன் **control**-ல் வைத்து **regulate** செய்கிறான் என்பது நம்பமுடியாத உண்மை, ஆனால் நம்ப வேண்டிய சத்தியம். உள்ளான ஆவி மனிதன்தான் இந்த மாம்சமும் இரத்தமுமான சரீரத்தைப் பாதுகாத்து, பராமரித்து, வளர்த்து, இயங்கவைத்து, பூமியில் வாழ வைத்து வருகிறான்! உள்ளேயிருந்து ஆவி மனிதன் சரீரத்தை இயக்காவிட்டால் இந்த சரீரத்தால் இருக்க முடியாது, அசைய முடியாது, பிழைக்க முடியாது, எதுவுமே செய்ய முடியாது, செத்த பிணம் தான்! இப்போது புரிந்திருக்கும்.

சரீரத்தில் இருந்து மனிதன் வெளியேறும் போது; – ஆவி வெளியேறும்போது – உள்ளான ஆவி மனிதன் வெளியேறும்போது ... என்ன நடக்கிறது? அந்த சரீரம் செத்த பிணமாக மாறுகிறது! அதுவரை மனிதன் என்று அறியாமையினால் அழைக்கப்பட்டு வந்த அந்த சரீரம் பிரேதமாக மாறுகிறது! ஆவி மனிதன் உள்ளேயிருக்கும் வரைதான் அந்த சரீரத்திற்கு மதிப்பு, மரியாதையெல்லாம். அவன் வெளியே போனபின்பு சரீரத்திற்கு எந்த வேலையும் இந்த பூமியில் இல்லையே? அதனால் மனிதன் வெளியேறிய பிறகு கூடாரம் அழுக ஆரம்பிக்கிறது – கெட்டுப் போக ஆரம்பிக்கிறது. பிறந்தது முதற்கொண்டு 70 வருஷங்களாக சரீரத்தை கெட்டு அழுகிப்போகாமல் பாதுகாத்து வந்தான் அந்த ஆவி மனிதன். அவன் போனபிறகு ஒரு நாளைக்கு கூட தன்னை அழுகாமல் பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை அந்த சரீரத்தால்! ஒன்றிரண்டு மணி நேரங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமானால் கூட குளிர் சாதன வசதி **(Freezer Box)** வேண்டியதிருக்கிறது. என்ன ஒரு ஆச்சரியமான காரியம்? இதை நீங்கள் என்றைக்காவது யோசனை **(realize)** செய்ததுண்டா?

நாம் மனிதனை ஆவியாக அறியாமல்; மாம்சத்தின்படி அறியும் காரியம் பழகிப்போய்விட்டது. *“... இதுமுதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும்; இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம். 2 கொரி. 5:16.”* என்று பவுல் சொல்வது இந்தக் காரியத்தைதான். ஒரு மனிதனைப் பார்த்ததும் நமக்குத் தெரிவது அவனுடைய **personality** தான். அந்த மனிதன் உருவ அமைப்பு, நிறம், உயரம், பெயர், அவனைக் குறித்ததான ஒரு சில காரியங்கள், அவனுடைய தனித்தன்மைகள், படிப்பு, வேலை, பணபலம், ஒப்பனை **(make up)** இயல்புகள், பழக்க வழக்கங்கள் இப்படியான காரியங்களை வைத்து இவன்தான் மனிதன் என்று முடிவு செய்கிறோம்; உலகமும் அதைத்தான் ஆமோதிக்கிறது. உலகின் தலைசிறந்த விஞ்ஞானிகள், அறிவாளிகள், ஞானிகள், முதல்தரவாதிகள் கூட மனிதனை மாம்சத்தின்படிதான் அறிகிறார்கள்.

இயேசுவை ஏற்று இரட்சிக்கப்பட்டு, ஆவியின் அபிஷேகம் பெற்று, ஆவியானவரால் நடத்தப்படுவதாக நம்புகிற நியாயப்பிரமாண விசுவாசிகூட மனிதனை மாம்சத்தின்படிதான் அறிந்து வைத்திருக்கிறார்கள். விசுவாச பிரமாணத்தின்படி நடக்கிற நமக்கோ இந்த வெளிப்பாடு கிடைத்திருக்கிறது. இனிமேல் மனிதனை ஆவியின்படி அறிவோம். மனிதன் ஆவியாக

இருப்பதால்; ஒரு மனிதன் இன்னொருவனை ஆவியின்படி அறிவதுதான் பொருத்தமாக இருக்கும், அதுதான் சரி, எளிதானதும் கூட.

சரீரத்தை மனிதன் என்று நினைத்து; அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, போற்றி, பாதுகாத்து, அலங்கரித்து ... இதெல்லாம் வேண்டாம் என்றும் சொல்ல வரவில்லை. சரீரத்தை பேணுதல், பாதுகாத்தல், அலங்கரித்தல் மிக அவசியம். தேவ சாயலான ஆவி மனிதன் குடியிருக்கும் வீடு அது, அதனால் இவையெல்லாம் நிச்சயம் அவசியம். ஆனால் எது முக்கியம் என்ற கணக்கீட்டில் தான் கோட்டைவிட்டு விடுகிறார்கள். உள் ஆவி மனிதன், வெளிச் சரீரத்தை ஆளுகை செய்வதால்; முதலில் உள்ளான ஆவிக்குரிய மனிதனை கவனிப்பது, பாதுகாப்பது, அலங்கரிப்பது மிக அவசியம். உள்ளான மனிதன் எல்லாவற்றிலும் **perfect** ஆக (குறைவற்றவனாக – பூரணமடைந்தவனாக) இருப்பானானால்; நிச்சயம் அவன் வெளி மனிதனான சரீரத்தை மிகச் சரியாக ஆளுகை செய்வான். இதில் எந்த சந்தேகமும் இருக்க வேண்டியதில்லை. உள்ளான மனிதன் (ஆவி) சரியாக இருந்தாலே வெளி மனிதன் (சரீரம்) அலங்காரமாக, சுகமாக, நன்றாக, பரிசுத்தமாக, வெற்றியாக, எல்லாவற்றிலும் பூரணத்துவம் உள்ளவனாக, குற்றம் குறைவு இல்லாதவனாக காணப்படுவான் என்பது சர்வ நிச்சயம்.

காய்ச்சல் என்று போகும் மனிதனை, தொட்டுப் பார்க்கும் டாக்டர், சுடுகிறது என்று சொல்லி ஐஸ் கட்டியை வைத்து ஒத்தடம் போடுவதில்லை. அவனுக்கு என்னப் பிரச்சனை என்பதை முதலில் ஆராய்கிறார். முதலில் அவனுடைய **temperature** (உடல்சூடு) கணக்கெடுக்கப்படுகிறது. அடுத்ததாக இதயத்துடிப்பு (நாடித்துடிப்பு) அளவிடப்படுகிறது. **Thermometer** (உஷ்ணமானி – வெப்பத்தை அளவீடு செய்யும் இயந்திரம்), **Stethescope** (மார்புகூட்டுக்குள் சத்தங்களை சோதிக்கும் கருவி) ஆகியவை தேவைப்படுகிறது. வியாதியஸ்தனிடம் அவனுக்கு வந்திருக்கும் காய்ச்சல் தொடர்பான சில அல்லது பல கேள்விகள் கேட்கப்படும். தேவையானால் இரத்தப் பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை, அந்த பரிசோதனை, இந்தப் பரிசோதனை என்று மணிபர்ஸ் காலியாகும் அளவுக்கு பரிசோதனைகள் செய்யப்படுகின்றன (மணிபர்ஸ் காலியான பிறகு அந்த மனிதன் கடன் வாங்க, அல்லது வங்கியில் பணம் எடுக்க ஓடுவது... இப்படி பல காரியங்கள் மருத்துவருக்குத் தெரியாமல் நடக்கும்).

பரிசோதனையின் முடிவு தெரியும் வரை காத்திருக்க வேண்டும். வந்த பிறகு, அதைப் பார்த்துவிட்டுதான் மருத்துவர் மருந்து மாத்திரைகள் எழுதிக் கொடுப்பது, ஊசி போடுவது போன்ற காரியங்களுக்குள் கடந்து போவார். இத்தனையையும் செய்ய மருத்துவருக்கு அவருடைய மருத்துவ கல்வி உதவி செய்கிறது. நோயாளியைப் பார்த்தவுடன் அவனுடைய வெளித்தோற்றத்தை வைத்து உடனே எதையாவது முடிவு செய்து “எடுத்தோம் கவிழ்த்தோம்” என்று மருத்துவம் பார்ப்பாரானால் ... நோயாளி **out!** மருத்துவர்? **knock-out!**

மனிதனின் வெளித்தோற்றத்தை (சரீரத்தை) மாத்திரம் பார்த்துவிட்டு, இவன்தான் மனிதன் என்று முடிவு செய்தது தான் மனிதனின் தோல்விகளுக்கும், பிரச்சனைகளுக்குமான முக்கியமான காரணமாகும். ஒரு மனிதனின் பழக்க வழக்கங்கள், அவனுடைய பாவங்கள், அல்லது நல்ல காரியங்கள், அவனுக்கிருக்கும் பிரச்சனைகள் இவைகளை வைத்தே அவனை முடிவு செய்கிறோம், அவனை நெருங்குகிறோம், பேசுகிறோம், இன்னும் பல ரீதிகளில் செயல்படுகிறோம். உதாரணமாக ஒரு மனிதன் குடிக்கிறான் என்றால்; உடனே அவனுக்கு குடிகாரன் என்ற பெயர் மாற்றம் செய்துவிடுகிறோம். அவனை அருவெறுப்புடன் பார்ப்பது, விலகி கண்டு கொள்ளாமல் செல்வது, திட்டுவது, அடுத்தவரிடம் குறை சொல்வது, புரணி பேசுவது, புரளி கிளப்புவது வரை போகிறது.

இங்கே குடிக்கிற நபர் செய்கிற தவறைவிட, அவரை விமரிசனம் செய்த நபரே அதிகப்படியான தவறைச் செய்கிறார்! மதுபானத்திற்கு அடிமையாக இருக்கும் நபர், (அதாவது உள்ளான ஆவி மனிதன்) சாத்தானின் ஆளுகைக்குட்பட்டு, அவனுக்கு அடிமையாய் இருப்பவர். அதனால் அந்த அடிமைத்தன ஆவி மனிதனால்; சரீரத்தை சரியானபடி ஆளுகை செய்ய முடியவில்லை. அதனால் சரீரம் தன்னுடைய உள்ளான மனிதனின் ஆணைக்கேற்றபடி நடந்து கொள்கிறது, அதாவது குடிக்கிறது! மனிதனை பாவத்திற்குள் வைத்திருக்கும் சாத்தானின்

அணுகுமுறை இது!

நாம் அவன் குடிக்கிறான் என்பதைத்தான் பார்க்கிறோமே தவிர, அதற்கான காரணி உள்ளே இருந்து இயங்குகிறான்; அவன் கண்களால் காணக்கூடாதவன் என்பதை அறியாமல் இருக்கிறோம். ஏனென்றால் உள் மனிதனுக்கு என்ன சம்பவித்திருக்கிறது என்பதை ஆராய்ந்து அறியக்கூடிய **X'ray** கண்கள் (பவுல் சொல்லும் பிரகாசமுள்ள மனக்கண்கள்) நமக்கு இல்லாமல் போனதுதான். உள்ளே ஆவி ரூபத்தில் இருக்கும் மனிதன் குடிவெறி என்ற பாவ நோய்க்கிருமியால் தாக்கப்பட்டிருக்கிறான். அதனால் முதலில் நாம் கவனித்து சிகிச்சை கொடுக்க வேண்டியது ஆவி மனிதனுக்குத்தான். அதைவிட்டுவிட்டு கூடாரத்தை திட்டி, அடித்து, அவனுக்கு **counselling** கொடுப்பதாலோ, அவன் குடிப்பழக்கத்தை விட்டு வெளியே வரப்போவதில்லை.

*"சமாதானமில்லாதிருந்தும் சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள். எரே. 6:14."* சபைகளில் இந்த வேலைதான் **99%** நடந்து வருகிறது. உண்மையான மனிதனுக்கு என்ன நடந்தது என்று அறியாமல்; சரீரத்தோடு மல்லுக்கட்டி, போராடி, ஏதோ ஒரு **ointment**-ஐ (தோல் மீது பூசும் மருந்து) பூசி தற்காலிக சுகத்தைக் கொடுத்து விடுகிறார்கள். கொஞ்சம் காலத்திற்கு சுகமானது போலத்தான் தோன்றியது; ஆனால் காலப்போக்கில் வேறொரு இடத்தில் முன்னிருந்ததை விட பெரியதான அளவில் அதே தோல் வியாதி தோன்றியிருந்தது!

விசுவாசியின் பிரச்சனைகளை ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் சோதித்தறியாமல்; மாம்சீகக் கண்களால் காணும் காரியங்களின் அடிப்படையில் பிரச்சனைகளை முடிக்க முயற்சிப்பதுதான் சபையின், ஊழியங்களின், ஊழியர்களின் **drawback** ஆக இருந்து வருகிறது. விசுவாசியின் ஆவி மனிதனின் வளர்ச்சி, தேவனைக் குறித்து அவனுக்கிருக்கும் அறிவு எதையும் கணக்கெடுக்காமல்; வியாதிகளை சுகமாக்குவது, பிசாசுகளைத் துரத்துவது, பிரச்சனைகளுக்காக தலையில் கை வைத்து ஜெபிப்பது, கடிதம் மூலம் ஜெபக்குறிப்புகளை அனுப்பச் சொல்வது, தொலைபேசி ஜெபங்கள் ... இப்படியாக மேற்பூச்சு வேலைகள் மும்முரமாக நடந்துவருகிறது. தேவனைக் குறித்த அறிவு (முழுமையாக) **absolute zero-** வாகிப் போனது.

*"அவர்களை (பரிசேயர்) விட்டுவிடுங்கள், அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்; குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே என்றார் (இயேசு). மத். 15:14".* குருடர்களால் வழிநடத்தப்பட்ட குருடர்கள் குழியில் விழுந்து கிடக்கிறார்கள். அவர்களைக் குழியில் இருந்து வெளியே தூக்குவது தான் புதிய உடன்படிக்கையின் ஊழியம். ஒருகாலத்தில் குழியில் கிடந்து வெளியே தூக்கப்பட்டவர்கள்தான் நாங்கள்; தானாக ஏறிக்குதித்து வெளியே வந்துவிடவில்லை. எங்கள் குருட்டுக் கண்கள் திறக்கப்பட்டன; தானாக திறந்து கொள்ளவில்லை! நாங்கள் பெருமை பாராட்டுகிறோம் என்று தவறான எண்ணங்கள் ஏற்படாதபடிக்கு இதை எழுதுகிறேன். பரிசேயர் என்பவர்கள் அக்கால யூத மதத்தலைவர்கள் **(a member of an ancient Jewish religious group)** நியாயப்பிரமாண பாரம்பரியங்களை சார்ந்து ஊழியம் செய்பவர்கள். மனிதன் ஆவியாயிருக்கிறான் என்ற உண்மை நிலை தெரியாமல்; வெறும் கூடாரத்திற்கு (சரீரத்திற்கு) ஊழியம் செய்பவர்கள். கால்களை கழுவுதல், சட்டிபானைகளைக் கழுவுதல், உபவாசம், தசமபாகம், பண்டிகை கொண்டாடுவது போன்ற காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து; ஆவியாயிருக்கிற மனிதனை "அம்போ" என்று தவிக்க விட்டுவிட்டவர்கள்.

அப்படி தவித்து அலைகின்ற உள்ளான மனிதர்களுக்குத்தான் புதிய உடன்படிக்கையின் ஊழியம். காரணம் நாங்கள் மனிதர்களை ஆவியின்படி அறிந்திருக்கிறோம். வெளிச் சரீரத்திற்கு நாங்கள் ஊழியம் செய்வதில்லை, ஏனென்றால் நாங்கள் மனிதர்களை மாம்சத்தின்படி அறிவதில்லை. நம்முடைய கூடாரம் என்பது வெறும் மாம்சமும் ரத்தமும் தான்; இதற்கு ஊழியம் செய்து எந்த பிரயோஜனமும் இல்லை. *"சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது; அழிவுள்ளது அழியாமையை சுதந்தரிப்பதில்லை. 1 கொரி. 15:50."* பரலோகத்தை சுதந்தரிக்காத காரியத்திற்காக ஊழியம் செய்வதால், காலமும், நம் அபிஷேகமும், தேவனுடைய கிருபையும்

விரயமாவதுதான் மிச்சம்.

பரலோகம் ஒரு ஆவி உலகம், மாம்சமான சரீரம் அங்கே போக முடியாது. அதனால் அங்கே போகும் தகுதி படைத்தது எதுவோ, அதற்கு ஊழியம் செய்ய வேண்டும். பரலோகம் போகும் தகுதி படைத்தது மனிதனின் ஆவிதான், சரீரம் அல்ல. எப்போது பார்த்தாலும் சரீரத்தை பூசி மெழுகிக் கொண்டிருப்பதால் எதுவும் ஆகப்போவதில்லை. ஆவி உருவத்தில் சரீரத்திற்குள் மறைந்திருக்கும் மனிதனுக்கு ஊழியம் செய்ய வேண்டும். அதற்காக சரீரத்தை எக்கேடோ கெட்டுப்போகட்டும் என்று விட்டுவிடச் சொல்லவில்லை; புரிந்து கொள்ளாமல் எதையெதையோ பேசித் திரியக்கூடாது. எது முக்கியம் என்று தான் இங்கே சொல்ல வருகிறோம்.

ஆவி உலகம் கண்களால் காணக்கூடிய உலகத்தை ஆளுகை செய்கிறது என்று பார்த்தோம். அதாவது பரலோகம் பூலோகத்தை ஆளுகிறது. இதே அலைவரிசையில் வாருங்கள், புரியும்! ஆவியாயிருக்கிற மனிதன், தான் தங்கியிருக்கிற காணக்கூடிய அளவில் உருவாக்கப்பட்டிருக்கும் சரீரமாகிய கூடாரத்தை ஆளுகை செய்கிறான். இதை **Demonstrate** (செயல்முறை விளக்கம்) செய்தும் காண்பித்தோம். ஆவியாய் இருக்கிற மனிதன் நன்றாக இருந்தால் சரீரமும் நன்றாகத்தான் இருக்கும். நன்றாக இருக்கிற மனிதன் சரீரத்தை நன்றாகத்தான் ஆளுகை செய்வான். அப்படி செய்யும் போது சரீரம் எந்த குறையுமின்றி, நோய் நொடியில்லாமல், பலவீனமில்லாமல், அழகாக, புஷ்டியாக, செழிப்பாக, அலங்காரமாக, ஐஸ்வரியமாக, பரிசுத்தமாக, ஆவியின் கனிகளுடன் இருக்கும், இதில் எந்த சந்தேகமும் இல்லை.

*“... உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி (prosper and be in health) வேண்டுகிறேன். 3 யோ. 1:2.”* ஆத்துமா என்பது ஆவிமனிதனில் இணைந்துள்ள ஒரு ஆவிக்குரிய பகுதி. இந்த பூமியில் ஆவி மனிதன் வந்து இறங்கிய நாள் துவங்கி (பிறந்த நாள் துவங்கி) அவன் வாழ்க்கையை முடித்து மீண்டும் பரலோகத்துக்கு வரும் நாள் வரைக்கும் (மரணமடையும் வரைக்கும்) நடக்கின்ற காரியங்களை (**consciousness, thought, feeling, and will**) பதிவு செய்து வைக்கும் ஒரு பகுதியாகும். ஆவியான மனிதன் சரீரத்தின் மூலம்தான் இயங்குகிறான். நல்லதோ கெட்டதோ எதையும் சரீரத்தின் மூலமாகத்தான் செய்கிறான். அதாவது ஆவி மனிதன் தன்னை வெளிச்சரீரத்தின் மூலமாகத்தான் உலகத்துக்கு காட்டுகிறான், நிரூபிக்கிறான், வாழ்கிறான். எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருக்கும் ஆத்துமா என்ற நினைவு மண்டலம் (மனம்) அவற்றையெல்லாம் பதிவு செய்துக் கொண்டே இருக்கிறது. மனிதனின் வாழ்க்கையைக் குறித்ததான ஒரு **report** தயார் செய்கிறது.

வேதத்தில் ஆவி என்று சொல்லப்படும் பதம் மனிதனைக் குறிக்கிறது, அதாவது ஆவி மனிதனை. *“மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். ரோ. 8:13.”* ஆவியினால் (ஆவி மனிதனால்) சரீரத்தின் செய்கைகளை அழிக்க முடியும் என்பது வசனத்தில் தெளிவாக இருக்கிறது. ஆவி மனிதன் சரீரத்தை பாவம் செய்யாதபடி சரிசெய்து, பாதுகாக்க முடியும் என்று பார்க்கிறோம். இந்தக் காரியத்தை ஆவி மனிதன் எப்படி செய்வான்? வசனத்தால் – வசனம் சார்ந்த வார்த்தைகளால்தான்! பேசிப்பேசியே நம்மை **correct** பண்ண வேண்டும், **correction** செய்ய வேண்டும்!

## கண்காண்கின்ற பூமியில் இயங்குகிற கண்காணாத காரியங்கள்!:

நாம் வசிக்கிற இந்த பூலோகத்தின் சகல காரியங்களும் கண்களால் காணக்கூடிய வகையில் இருக்கின்றன. அவற்றை நாம் பார்க்கிறோம், தொட்டு உணர்கிறோம், அனுபவிக்கிறோம். நாம் கண்களால் காண்கிற சகல காரியங்களும் கண்காணாத ஒரு இடத்திலிருந்து, அதாவது பரலோகத்திலிருந்து வந்தது, உருவானது என்பதை பார்த்தோம். உலகமும், விஞ்ஞானமும் இதை ஒத்துக் கொள்வதில்லை. நமக்கு அந்த ஆவிக்குரிய உலகத்தைப் பற்றியதான வெளிப்பாடு (பரிசுத்தாவியானவரால் வெளிப்படுத்தப்படும் இரகசியங்கள்) கிடைத்திருப்பதால் இவற்றை நம்புகிறோம். “ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால்,

அவைகளை அறியவுமாட்டான். 1 கொரி. 2:14".

இந்த பூமியும் அதன் நிறைவும் காணப்படாத ஒரு உலகத்தில் இருந்து தோற்றுவிக்கப்பட்டதால் (வெளி வந்ததால்); காண்கிற இந்த பூமியை விட, இந்தப் பூமியை நிர்மாணித்த ஆவிக்குரிய உலகம் அதிகம் உயர்ந்தது, சக்திவாய்ந்தது, மகத்துவமானது, வல்லமையுள்ளது, அதிக நிச்சயமானது என்று அறிகிறோம். பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும் எது உருவாக்கியதோ, அது நிச்சயம் இந்த பூமியைவிட எல்லா ரீதியிலும் பெரியதாகத்தான் இருக்க முடியும் என்பதை நாமே நிதானிக்கலாம். "... காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். 2 கொரி. 4:18"

இந்த வெளிப்பாட்டை மனிதர்கள் அறிந்து கொள்ள முடியாதபடி சாத்தான் **maximum** தடை செய்கிறான். என்றாலும் **minimum** கூட்டத்தாரால் இந்த புதிய உடன்படிக்கையின் இரகசியம் ஒரு கொள்ளை நோயைப் போல பரவி வருகிறது!

இந்தப் பூமியை உருவாக்கிய ஆவிக்குரிய உலகமான பரலோகமும், அதன் அதிபதியான பிதாவாகிய தேவனும் + இயேசுவும் + பரிசுத்தாவியானவரும்; இந்த பூமியின் காரியங்களைவிட அதிக நிச்சயமானவைகள்(வர்கள்), நித்தியமானவைகள்(வர்கள்). காண்கிற இந்த பூமியில் இயங்கிக்கொண்டிருக்கும் கண்காணாத ரீதியிலான 3 காரியங்களைப் பார்க்கப் போகிறோம். முதலாவதாக மனிதனைப் பார்ப்போம்!

## 1. மனிதன் - ஆவிக்குரியவன்!:

மனிதன் ஒரு ஆவி என்பது தெரியும். கண்காண்கிற இந்த பூமியில்; கண்களால் காணமுடியாத ஆவி மனிதர்களாகிய நாம் நடமாடி வருகிறோம்! மனிதன் ஆவிக்குரியவன், அவன் உலக ரீதியிலான மிருகங்கள், மரங்கள், மலைகள், தண்ணீர் போல வடிவமைக்கப்படவில்லை. மனிதனை கண்களால் நாம் காணுவதற்குக் காரணம்; அவன் தங்கியிருக்கிற இந்த கூடாரத்தின் வடிவமைப்புத்தான்! மனிதனுக்கு மண் சரீரத்தைக் கொடுக்காமல் பூமியின் மீது நடமாட விட்டிருந்தால் அவனுடைய நிலைமை மிகவும் பரிதபிக்கப்படக்கூடியதாக இருக்கும். (விதைகள் பகுதி –4 / "கண் காணா மனிதன்")

கண்களால் காண முடியாத ஆவி மனிதனின் உடம்பு ஒளிபுகக்கூடியதாக இருக்கும். காற்றைப் போல ஒளிவிலகு விகிதமுடைதாக அவன் இருப்பதால் அவனை யாராலும் பார்க்க முடியாது. அதாவது பூமியில் உள்ள ஜீவ ஜந்துக்களால் அவனை பார்க்க முடியாது. கண்ணிலுள்ள படிகவில்லையும் (**lens**), கண்திரவமும், இன்னும் ஒருசில பகுதிகளும் அதில் விழும் பிம்பம் விழித்திரையின்மீது உருவாகும்படி ஒளியை விலகச் செய்கின்றன. ஆனால் ஆவிமனிதனின் கண்ணின் விலகுவிகிதமும், காற்றின் விலகு விகிதமும் ஒன்றாக இருப்பதால், ஒளிவிலகல் உருவாகாது. அதனால் ஒளிக்கதிர்கள் ஒரு புள்ளியில் குவியாது. ஆவிமனிதனின் கண்களில் நிறம் இல்லாததினால் ஒளி ஊடுருவிப் போய்விடும். இந்தக் கண்ணினால் ஆவிமனிதனின் மனதில் எந்தவித பிம்பத்தையும் உருவாக்க முடியாது, அதை மூளைக்கு அனுப்பவும் முடியாது. புரிகிறதா? ஆக... ஆவி மனிதனுக்குக் கண்தெரியாது!

இதேபோல் அடுக்கடுக்காக **disadvantages (not helpful or favourable)!** ஆவிக்குரிய ரீதியில் மனிதன் இந்த பூமியில் உலாவினான் என்றால் ... அவனால் எதுவும் செய்ய முடியாது, வாழ முடியாது, தேவனுடைய சித்தத்தை இந்தப் பூமியில் நிறைவேற்ற முடியாது, ஆளுகை செய்ய முடியாது, கனி கொடுக்க முடியாது, விதைக்க முடியாது ... அதனால்தான் சரீரம் என்ற அமைப்பைத் தேவன் தெரிந்தெடுத்தார். ஆவி மனிதன் இந்த சரீரத்திற்குள் இருந்தபடி பூமியைத் தொடர்பு கொள்கிறான். *நம்முடைய சரீரம் பல ஆச்சரியங்களை உள்ளடக்கியது. அதில் சில: ஒரு வருடத்தில் நமது கல்லீரல் 23 பால் லாரிகளை நிரப்பக்கூடிய அளவுக்கு ரத்தத்தை வடிகட்டுகிறது. மனித உடலில் 50 லிட்டர் தண்ணீர் உள்ளது, இது உடலில் 60 சதவிகிதம் ஆகும். நம் இருதயம் 1 நாளைக்கு 14,000 லிட்டர் ரத்தத்தை 1,68,00,000 மைல் நீள இரத்தக்குழாய்களின் வழியே பரவச் செய்கிறது. இதனால் உருவாகும் சக்தி 80,000 கிலோ எடையுள்ள பொருளை பூமியிலிருந்து ஓரடி உயரம் தூக்க போதுமானது. நம் வாழ்நாள்*

*முழுவதிலும் நம் இருதயம் 200,00,00,000 முறை துடிக்கிறது, 50,00,00,000 லிட்டர் இரத்தத்தை உடலுக்குள் பாய்ச்சுகிறது. சராசரியாக உடல் முழுவதிலும் 50,00,000 உரோமங்கள் இருக்கும். மூளையின் அடிப்பகுதியில் காணப்படும் பட்டாணி அளவே உள்ள பிட்யூட்டரி சுரப்பி 50,000 நரம்புகளுடன் தொடர்பு கொண்டு; உடல் வளர்ச்சியை கட்டுப்படுத்துகிறது. ஒரு தீப்பெட்டி அளவுடைய நம் உடலின் எலும்பு 9 டன் எடையை தாங்கும் அளவுக்கு உறுதியானது! "நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் **(curiously wrought - made carefully or decoratively)** உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. சங். 139:15"*

சரீரம் இந்த அளவுக்குச் சிக்கலானதாக, நுண்ணியமானதாக, துல்லியமானதாக, மிகவும் பிரமிக்கத்தக்க விதத்தில் வடிவமைக்கப்பட்டிருப்பதற்கு காரணம் என்ன? இவ்வளவு வேலை செய்தால்தான் ஆவி மனிதன் சரீரத்தின் வழியாக பூமியோடு தொடர்பு கொள்ள முடியும். சரீர மனிதன் தனக்குள் தங்கியிருக்கும் **original** (அசல்) ஆவி மனிதனைத் தாக்குப் பிடிக்கவும் முடியும். விண்வெளிக்குச் சென்று ஆய்வுகள் செய்யும் விண்வெளி விஞ்ஞானிகள் அணியும் ஒரு உடையின் விலை 40 கோடி ரூபாய்! யம்மாடியோவ்! என்ன செய்வது இவ்வளவு சிக்கலான ரீதியில் வடிவமைக்கப்பட்ட உடையை அணியாவிட்டால் அவர்களால் விண்வெளியிலோ, சந்திரனிலோ **stand** பண்ண (நின்று, நிலைத்திருந்து வேலை செய்ய) முடியாது; அல்லாடி, அழிந்து, தூள்தூளாக சிதறி, காற்றாய் கரைந்து போய்விடுவார்கள்! மனிதனின் கூடாரத்தை பாதுகாப்புடன் சந்திரனில் நிலைநிறுத்த இத்தனை தொழில்நுட்பமுள்ள, இத்தனை விலைமதிப்புள்ள ஒரு விண்வெளி உடை அவசியமாயிருக்கிறது. அப்படியிருக்க கண்களால் காணமுடியாத ஆவி உருவத்திலிருக்கும் ஒரு மனிதனை; கண்களால் காணக்கூடிய பூமியில் பாதுகாப்புடன் நிலைநிறுத்த வேண்டுமானால்; அவனுக்கென்று தயாரிக்கப்படுகிற கூடாரம் எத்தனை அதிக தொழில் நுட்பத்துடன், எத்தனை விலைமதிப்புள்ளதாக இருக்க வேண்டும் என்பதை ஒரு நிமிடம் யோசித்துப் பார்ப்போம் ... ரூ. 40,00,00,000 க்கு பக்கத்தில் இன்னும் எத்தனை "0" க்கள் போடவேண்டியதாயிருக்குமோ?

சீனா, விண்வெளிக்கு வீரர்களை தேர்வு செய்து அனுப்ப 100 விதிமுறைகளை விதித்துள்ளது. அவற்றில் சில: பல் சொத்தை இருக்கக் கூடாது, தலைமுறை நோய்கள், அலர்ஜி, வியர்வை நாற்றம், சைனஸ், போன்றவை இருக்கக்கூடாது! பார்ப்பதற்கு கெம்பீரமாக, கவர்ச்சியாக இருக்க வேண்டும். விண்வெளிக்குப் பயணம் செய்ய அவர்களின் கணவன், அல்லது மனைவி சம்மதிக்க வேண்டும்! ஆனால் நம் தேவன் நம்மை இந்த பூமிக்கு அனுப்பும் போது எந்த **condition**-ம் போடவில்லை, போட வேண்டிய அவசியம் இருக்கவில்லை. காரணம், தேவன் மனிதனை எந்தக் குறைபாடும் இல்லாமல்தான் அனுப்புகிறார். பூமிக்கு வரும் மனிதனுக்கு கூடாரம் (சரீரம்) உருவாக்கப்படும் போதுதான் பிரச்சனைகள் உருவாகின்றன. கருப்பைக்குள்ளேயே பிரச்சனைகள் ஆரம்பிக்கின்றன. கருவில் ஒரு மனிதனை சுமக்கும் பெண்ணின் சரீரம், தனக்குள் உள்ள வியாதிகளால், அல்லது மனக்குழப்பங்களால், பொருளாதார பிரச்சனைகளால், கவலைகளால், இப்படிப்பட்ட உலக ரீதியிலான துன்ப துயரங்களால் தாக்கத்துக்குள்ளாகிறது. அவைகளால் கரு பாதிக்கப்பட்டு பிறவி ஊனங்களோடு குழந்தை பிறக்கிறது. **(Physically, Mentally, Sexually).**

அது மட்டுமல்ல, வியாதிகளின் தாக்குதல், விபத்துக்கள், உலகத்தின் சாபசூழ்நிலைகளின் தாக்குதல், பாவத்தால் சின்னாபின்னமாகும் உடல் ... எது எப்படியிருந்தாலும் மனிதன் அவற்றையெல்லாமல் சுமந்து கொண்டு வாழ்ந்து கொண்டேதான் இருக்கிறான். மட்டுமல்ல, அவற்றை அவன் **challenge** ஆக எடுத்துக்கொண்டு சாதனை செய்யவும் முற்படுகிறான், முயற்சிக்கிறான், எதிர்நீச்சல் போடுகிறான், அவன் ஜெயிக்கிறானோ இல்லையோ அது பிரச்சனையில்லை. ஆனால் ஜெயிக்க வேண்டும், சாதிக்க வேண்டும், முன்னேற வேண்டும், நன்றாக இருக்க வேண்டும் என்ற ஆர்வம் இறுதி மூச்சுவரை இருந்து கொண்டேதான் இருக்கிறது.

ஆவியான மனிதன் தன்னை இந்தப் பூமியில் நிலைநிறுத்த பெரிய போராட்டமே நடத்த வேண்டியதாயிருக்கிறது. ஆவி மனிதன் இந்த பூமியில் வாழ, தேவனுடைய சித்தம் செய்ய அவனுக்கு உதவி செய்வது அவனுடைய மண்ணான சரீரம்தான். வேறு எந்த வழியிலும்

அவனால் இந்த பூமியில் நடமாட முடியாது, கிரியைகள் நடப்பிக்கவும் முடியாது. அப்படி முயற்சிப்பானானால் எல்லோரும் பேய் வருகிறது என்று அலறியடித்துக் கொண்டு ஓடுவார்கள். பாவம் ஆவி மனிதன் வாழ்நாள் முழுவதும் வியாதி பிடித்த, தரித்திரம் பிடித்த, பாவம் செய்கிற, சாபத்தை சுமக்கிற, அழுது ஒப்பாரி வைக்கிற சரீரத்தோடு அல்லாடுகிறான். தேவனை அறிந்து கொள்ளாத மனிதன் எப்படியோ ஒரு வழியாக வாழ்ந்து முடித்து ஓய்கிறான். மண்ணான கூடாரம் ஓட்டை விழுந்து, பாழடைந்து, கூரை பிய்ந்து, கதவு உடைந்து நின்று கொண்டிருக்கிறது. ஒரு **earth-quake!** சுவரில் கீறல்கள் விழுகின்றன, வீடு கிடுகிடுவென்று ஆடுகிறது, கடைசியில் டமால்! வீடு இடிந்து விழுந்து தரைமட்டமாகிறது. உள்ளே இருக்க முடியாத ஆவி மனிதன் வெளியேறியே ஆக வேண்டிய நிலை. அவனுக்கு சரீரத்தை விட்டு வெளியேற விருப்பம் இல்லாவிட்டாலும், வெளியேறியே ஆக வேண்டிய நிர்ப்பந்த சூழ்நிலை! சோகம் படிந்த முகத்துடன் சரீரத்தை விட்டு எழுந்து மேலே எழும்பிப் போகிறான் புகை போல!

இப்படி ஒரு அர்த்தமே இல்லாத வாழ்க்கையை வாழ்ந்துவிட்டுப் போக தேவன் நம்மை அனுப்பவில்லை. வாழ்க்கையின் அர்த்தத்தை அறிந்து கொண்டு, தேவன் நியமித்த இந்த வாழ்க்கைக்கு சரியானதொரு எல்லையை அமைப்போம். தேவன் கொடுத்த கணக்குக்கு சரியான விடையை கண்டுபிடித்து எழுதுவோம். தொடர்கதைக்கு மிகச்சரியானதொரு முடிவைக் கொடுப்போம். ஆட்டம் **draw-** ல் முடியாமல் பார்த்துக் கொள்வோம். வெற்றியும் தோல்வியும் உலக வீரனுக்கு அழகாயிருக்கலாம்; ஆனால் வெற்றி மட்டுமே ஒரு கிறிஸ்தவ விசுவாச வீரனுக்கு அழகு!

## செய்ய வேண்டியது:

ஆதி. **3**–ம் அதிகாரத்தை திறந்து வைத்துக் கொள்ளுங்கள், நீங்கள் கொஞ்சமும் எதிர்பாராத ஒன்று நடக்கப் போகிறது. கவனியுங்கள்: ஏதேன் தோட்டத்தில் ஏவாள் தனியாக உட்கார்ந்திருக்கிறாள்; சாத்தான் வருகிறான். சாத்தான் ஏவாளிடம்: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ? என்றான். ஏவாள் பதிலேதும் சொல்லாமல் சாத்தானை மேலும் கீழுமாகப் பார்க்கிறாள்... போய் ஆதாமைக் கூட்டிக்கொண்டு வந்துவிடுகிறாள். சாத்தான் இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை! இது என்ன புதுக்கதையாக இருக்கு? ஒரு ஏமாந்த சோணகிரி ஏவாளையல்லவா எதிர்பார்த்து வந்தேன்! கெம்பீரமாக நின்று கொண்டிருந்த ஆதாமைப் பார்த்தவுடன் சாத்தானுக்கே பல் டைப் அடித்தது!

ஆதாம் சாத்தானை பார்த்து மிக அலட்சியமாக என்ன விஷயம்? என்றான். ஏவாளிடம் கேட்ட அதே கேள்வியை உளறிக்கொட்டியபடி சாத்தான் மீண்டும் கேட்டான்? ஆதாம் கோபத்தை அடக்கியபடி சொன்னான்... எங்களுக்கும் ஆண்டவருக்கும் நடுவில் ஆயிரம் இருக்கும், ஆயிரம் விஷயங்கள் பேசிக்கொள்வோம், அதெல்லாம் உனக்குத் தேவையில்லாத விஷயம் என்றான்! மூக்குடைந்தான் சாத்தான்! என்றாலும் விடாப்பிடியாக சும்மா, தெரிஞ்சுக்கலாமேன்னு தான் கேட்டேன் என்றான். ஆதாம் பதிலேதும் சொல்லாமல், ஏவாளின் கையைப் பிடித்து கடகடவென்று இழுத்துக்கொண்டு தன் எல்லைக்குள் போய் கதவு போலிருந்த ஒரு அமைப்பை பூட்டிவிட்டான். அசடு வழிந்தது சாத்தானுக்கு! வழிந்த அசடு தரையைத் தொடுமுன்பாக அதை எடுத்து தோள்மீது போட்டுக் கொண்டு, திரும்பி நடையை கட்டினான்! கீழே கிடக்கும் அசடை யாராவது பார்த்துவிட்டால் கேவலமாச்சே?

இதை வாசிக்கும் போது கேள்வி எழும்பலாம்? இப்படி நடந்திருந்தால் நன்றாகத்தான் இருந்திருக்கும், பூமி ஏதேனாகவே இருந்திருக்கும். ஆனால் அப்படி நடக்கவில்லையே? அதற்கு எதிரான காரியம்தானே நடந்தது. நாம் தான் விடிய விடிய ஆதாம் ஏவாள் கதையை வாசித்து, சன்டே கிளாசில் கதைசொல்லிக் கொண்டிருக்கிறோமே? இது என்ன புதுக்கதை? இதைப் போய் சன்டே கிளாசில் சொல்ல முடியுமா? ஏன் முடியாது?

ஒரு ஏவாள் தவறு செய்தாள் என்பதற்காக, காலமெல்லாம் அதே கதையைச் சொல்லிக்கொண்டு, அவளையே **model** ஆக்கிக்கொண்டு, அவள் பின்னாலேயே போய்க்கொண்டிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. தைரியமாக நின்று நாம் இப்போது

பார்த்த நவீன ஏவாளாக, நவீன ஆதாமாகச் செயல்படுவோம். முடிந்தால் இதைவிட புத்திசாலித்தனமான **dialogue** வேத வசனங்களின் அடிப்படையில் பேசி, சாத்தானை விரட்டியடிக்கலாம், பூமியை மீண்டும் ஆதி ஏதேனாக்கலாம். எல்லாம் நம் **dialogues**-ஐப் பொறுத்தது! *"ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம் ... நீதி. 15:4."* நம் வாயிலிருந்து புறப்படுகிற வார்த்தைகளால் தான் இன்னும் ஒரு புதிய பூமியும், ஏதேன் தோட்டமும், அதில் ஜீவ விருட்சமும் உருவாகப் போகிறது. *"நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிதரும் ஜீவவிருட்சம் இருந்தது. அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். வெளி. 22:2."*

## பேச வேண்டியது:

மீண்டும் இந்தப் பூமியை ஆரம்பக்கட்டத்திற்கு கொண்டு போய் "மிகவும் நன்றாக"(ஆதி. 1:31) ஆக்க வேண்டுமானால்; அது நாம் பேசப்போகிற வார்த்தைகளால் தான் சாத்தியம் என்று பார்த்தோம். எதைப் பேசுவது? வேதம் ஆலோசனை தருகிறது: *"... சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள். பிலி. 4:8"*

நாம் "எதை சிந்திக்கிறோமோ அதைத்தான் பேசுவோம்" என்று வேதம் நமக்கு அறிவிக்கிறது. *"... இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். மத். 12:34."* வசனம் பரிந்துரை செய்கிற 8 காரியங்களையும் சிந்திப்போம், அவற்றால் இருதயத்தை நிரப்புவோம். நிரப்பப்பட்ட காரியங்கள் வாய் வழியாக வெளியே வரும். அப்படி வெளிவரும் காரியங்கள் தான் இந்த பூமியில் நடக்கும், பூமி மீண்டும் பரலோகமாகும்.

## 2. விசுவாசம் (ஆவிக்குரியது):

கண்காண்கின்ற பூமியில் காணப்படும், கண்காணாத ஆவி ரீதியிலான 3 காரியங்களைக் குறித்துப் பார்த்து வருகிறோம். அந்த மூன்று காரியங்கள் "மனிதன்", "விசுவாசம்", "வார்த்தை" என்ற சத்தியத்தை முதலாவது அறிந்து கொள்வோம். இதில் "மனிதனை"ப் பற்றி பார்த்தோம், அடுத்ததாக "விசுவாசம்" என்ற ஆவிக்குரிய, கண்காணாத காரியத்தைக் குறித்து கொஞ்சம் கலந்தாலோசிப்போம்.

"மனிதன் ஒரு ஆவி" என்று பார்த்தோம். தேவன் ஆவியாயிருக்கிறார், அதனால் அவரைப் போலவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் நாம் நிச்சயமாக அவரைப் போலவே ஆவியாகத்தான் இருக்க முடியும். கண்களால் பார்க்கிற சரீரமாகிய கூடாரத்திற்குள் வைக்கப்பட்டிருக்கும் இந்த ஆவி மனிதனுக்குள் இருந்து தான் விசுவாசம் வெளிவருகிறது. அதனால் விசுவாசமும் ஒரு ஆவிக்குரிய காரியம் என்பதை நிதானிக்கலாம். விசுவாசத்தைக் குறித்து பல காரியங்களைப் பார்த்து வருகிறோம்.

விசுவாசம் தேவனுக்குள் இருந்த ஒன்று. மனிதனைத் தன்னைப் போலவே உருவாக்கும்போது; அந்த விசுவாசத்தையும் அவனுக்குள்ளாக வைக்கிறார். கடுகு விதையளவாக விதைக்கப்படும் அந்த விசுவாசம் வளர்ந்து, விருத்தியடைகிறது, முடிவில் விளைச்சலைத் தருகிறது.

*"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, (ஆப. 2:4) விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்த சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது. (ரோம. 1:17)."* நம் பிழைப்பே விசுவாசத்தினால்தான்; விசுவாசிக்க முடியாவிட்டால் பொழைப்பு கெட்டுப் போகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்! விசுவாசிக்காமல் பிழைப்பைக் கெடுத்துக் கொண்ட தேவபிள்ளைகள் பெருந்திரளாக சபைகளில் அலைமோதுகிறார்கள். அவர்களுக்கு மீண்டுமாக வாழ்வு கொடுக்கும் வசனம் என்ன

சொல்லுகிறது என்பதை பார்க்காமல் போனார்கள். கிறிஸ்து சிலுவையில் முடித்த நியாயப்பிரமாணத்தின் பின்னும், பாரம்பரியங்களின் பின்னும், சபை தலைவர்கள் பின்னும், ஸ்தாபனங்களின் பின்னும், பலவிதமான ஜெபகூடுகைகளுக்குள்ளும் ஓடி ஓடி களைத்து உட்கார்ந்துவிட்டார்கள்.

நம் ஆவி மனிதனுக்குள் விதைக்கப்பட்டிருக்கும் விசுவாசம் கடுகளவு தானே என்று யோசிக்க வேண்டாம், அந்த விசுவாசத்தை வெளியே அனுப்புவோம். விசுவாசத்தை வெளியே கொண்டு வருவதற்காக தேவன் நமக்குத் தந்திருக்கும் இன்னுமொரு ஆவிக்குரிய காரியம் தான் "வார்த்தை"! நாம் எதைப் பேசுகிறோமோ அவைதான் இந்த பூமியின் மீது நடக்கிறது என்ற உண்மை தெரிந்திருக்கும். நாம் பேசும் வார்த்தைகள் இந்த பூமியின் மீது கடந்து சென்று; எதைக் குறித்து பேசினோமோ அதை உருவாக்கி, பூமியின் மீது நிறுவுகிறது. இந்த *வார்த்தை என்ற ஆவிக்குரிய காரியமும் தேவனிடமிருந்து நமக்கு கடந்து வந்த ஒன்றுதான். "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டது. (சங். 33:6)".*

வார்த்தைதான் எல்லாவற்றையும் உண்டாக்குகிறது என்றாலும்; விசுவாசம் தான் வார்த்தையின் முன்னோடி. புவியீர்ப்பு பிரமாணம் என்பது நாம் காணும் ஒரு இயற்கைச் சட்டம் (law). எந்தவொரு பொருளும் மேலிருந்து விழும்போது கீழ்நோக்கி தான் வரும்; என்பதுதான் அந்த சட்டம். இது பூமியின் சட்டம், அதுபோலவே ஆவிக்குரிய உலகத்திலும் ஒரு சட்டம் இருக்கிறது; அதுதான் விசுவாசம். விசுவாசத்தையும் ஒரு பிரமாணம் என்று தான் வேதம் கூறுகிறது. *"இப்படியிருக்க, மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே. எந்தப் பிரமாணத்தினாலே? கிரியாப்பிரமாணத்தினாலேயே? அல்ல; விசுவாசப்பிரமாணத்தினாலேயே. ரோமர். 3:27"* புவியீர்ப்பு விசை உலகத்தை இயக்குவதைப் போல விசுவாசம் என்ற பிரமாணம் ஆவிக்குரிய உலகத்தை இயக்குகிறது. அதாவது புவியீர்ப்பு விசையை ஆதாரமாகக் கொண்டு பூமியின் மீது இருக்கிற சகல காரியங்களும் இயங்குகின்றன, நிலை நிறுத்தப்படுகின்றன. அறிவியல் கண்டுபிடிப்புகள் எல்லாமே புவியீர்ப்பை அடிப்படையாகக் கொண்டதுதான். உதாரணமாக புவியீர்ப்பு விசை இல்லாவிட்டால் விமானம் வானத்தில் பறக்காது.

அப்படிப்போலவே, விசுவாசத்தை ஆதாரத் தளமாகக் கொண்டுதான் ஆவிமண்டலமே (ஆவி உலகம் – பரலோகம்) இயங்குகிறது. விசுவாசத்தை வெளியே கொண்டு வரும் ஒரு உபகரணம்தான் வார்த்தை என்பதால்; ஆவிமண்டலம் வார்த்தைகளால் இயக்கம் பெறுகிறது என்றும் சொல்லலாம். மனிதனும் ஒரு ஆவி என்பதால் அவனைச் சரியானபடி இயக்க, தேவசித்தத்தை செய்யத்தக்க விதமாக இயக்க அந்த ஆவிக்குரிய காரியமான விசுவாசத்தினால் தான் முடியும். *"... உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார். மத். 9:29."* கண்களால் காணக்கூடிய பூமியில் இருக்கிற கண்காணாத ஆவி மனிதன்; கண்களால் காணமுடியாத ஆவி ரீதியிலான விசுவாசத்தால் வாழும்படி அமைக்கப்பட்டிருக்கிறான், அழைக்கப்பட்டிருக்கிறான். மனிதனின் சரீரம் கண்களால் காணக்கூடியதாக இருப்பதாலும், பூமியின் காரியங்கள், சூழ்நிலைகள், துயரங்கள் கண்களால் காணக்கூடியதாக இருப்பதாலும்; அவற்றால் அவனுடைய விசுவாசம் தாக்கத்துக்குள்ளாகிறது, அவஸ்தைப்படுகிறான். கண்காண்கின்ற காரியங்கள், அவனை விசுவாசம் என்ற பிரமாணத்தின்படி இயங்கவிடாதபடி அவனை இம்சைபடுத்துகிறது, தடுக்கிறது.

கடைசியாக, வேறு வழியில்லாமல் விசுவாச பிரமாணத்தை அறியாத உலகத்தாரின், பெயரளவிலான பாரம்பரிய – நியாயப்பிரமாண – கிறிஸ்தவர்களின் கிரியைகளைச் செய்து, அவர்கள் செல்லும் பாதையில் சென்று, அவர்களுக்குள் சிக்கி, சின்னாபின்னமாகிவிடுகிறான். விசுவாசிகள் என்று தங்களை அழைத்துக் கொள்கிற சபையினரின் நிலைமை கூட இப்படித்தான் இருக்கிறது. இந்தப் பிரச்சனையை மாற்றி, அவர்களை விசுவாசத்தின் வழி நடக்க வைக்கவே இந்த புதிய வெளிச்சம். இது ஆதியில் இருந்த பழைய வெளிச்சம்தான், இடையில் மறைக்கப்பட்டு, மறக்கப்பட்டு, இப்போது மீண்டும் உதயமாகியிருக்கிறது. *"உலகதோற்றத்திற்குமுன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம். 1 கொரி. 2:7".* ஆவி மண்டலத்தின் பாதையெங்கும் பச்சை விளக்குகள்தான். விசுவாசபாதையிலிருந்து

விலகி, கண்காண்கின்ற உலக ஜனங்களின் பாதையைத் தெரிந்து கொண்டதால் தேவ பிள்ளைகளின் பாதையில் அடிக்கடி சிவப்பு விளக்குகள் **(traffic red signal)** குறுக்கிடுகின்றன. தொடர்ச்சியாக விசுவாச ஓட்டத்தை ஓட முடியாமல் சிவப்பு விளக்குகளால் தடைபட்டு, நிறுத்தப்பட்ட தேவபிள்ளைகளுடைய பாதையில் இந்த ஆரஞ்சு, பச்சை விளக்குகள் பிரகாசிக்கின்றன. நில்லுங்கள் – கவனியுங்கள் – செல்லுங்கள்!

*"வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; ... எரே. 6:16"* ஆவியான மனிதன் தன்னை மறந்து, தன்னிலை மறந்து, தன்னையே யார் என்று அடையாளம் காணாமல்; கண்காண்கின்ற உலகத்தின் ஏதோ ஒரு பாதையில் நடந்து கொண்டே இருக்கிறான். சரீரத்தையும், அதைச்சார்ந்த காரியங்களையும் பெரிதென்று நம்பிவிட்டான். சாத்தான் அவனின் மனக்கண்களை குருடாக்கி; சரீரத்திற்குள்ளாக இருக்கும் உண்மை மனிதனை – ஆவி மனிதனை அவனுக்கு மறைத்து விட்டான்.

அதுமட்டுமா இன்னும் ஒருபடி மேலே போய்; மனிதனை ஒரு மிருகமாக்கிவிட்டான்! மனிதன் ஒரு பாலூட்டி வகையைச் சேர்ந்த மிருகம் தான் என்றும், ஆனால் மற்ற மிருகங்களைவிட அதிகப்படியான புத்திக்கூர்மையுள்ள, தீவிர வளர்ச்சியடைந்த மிருகம் என்றான்! கதை எப்படிப் போகிறது பாருங்கள்! விசுவாசிக்கத் திராணியில்லாததினால், விசுவாசப்பிரமாணத்தின் மீது தன் வாழ்க்கையைக் கட்டாமல், புவியீர்ப்பு பிரமாணத்தின்மீது கட்டினதினால் ... சாத்தானுக்கு எவ்வளவு வசதியாகப் போய்விட்டது பாருங்கள். பூமியின் சகல ஜீவன்களின் சரீரத்தையும் வடிவமைத்த சிற்பி ஒருவரே. அதனால் அவரின் சிற்ப வேலைகளில் ஒற்றுமை இருக்கத்தான் செய்யும். (உதாரணமாக மனிதனின் – குரங்கின் உடலமைப்பு). என்னுடைய கையெழுத்தில்... நான் வைக்கும் குழம்பில்... நான் வரையும் ஓவியத்தில்... எழுதும் கவிதையில்... விதைகள் புத்தகங்களில் நான் என் முத்திரையைப் பதிக்கிறேன். இதை நான் வேண்டுமென்றே செய்வதில்லை, இது என்னையுமறியாமல் தானாக ஏற்படுகிறது. எல்லா மனிதர்களின் வேலைகளிலுமே அவர்களின் கைவண்ணத்தை, கைவரிசையைப் பார்க்கமுடியும். இந்தக் குணாதிசயத்தை நாம் நம் ஆவிமனிதனின் தகப்பனாகிய (நம் அப்பாவாகிய) தேவனிடமிருந்து பெற்றிருக்கிறோம். அப்பனைப் போல பிள்ளை இருப்பது உலக வழக்கம் மட்டுமல்ல, ஆவி ரீதியிலான வழக்கங்களும் அப்படித்தான்!

மனிதன் தேவசித்தத்தைக் கண் காண்கின்ற இந்தப் பூமியின் மீது; கண் காணாத விசுவாசத்தால் செய்து முடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கிறான். சிறு வயதில் நான் **comics books** (சிறுவர்களுக்கான நகைச்சுவைக் கலந்த கதைப் புத்தகம்) படிப்பதுண்டு. அதில் வரும் இரும்புக்கை மாயாவி என்ற கதாபாத்திரம் என்னால் மறக்க முடியாத ஒன்று. கண்காணாத ரீதியில் இருக்கும் மாயாவி என்ற மனிதனின் சாகசங்களை, சேஷ்டைகளை இதில் பார்க்க முடியும். (கண் காணாத மனிதனால் இந்தப் பூமியில் வாழ முடியாது என்ற அறிவியல் உண்மையை கொஞ்ச நேரம் மறந்துவிடுவோம்). கதையின் கதாநாயகனாக அந்த இரும்புக்கை மாயாவியின் வலது கையின் மணிக்கட்டு வரையிலான பகுதி மட்டும் கண்களால் காண்கிற அமைப்பைப் பெற்றிருக்கும்; அந்தப் பகுதியும் இரும்பினால் வடிவமைக்கப்பட்டிருக்கும்.

நாட்டில் நடக்கும் வன்முறைகளை ஒழிக்க இவன் காவல்துறையினருக்கு பேருதவியாக இருப்பான். **(detective branch of police: CID)** கண்களால் காணமுடியாத தன்னுடைய ஆவி உருவத்தைப் பயன்படுத்தி அவன் தேசத்தின் வன்முறைக் கும்பல்களையும், தீவிரவாதிகளையும் எளிதாகப் பிடித்து விடுவான். இவன் ஜனங்களுக்கு நன்மையானதை செய்கிறபடியால் பொதுமக்கள் இவனுக்கு ஆதரவாளர்களாக மாறுகிறார்கள். ஆனால் தீவிரவாதிகளுக்கோ இவன் சிம்மசொப்பனமாகி விடுகிறான். அவர்களுக்கு இவன் பயங்கரமான தலைவலியாகிப் போகிறான். அவனை எதிர்க்கவும் முடியாமல், கொல்லவும் முடியாமல், வன்முறைகளில் ஈடுபடவும் முடியாமல் திணறுகிறார்கள். எந்தப் பிரச்சனையை எடுத்துக் கொண்டாலும் முடிவில் நம்முடைய கண்காணாத கதாநாயகனான இரும்புக்கை மாயாவிதான் வெற்றி பெறுவான். அவனுடைய வெற்றிக்கு பல காரணங்கள் இருந்தாலும்; அவனுடைய சரீரத்தின் கண்களால் காணமுடியாத அமைப்புதான் முக்கியமானதாக அமைகிறது. ஒவ்வொரு வெற்றியின் முடிவிலும் அவனுக்கு

அரசாங்கத்தால் மரியாதைகளும், பரிசுகளும், அவார்டுகளும் (**awards**), மெடல்களும் (**medals**) கிடைக்கின்றன.

உண்மையில் இந்த இரும்புக்கை மாயாவிக்கு ஒரு உருவம் உண்டு. அவன் உளவு வேலையில் ஈடுபடாத நேரங்களில் கண்களால் காணத்தக்க விதத்தில்தான் நடமாடுவான். காவல்துறையினரோடு வேலையில் இறங்கும்போது மாத்திரம் தன்னுடைய உருவத்தை கண்களால் காணமுடியாத அளவில் மாற்றிக் கொள்ளுவான். (?) இரும்பினால் செய்யப்பட்ட தன்னுடைய வலது கையின் விரல்களில் மின்சாரம் பாயும்படி செய்வான். அதற்கு அவன் ப்ளக்பாயிண்டுகளையோ, மின்சார கம்பிகளின் இணைப்பையோ, எதுவோ ஒன்றை பயன்படுத்துவான் சூழ்நிலைக்கு தகுந்தபடி... உடனே அவன் உடலுக்குள் மின்சாரம் பாய; அவன் கண் காணாமல் மறைந்து போவான்!

ஆவி மனிதனின் விசுவாச இயக்கத்திற்கு இது ஒரு நல்ல உதாரணமாக அமையும் என்று நம்புகிறேன். ஆவி மனிதன் கண்காணாத விசுவாசத்தால், இந்தப் பூமி மீது காரியங்களை செய்து முடிக்க வேண்டிய கட்டாயத்திலிருக்கிறான். காரணம் அதைத் தவிர வேறு வழி கிடையாது, மாற்று வழியும் (**substitute**)-ம் கிடையாது. ஏன் அப்படி? என்றெல்லாம் கேள்வி கேட்க முடியாது, அது அப்படித்தான்! மரத்திலிருந்து விழும் ஆப்பிள் கீழேதான் விழும், மேலே விழாது. ஏன் அப்படி? மேலே விழுந்தால் என்ன? இப்படி கேட்டபடி மரத்தருகே நிற்பவனை பைத்தியம் என்பார்கள்.

தேவன் ஆவி உலகத்தை அப்படித்தான் நிர்மாணித்திருக்கிறார் (**establishment**). தேவன் விசுவாசத்தால்தான் எல்லாவற்றையும் உருவாக்கினார். விசுவாசத்தை வார்த்தையாக வெளிப்படுத்தினார்; அந்த வார்த்தைகள் கடந்து சென்று தேவன் சொன்னதையெல்லாம் உருவாக்கிற்று. விசுவாசத்தின் வெளிப்பாடுதான் வார்த்தைகள் என்பதை முன்பாக பார்த்தோம். விசுவாசமும் வார்த்தைகளும் ஒன்று தான் என்று அறியலாம். விசுவாசம் இருதயத்துக்குள் இருந்தால் எதுவும் நடக்காது; அதை வார்த்தை மூலமாக வெளியேற்றும் போது தான் விசுவாசித்தது, சொன்னது நடக்கிறது.

*தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று. ஆதி. 1:3.* தேவன் வெளிச்சத்தை வாயின் வார்த்தைகளால் சொல்லி உருவாக்குகிறார். ஆனால் அதற்கு முன்னோடியாக அந்த வார்த்தைகள் விசுவாச உருவத்தில் அவருடைய இருதயத்தில் இருந்தது. தான் சொன்னால் அதன்படியே ஆகும் என்று அவர் விசுவாசித்திருந்தார். தேவன் நம்மையும் அவரைப் போலவே உருவாக்கியிருப்பதால்; நாமும் கூட நாம் விரும்பினவைகளைப் பெற்றுக் கொள்ள இந்த முறையைத்தான் பின்பற்ற வேண்டும். அதாவது தேவனைப் போலவே செயல்பட வேண்டும்.

இரும்புக்கை மாயாவி போலத்தான் கண்காணாத மனிதன் – விசுவாசம் – வார்த்தை ஆகிய மூன்றும் இந்தப் பூமியின் மீது செயல்படுகிறது. இந்த விசித்திர விநோதமான உண்மையை, வேதம் கற்பிக்கும் இந்த சத்தியத்தை நாம் அறிந்திருந்தாலும் சரி, அறியாவிட்டாலும் சரி இதுவரைக்கும் பூமியில் இதுதான் நடந்து வருகிறது. இதை நீங்கள் விசுவாசித்தாலும் சரி, விசுவாசிக்காவிட்டாலும் சரி இனிமேலும் இதுதான் நடக்கப் போகிறது. இந்த மகத்தான சத்தியத்தை நீங்கள் அறிந்து கொண்டு, ஆவியானவரின் உதவியுடன் ஆராய்ந்து பார்ப்பீர்களானால்; மாயாவியைப் போல சாதனையாளர்களாக மாறலாம். கண்காணாத காரியங்களைக் கொண்டு கண்களால் காணக்கூடியவற்றை நாம் உருவாக்குவதை பார்த்து உலகமே ஆச்சரியப்பட்டு மூக்கின் மேல் விரலை வைக்கும்.

## 3. வார்த்தை (ஆவிக்குரியது):

நம் சரீரத்திற்குள்ளாக வாசம் செய்கிற மனிதன் ஒரு ஆவி என்று பார்த்தோம். அந்த ஆவி ரீதியிலான மனிதன் தான் விசுவாசிக்கிறான், நம்முடைய மாம்ச சரீரத்தினால் விசுவாசிக்க முடியாது. அதே ஆவி மனிதனிலிருந்து வருவது தான் வார்த்தையும். அதனால் வார்த்தையும்

ஒரு ஆவிக்குரிய காரியம் தான் என்பதை அறியலாம். ஆதிவாசியான காட்டு மனிதனுக்கு பேசத் தெரியாது, வெறும் ஒலிகளை மாத்திரமே எழுப்பினான். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சியடைந்து, அந்த ஒலிகளை ஒழுங்குபடுத்தினான். இவ்விதமாகத்தான் வார்த்தைகள், பாஷைகள் உருவானது என்று சொல்லப்படுகிற அறிவாளிகளின், விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளை மூட்டைக்கட்டி குப்பைத் தொட்டியில் போடுங்கள், போட்டுவிட்டு இங்கே வாருங்கள்!

*ஆதியிலே வார்த்தை இருந்தது, ...(In the beginning was the Word, ... (யோ. 1:1).* அதாவது உலகம் உருவாவதற்கு முன்னதாகவே வார்த்தை இருந்தது என்று பார்க்கிறோம். வார்த்தை என்பது பூலோகம் உருவானதற்குப் பிறகு உருவான ஒரு காரியம் அல்ல. பூமி உருவாவதற்கு முன்னதாக இருந்த எதுவாக இருந்தாலும் சரி; அது நிச்சயமாக ஆவி ரீதியில் தான் இருந்திருக்க முடியும். ஏனென்றால் கண்களால் காணக்கூடியதாக அமைப்புகள் எதுவும் அப்போது இல்லை. ஆதி. 1:1—லிருந்துதான் கண்களால் காணக்கூடிய வஸ்துக்கள் உருவாகின.

கண்காணாத வார்த்தைகளை உபயோகித்து தான் தேவன் கண்களால் காணக்கூடிய பூலோகத்தையும் அதன் நிறைவையும்; வானங்களையும், அவற்றில் சுற்றியோடும் இராசிகளையும் உண்டாக்கினார். கண்களால் காணக்கூடாத ஆவி ரீதியிலான தேவன்; கண்களால் காணக்கூடாத ஆவி ரீதியிலான விசுவாசத்தால் எல்லாவற்றையும் உண்டாக்கினார். எப்படியென்றால் தனக்குள்ளாக இருந்த விசுவாசத்தை வார்த்தையாக வெளிப்படுத்தி எல்லாவற்றையும் உருவாக்குகிறார். அவர் வார்த்தையை அனுப்பிக் கொண்டே இருக்கிறார்; அது கடந்து சென்று கண்களால் காணக்கூடிய காரியங்களை உருவாக்கியது, உருவாக்குகிறது, உருவாக்கும்!

கண்களால் காணக்கூடிய இந்தப் பூமியையும் அதன் நிறைவையும் விட, அதை உருவாக்கின கண்காணாத பரலோகமும், அதிலிருக்கும் தேவன் – விசுவாசம் – வார்த்தை அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், சக்தி வாய்ந்தது என்றும், அதிக நிச்சயம் வாய்ந்தது என்றும் பார்க்கிறோம். *“... காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள் (தற்காலிக மானவைகள் – ), காணப்படாதவைகளோ நித்தியமானவைகள் (தொடக்கமும் முடிவுமில்லாதவைகள் – நீடித்திருக்கக்கூடியவைகள்). 2 கொரி. 4:18”*

பூமியை ஆளுகை செய்யும் பொறுப்பை அதனால் தான் தேவன் கண்களால் காணக்கூடிய எதற்கும் கொடுக்கவில்லை. அப்படிக் கொடுத்திருந்தால் பூமியின் மீது எதுவுமே நடக்காது; எல்லாமே ஸ்தம்பித்து அப்படியே அசைவற்று நின்றிருக்கும் (standstill). காரணம் கண்களால் காணக்கூடிய ரீதியிலான எதையும் உபயோகித்து ஒன்றையும் உருவாக்க முடியாது. மனிதன் கண்களால் காணக்கூடாத ஆவிக்குரியவன் என்பதால் தான் ஆளுகையை தேவன் அவன் கையில் கொடுக்கிறார். இந்தப் பூலோகத்தை மனிதனைத் தவிர வேறெதுவும் ஆள முடியாது. நாம் எவ்வளவு முக்கியமானவர்கள் என்று கவனியுங்கள்!

ஆவி மனிதனுக்குள்ளிருந்து வெளிப்படுவதே விசுவாசம், அதனால் அதையும் கண்ணால் பார்க்க முடிவதில்லை. அந்த விசுவாசம் வார்த்தையாக வெளியேறுகிறது, அதனால் அதையும் பார்க்க முடிவதில்லை! இப்படியாக காணக்கூடாதவைகளுக்கு ஆளுகையைக் கொடுத்து, உருவாக்கும் ஆற்றலையும் கொடுத்து, காணக்கூடிய பூமியின் மீது இயங்க வைத்திருக்கும் தேவனை நினைத்து பிரமிக்கிறேன்! (நீங்களும் என்னோடு கூட சேர்ந்து பிரமியுங்கள்!)

அதோடு நிறுத்திவிடாமல் காணக்கூடாத ரீதியிலான நாம்; நமக்குள் கொடுக்கப்பட்டிருக்கும் காணக்கூடாத விசுவாசத்தையும், வார்த்தைகளையும், ஏற்றபடி இந்த பூலோகத்தின் மீது செலுத்தி, நிறுவி, ஆக்கிரமித்து, மூடி, ஆளுகையை நடத்த வேண்டும். நம்முடைய விசுவாசத்தை கிரியையில் காண்பிக்க வேண்டும்; அதாவது வார்த்தையின் மூலம் அதைப் பேசி வெளிப்படுத்த வேண்டும். அடுத்தபடியாக நம் விசுவாசக் கிரியைகளை நம் வாழ்க்கையில் காண்பிக்க வேண்டும். கிரியையில்லாத விசுவாசம் செத்தது... நாளடைவில் பிணமாகி நாறிப் போய்விடும்.

## ஏன் நடந்தது? எப்படி நடந்தது? என்ன நடந்தது? அதை யார் தான் சொல்வது!:

உலக மனிதனின் கேள்வி இது, கேட்டவர்களின் உள்ளங்களில் ஆயிரமாயிரம் கேள்விகளை எழுப்பிய கேள்வியிது! நீங்கள் யாராக இருந்தாலும் சரி, கேள்விகள் எப்படிப்பட்டதாக இருந்தாலும் சரி, எங்களுக்குள் இருந்து கிரியை நடப்பிக்கும் ஆவியானவர் எங்கள் மூலமாக சரியான பதிலைக் கொடுக்க வல்லவராயிருக்கிறார். *தேவனுடைய ஆவியானவரால் பதில் தர முடியாத எந்தவொரு கேள்வியையும் உங்களால் கேட்க முடியாது!*

*"அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக. கொலோ. 4:6."* உங்களுடைய இப்போதைய நிலவரம் என்ன? வியாதியா? நெருக்கடிகளா? மூச்சுத்திணறலா? பணப்பிரச்சனையா? குடும்பப் பிரச்சனைகளா? கண்ணீரா? கவலையா? துன்ப துயரங்களா? மந்திரவாதமா? பில்லிசூனியக் கட்டுகளா? ... (இப்படியே ? குறிகளைப் போட்டுக் கொண்டு போனால் அது சுமார் 1,00,000 வரை போகலாம்!) நாங்கள் நடத்தும் அற்புத ஜெபக்கூடுகைகளுக்கு வாருங்கள், ஜெபித்து உங்களுக்கு விடுதலை வாங்கித் தந்துவிடுகிறோம் என்று நோட்டீஸ் விட்டு உங்களை அழைக்க வரவில்லை, போங்கள் என்று உங்களை விரட்டியடிக்க வருகிறோம்! ஆம், ஆதியாகம் 1, 2, 3, அதிகாரங்களுக்குள் போங்கள் என்று உங்களை விரட்டியடிக்கிறோம். வேதத்தில் நீங்கள் எதை வாசித்தாலும் சரி, வாசிக்காவிட்டாலும் சரி, கண்டிப்பாக வேதத்தின் இந்த ஆரம்ப அதிகாரங்களை வாசித்தே ஆக வேண்டும்.

ஆதியில் என்ன நடந்தது என்பது தெரியாவிட்டால்; இப்போது இவைகளெல்லாம் உங்களுக்கு ஏன் சம்பவித்தது என்பதும் தெரியாது; இனி வரப்போகிற காரியங்கள் இதைவிட மோசமாகியும் போகும்! பிரச்சனைகளின் விதை என்ன என்பது தெரியாவிட்டால்; விளைச்சலைப் பற்றியும் தெரிந்து கொள்ளமுடியாது, அதை அழிக்கவும் முடியாது. நோயாளியை பரிசோதிக்கும் டாக்டர் அந்த வியாதிக்கான மூலகாரணத்தைத்தான் முதலில் தேடுகிறார், அதாவது விதை எது என்று ஆராய்ந்து பார்க்கிறார். மனோதத்துவ மருத்துவரும் (phychiatrist) மனநோயாளியின் நிலைமைக்கு மூலகாரணம் என்ன என்பதைத்தான் ஆராய்கிறார். விதை எப்போது எங்கே விழுந்தது என்பதை ஆராய்வதற்காக அந்த நோயாளியை ஒரு ஆழ்உறக்க நிலைக்குக் கொண்டுபோய், தன் வசப்படுத்துகிறார் (hypnotism). இப்படிச் செய்வதன் மூலம் நோயாளியின் மனநிலை பாதிப்பிற்கான மூலகாரணியைக் கண்டுபிடிக்கிறார்.

இவர்கள் மட்டுமல்ல, எந்த துறையைச் சேர்ந்த ஆய்வாளர்களானாலும் அவர்களுடைய கவனமெல்லாம் ஆரம்பத்தில் என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிப்பதில்தான் இருக்கிறது. விதை அந்த அளவுக்கு மனுக்குலத்தின் முக்கிய சாராம்சமாக இருக்கிறது. தேவனுடைய அனைத்து சிருஷ்டிப்பின் மூல ஆதாரமே விதைதான். தேவன் தன் விசுவாசத்தை வார்த்தையாக்கி விதைக்கிறார்; சகலமும் உண்டாயின! உலகத்தானுக்கே தெரிகிறது, மூலகாரணத்தை கண்டுபிடிக்காமல் எதுவும் செய்ய முடியாதென்று! இரட்சிக்கப்பட்ட தேவஜனமோ ... கண்ணை மூடிக்கொண்டு வேதத்தைத் திறந்து அதிர்ஷ்ட வசனத்தை தேடி குறிபார்க்கிறார்கள்! அப்படி குறிபார்த்தபோது கிடைத்த வசனம்: *"... அவன் ... நான்றுகொண்டு செத்தான். மத். 27:5." "... நீயும் போய் அந்தப்படியே செய். லூக். 10:37" "... நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் ... யோ. 13:27!" "... அவன் சொன்னபடியெல்லாம் செய்தான். யாத். 18:24" "... மரித்துப் போனான்; ... 1 சாமு. 28:3" "... அவனை அடக்கம் பண்ணினார்கள். யோசு. 24:33"!!!!!*

பிரச்சனையைப் பார்க்காதே, அது பூமியின் சாபத்தால் வந்தது. விதையைக் கண்டுபிடி, தெரியாவிட்டால், முடியாவிட்டால், டாக்டரிடம் போங்கள் கண்டுபிடித்துச் சொல்லுவார்கள்! சிலுவையின் இரகசியத்தை பிரசங்கிக்கிற புதிய உடன்படிக்கை டாக்டர்களைத்தான் சொல்லுகிறேன். அவர்கள் மேலேயும் நம்பிக்கையில்லையா? நேரடியாக பைபிளை எழுதிக்கொடுத்தவரிடமே போய்விடலாம், பிரச்சனையே இருக்காது. *"நீங்கள் அவராலே*

*(இயேசுவால்) பெற்ற அபிஷேகம் (பரிசுத்தாவியானவர்) உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்கு போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்கு போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக. 1 யோவா. 2:27"*

## யார் நீ?:

விதையைக் கண்டுபிடிக்கச் சொன்னேன். எங்கே, எப்போது, யாரால், எப்படி அந்த விதை விழுந்தது என்பதை கண்டுபிடிக்க வேண்டும். வேத வசனங்கள் அதற்கு உதவி செய்கின்றன. வேத வார்த்தைகளைப் பிடித்துக் கொள்ளுவோம். வார்த்தை ஆவிக்குரியது, வார்த்தையால் தான் எல்லாமே உருவானது. அதனால் உருவாக்கிய ஒரு காரணி; தான் உருவாக்கிய ஒன்றை எளிதாகக் காட்டிக் கொடுக்கும்! முக்கியமாக மனிதர்களுக்கு, மனிதர்களையே தெரியவில்லை, மனிதன் யார் என்பதே புரியவில்லை! ஆவி மனிதனைப் பற்றி எதுவும் தெரியாததினால்; மனிதன் தங்கியிருக்கும் கூடாரத்தை மட்டும் பார்த்து கணக்குப் போடுகிறான்! அவனுடைய கணக்கின்படி மனிதன் வளர்ச்சியடைந்த நவீனகால மிருகம் அல்ல. பிரகாசமுள்ள மனக்கண்களுக்காக ஜெபித்து, மனிதன் யார் என்ற அந்த ஆரம்ப விதையைத் தேடுங்கள்!

இத்தாலி நாட்டில் சுவை அறியும் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. அதில் ருசி பார்த்து அது என்ன சுவை என்பதைக் கண்டுபிடிப்பதில் வல்லுனரான "லியோர்பால்ட்" என்பவர் கலந்து கொண்டார். ஆரஞ்சு, ஆப்பிள், மாம்பழம், திராட்சை உட்பட வரிசையாக பழரசங்கள் தரப்பட்டன, ருசிபார்த்து சரியான விடையைச் சொன்னார். முடிவில் ஒரு பானம் தரப்பட்டது, பலமுறை முயன்றும் அதன் சுவை அவருக்கு பிடிபடவில்லை. தன்னுடைய தோல்வியை ஒத்துக்கொண்டு அது என்ன பானம் என்று கேட்டார். பதிலைக்கேட்டு அதிர்ந்து போனார்; அந்த பானம் வெறும் தண்ணீர் தான்!

கவனியுங்கள், மனிதன் நாகரீக, அறிவியல் ரீதியாக எதையெதையோ கண்டுபிடித்துவிட்டான். உலகம் தோன்றிய போது காணப்பட்ட வஸ்துகள் எல்லாவற்றையும் பார்த்து, அவற்றையெல்லாம் ஆராய்ந்து, சிதைத்து, அடித்து நொறுக்கி ஒரு வழியாக்கி இந்த 6500 வருஷங்களில் தேவன் படைத்த அழகான உலகத்தை அக்குவேறு ஆணிவேறு ஆக்கிவிட்டான். என்றாலும் மிக முக்கியமான ஒன்றுக்கு அவன் இன்னும் விடையைக் கண்டுபிடிக்காமல்தான் இருக்கிறான். அது ... மனிதன் இன்னும் தன்னை யார் என்று கண்டறியவில்லை, கண்டுபிடிக்க முடியவில்லை. உண்மைதான், மனிதனால் தன்னை யார் என்று கண்டுபிடிக்க முடியாது. ஏனென்றால் மனிதன் ஆவிக்குரியவன் (supernatural being), அவன் இந்த பூமிக்கு உரியவன் அல்ல (not of natural world).

மனிதன் ஆதியில் சாத்தானால் ஏமாற்றப்பட்டு, பாவம் செய்தபோது அவனுடைய தெய்வீக சாயல், மனிதம், தெய்வத்துவம் எல்லாம் அவனை விட்டு எடுபட்டுப் போயிற்று. அவனுடைய பிரகாசமுள்ள மனக்கண்கள் குருடாகிப் போனது, வெறும் மாம்சமும் இரத்தமும் உள்ள மாமிச பிண்டம் போலானான். அதனால் நாளடைவில் மனிதன் தன்னை ஒரு ஆவிக்குரியவனாக உணராமல், மாம்சத்துக்குரியவனாக நினைத்து பழகிப்போனான். ஒரு மனிதன் தன்னுடைய சரீர உணர்ச்சியினாலும் (ஐம்புலன்களின் அறிவு) மூளையறிவினாலும் தேவனை அறிந்து கொள்ள முடியாது. *"அப்பொழுது அவர் (இயேசு): நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்?" "சீமோன் பேதுரு ... நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்." "இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை,* பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மத். 16:17."

மாம்சமும் இரத்தமும் மூளையும், அதன் நினைவுப் பகுதியும் ஒரு மனிதனுக்கு எப்படி தேவனை வெளிப்படுத்தமுடியாதோ அப்படியே மனிதனையும் வெளிப்படுத்த முடியாது! ஏனென்றால் மனிதனும் தேவனைப் போலவே ஆவி உருவத்தில் இருப்பவன். அதனால் தேவனையும், அவரைப்போலவே இருக்கிற மனிதனையும் (நம்மையும்) நாம் அறிந்து கொள்ள

வேண்டுமானால் அதற்கு ஒரே வழிதான் இருக்கிறது. பரலோக தேவன் மாத்திரமே அதைச் செய்ய முடியும். ஏனென்றால் ஆவிக்குரிய ரீதியிலான காரியங்களை நமக்கு வெளிப்படுத்த, அதே ஆவிக்குரிய ரீதியிலான ஒன்றால் தான் முடியும்.

அதனால் அந்தக் காரியத்தை, தேவனே செய்கிறார். அந்த காரியம் தேவனுடைய கிருபையின் அடிப்படையில்; எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் நடக்கிறது, அது அவருடைய சுத்த ஈவு. அப்படி என்னதான் செய்கிறார்? வார்த்தையை அனுப்புகிறார்; ஒரு நற்செய்தியாளரின் பிரசங்கத்தின் மூலமாக அந்த வார்த்தைகள் கடந்து வருகிறது. பிரசங்கம் கேட்கிற மனிதன் விசுவாசிக்கும்போது; அந்த வார்த்தை அவனுடைய இருதயத்திற்குள் வருகிறது. அதாவது அவனுடைய இருண்டு கிடக்கும் ஆவிக்குள் (அவன் தான் உள்ளான ஆவி மனிதன்) வருகிறது. வார்த்தைதான் இயேசு என்பதால் இயேசுவே உள்ளத்தில் வருகிறார் என்பதே சரி. இருதயத்தின் இருள் பகுதிக்குள் இயேசுவின் ஒளி பரவ ஆரம்பிக்கிறது. மனிதன் தேவனை யார் என்று அடையாளம் கண்டு கொள்கிறான், இதுதான் இரட்சிப்பு!

இந்த காரியம் சாபத்தின், சாத்தானின், சூழ்நிலைகளின் எதிர்ப்புகள் மத்தியில் நடந்தேறுகிறது. அடுத்தக் கட்டமாக மனிதன் தன்னை யார் என்று அடையாளம் கண்டு கொள்ள வேண்டுமானால்; அதற்கு சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை பிரசங்கிக்க வேண்டும். *"நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; .. 1 கொரி. 1:23."* பவுல் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங்கிக்கிறார். பிதாவானவர் தன்னுடைய வார்த்தையாகிய இயேசுவை பூலோகத்துக்கு அனுப்பியதன் நோக்கமே அவரைச் சிலுவையில் பலியாக்கத்தான். அப்படி அவர் செய்ததின் நோக்கம் என்ன? சிலுவையில் என்ன நடந்தது? அவரை கல்லறையில் வைத்த அந்த மூன்று நாட்களில் என்ன நடந்தது? உயிர்த்தெழுதலின் போது என்ன நடந்தது என்பதை பிரசங்கிக்கிறார், அதைத்தான் நாங்களும் பிரசங்கிக்கிறோம் (எழுத்தின் மூலமாக).

## ஆலயங்களில் பிரசங்கிக்கப்படுகிற இயேசு யார்?:

பவுல் பிரசங்கித்த காரியங்கள் சபைகளில் சர்ச்சைக்குரியதாக மாறி அவருக்கு எதிர்ப்புகள் ஏற்பட்டதையும் பார்த்தோம். ஆனால் சிறைச்சாலையில் அவருடைய சரீரமான கூடாரத்தை மட்டும் தான் அடைத்து பூட்டி வைக்க முடிந்தது. அவருடைய உள்ளான ஆவி மனிதன் சபையால் புறக்கணிக்கப்பட்ட சத்திய வார்த்தைகள் அடங்கிய கடிதங்களை எழுதி எடுத்துக் கொண்டு ஜன்னல் வழியாக வெளியேறி விடுகிறான். *33. அப்பொழுது நான் கூடையிலே வைக்கப்பட்டு, ஜன்னலிலிருந்து மதில் வழியாய் இறக்கி விடப்பட்டு, அவனுடைய கைக்குத் தப்பினேன். 2 கொரி. 11:33*

அந்தக் கடிதங்கள் பூமியை சுற்றி ஓடி; கண்ணுக்குத் தெரியாத ஆவி மண்டலங்களின் மீது சிலுவையின் சத்திய வார்த்தைகளை எழுதிக் கொண்டே இருக்கின்றன. என் கையில் கூட பவுல் எழுதிய நிருபங்கள் படபடக்கின்றன! எனக்கு reference-ம் அவைகள் தான்!

என்னவோ நீங்க மாத்திரம் தான் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை பிரசங்கம் பண்ற மாதிரியும் நாங்க வேறே இயேசுவை பிரசங்கம் பண்ற மாதிரியும் சொல்றீங்களே? என்ற கேள்வி நியாயமானதல்ல! பவுல் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங்கித்தபோது சபையிலிருந்து ஏராளமான எதிர்ப்புகளைச் சந்திக்கிறார். இதிலிருந்தே தெரிகிறது... பவுல் சந்தித்த சபைகளில் வேறே இயேசு பிரசங்கிக்கப்பட்டிருந்தார் என்று! பவுல் பிரசங்கித்த இயேசுவை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, அதை அவர்கள் சகிக்கமாட்டாதிருந்தார்கள்! வசனங்கள் அதை உறுதிப்படுத்துகின்றன.

*"... நசரேயனாகிய அந்த இயேசு இந்த ஸ்தலத்தை அழித்துப்போட்டு, மோசே நமக்குக் கொடுத்த முறைமைகளை மாற்றுவானென்று இவன் சொல்லக்கேட்டோம் என்றார்கள் அப். 6:14." "... உலகத்தை கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள். ... இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி*

*இராயனுடைய கட்டளைகளுக்கு விரோதமாகச் செய்கிறார்களென்று கூக்குரலிட்டு, ... ஜனங்களையும் பட்டணத்து அதிகாரிகளையும் கலங்கப்பண்ணினார்கள் அப். 17: 6,7,8." "... பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் பேரில் ஆணையிட்டு உங்களுக்கு கட்டளையிடுகிறோம் என்றார்கள் அப். 19:13."*

தேவாலயங்களில் இயேசுவைத்தான் பிரசங்கிக்கிறார்கள்; அதை இல்லையென்று சொல்லவில்லை, குறைசொல்லவும் இல்லை. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் காண்பிக்கிற நியாயப்பிரமாண காலத்தில் வாழ்ந்த இயேசுவை பிரசங்கிக்கிறார்கள். அதனால் பிரயோஜனம் இல்லையே, நியாயப்பிரமாணத்தை முடிவுக்கு கொண்டுவரத்தானே இயேசு சிலுவையில் மரித்தார்? *"நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து; துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் வெற்றி சிறந்தார். கொலோ; 2: 14, 15."* நியாயப்பிரமாண கட்டளைகளை சிலுவையில் தோற்கடித்து, சாகடித்தார் என்று பார்க்கிறோம். அதற்கு மீண்டுமாக உயிர்க்கொடுக்க முயற்சிப்பதனால் யாருக்கு என்ன இலாபம்? இலாபம் இல்லாவிட்டால் பரவாயில்லை, போனால் போகிறது; ஜனங்களுக்கு இதனால் நஷ்டமல்லவா ஏற்படுகிறது!

அப்படி என்ன நஷ்டம் வருகிறது? இயேசு சொன்னார்: *"மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள், அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள். மத். 23:15"* இக்காலங்களில் எல்லா சபையினருமே இரட்சிப்பின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள், ஜனங்களை இரட்சிப்பிற்குள் நடத்துகிறார்கள், மிகவும் நல்ல வரவேற்கத்தக்க காரியம். பிரசங்கத்தைக் கேட்டு விசுவாசிக்கும் போது சாத்தானின் ஆளுகையிலிருந்து விடுதலையாக்கப்படுகிறார்கள். இந்த இரட்சிப்பின் காரியம் கிருபையின் அடிப்படையில்தான் நடக்கிறதே தவிர, கிரியையினால் அல்ல. ஒரு மனிதனின் இரட்சிப்பிற்கும் நியாயப்பிரமாணத்திற்கும் சம்பந்தம் கிடையாது. ஏனென்றால் ஒரு மனிதனை இரட்சிப்பிற்குள்ளாக நடத்த நியாயப்பிரமாணத்தினால் முடியாது; அதனால் தான் இயேசு அதைச் சிலுவையில் ஒழித்தார். ஒரு மனிதன் இரட்சிப்பின் சுவிசேஷத்தைக் கேட்டு மனம் திரும்பி இயேசுவை ஏற்றுக் கொள்வது கிருபையின் பிரமாணத்தின் அடிப்படையில்தான்.

பிரச்சனையின் **highlight** என்னவென்றால்; இயேசு எதை சிலுவையில் முடித்தாரோ; அதையே மீண்டுமாக இரட்சிக்கப்பட்ட விசுவாசியினிடத்தில் தொடங்கி வைக்கிறார்கள். ஜனங்கள் கைக்கொள்ள முடியாமல் தோற்றுப்போன மோசேயின் பிரமாணத்தை, கிறிஸ்துவின் பிரமாணத்தினால் இரட்சிக்கப்பட்ட தேவபிள்ளைக்கு பிரசங்கிக்கிறார்கள். இப்படி பிரசங்கிக்கப்படும்போது என்ன நடக்கிறது?

*"ஒருவனும் கோடித்துண்டைப் பழைய வஸ்திரத்தோடு இணைக்கமாட்டான், இணைத்தால், அதினோடே இணைத்த புதியதுண்டு பழையதை அதிகமாய்க் கிழிக்கும், பீறலும் அதிகமாகும். ஒருவனும் புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்து வைக்கமாட்டான்; வார்த்து வைத்தால், புதுரசம் துருத்திகளைக் கிழித்துப்போடும், இரசமும் சிந்திப்போம், துருத்திகளும் கெட்டுப்போம்; புதுரசத்தைப் புது துருத்திகளில் வார்த்து வைக்க வேண்டும் என்றார். மாற். 2:21, 22"* வசனம் தெளிவாக இருக்கிறது, பழைய வஸ்திரம் பழைய மோசேயின் பிரமாணத்தையும், புதிய வஸ்திரம் இயேசுவின் பிரமாணத்தையும் குறிக்கிறது. பழைய திராட்சைரசம் நியாயப்பிரமாணத்தையும், புதிய திராட்சைரசம் புதிய பிரமாணத்தையும் குறிக்கிறது.

புதிய பிரமாணத்தின்படி தேவன் நமக்கு இலவசமாக, கிருபையாக, ஈவாக தந்த இரட்சிப்பை, பழைய பிரமாண உபதேசத்துடன் இணைத்தால்... ? புதிய வஸ்திரம் பழைய வஸ்திரத்தை கிழித்துப் போடுவதால் மொத்தத்தில் அந்த உடையை உபயோகிக்க முடியாமல் போகிறது. பாவ, சாப, வியாதி, தரித்திரத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருந்தாலும்; அந்த இரட்சிப்பு பெலனற்று போகிறது. அந்த இரட்சிப்பின் சந்தோஷத்தை, ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியாமல் போகிறது. பழைய துணிகளை போட்டுவைக்கும் ஒரு அழுக்கான சாக்குக்குள் மொத்த வஸ்திரமும் போடப்படுகிறது. பிறகு அந்த சாக்கைத் தூக்கி வீட்டின் பின்புறமாக உபயோகமற்றிருக்கும் ஒரு பாழடைந்த அறைவீட்டின் மூலையில் அது போடப்படுகிறது. மாசக்கணக்கில், வருடக்கணக்கில் அது அங்கேயே முடங்கிக் கிடக்கிறது. “சிலுவையில் பெற்ற இரட்சிப்பை முடக்கிப்போடும் நியாயப்பிரமாணம்!”

சிலுவையில் இயேசு தந்த விலையேறப்பெற்ற இரட்சிப்பை எடுத்துக்கொண்டு நியாயப்பிரமாண உபதேசத்திற்குள் நுழையும்போது ... ? பழைய துருத்தி கிழிந்து புதிய இரசத்தை கீழே வழியவிட்டு வீணடிப்பதைப் போலவே, நியாயப்பிரமாண சட்டதிட்டங்கள் இரட்சிப்பை வீணாக்கிப் போடுகிறது. இயேசுவின் இரத்தக்கிரயம், கிருபை, சிலுவையின் ஆசீர்வாதங்கள், இரகசியங்கள் எல்லாமே வீணாகிப்போகின்றன. *“... நாமும் இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலேயன்றி, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லையென்று அறிந்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளானோம்.” “நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை, நீதியானது நியாயப் பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே. கலா. 2: 15, 21”* “சிலுவையை வீணடிக்கும் நியாயப்பிரமாணம்!”

சிலுவையில் அறையப்பட்ட இயேசு – புதிய பிரமாண சத்தியங்கள் பிரசங்கிக்கப்படாததினால் சபைக்குள் வியாதிகள். தேவன், சாபத்தால் வியாதி பிடித்துப் போன ஜனங்களை குணமாக்க தன்னுடைய வார்த்தையையே அனுப்பியபோதிலும் இன்னும் ஜனங்கள் சொஸ்தமடையவில்லை. *கீலேயாத்தில் பிசின் தைலம் இல்லையோ? இரண வைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னே ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற்போனாள்? எரே. 8:22* என்று தேவன் அங்கலாய்க்கிறார். தேவன் சிலுவையில் பகிர்ந்தளித்த அன்பையும், மருந்தையும், எல்லாவற்றையும் விட்டுவிட்டு மருந்தைத் தேடி மீண்டுமாக நியாயப்பிரமாணத்திற்குள் போனதால்... *எகிப்தின் குமாரத்தியாகிய கன்னிகையே, நீ கீலேயாத்துக்குப் போய் பிசின் தைலம் வாங்கு, திரளான அவிழ்தங்களை நீ கூட்டுகிறது விருதா, உனக்கு ஆரோக்கியமுண்டாகாது. எரே. 46. 11* வியாதிகளுக்கான மருந்து ஏற்கனவே தயாராக இருக்கிறது, போய் கேட்டு வாங்க வேண்டியதுதான். அதைவிட்டுவிட்டு மருந்து தயார் செய்யும் வேலையை நீங்களே செய்தால் ... ? ஆரோக்கியமுண்டாகாது என்று வேதம் சொல்லுகிறது.

*... அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள். மத். 23:15.* இரட்டிப்பின் நரகமாக வேதம் குறிப்பிடுவது எதை? அக்கினியும் கந்தகமும் எரிந்து கொண்டிருக்கிற ஒரு மகாபயங்கரமான காட்சி கண்ணில் தோன்றுமே, அந்த நரகத்தை குறிப்பிடவில்லை. அதாவது கிருபையினடிப்படையில் இரட்சிக்கப்பட்ட ஒரு விசுவாசி; மீண்டுமாக நியாயப்பிரமாண உபதேசத்தைக் கேட்டு, அதை விசுவாசித்து, அதன்படி கிரியை செய்ய முயற்சிக்கும்போது; அவனுடைய நிலைமை மிகவும் மோசமடைகிறது. அதாவது அவன் இயேசுவை ஏற்றுக்கொள்வதற்கு முன்பாக இருந்த நிலைமையைவிட மோசமான சூழ்நிலைக்குள் தள்ளப்படுகிறான். இரட்சிக்கப்படாத எந்தவொரு

மனிதனையும் நரகத்தின் காரியங்கள் ஆளுகை செய்கின்றன என்பது தெரிந்த விஷயம். சாத்தானும், அவனுடைய காரியங்களும் அவனை ஆளுகை செய்கின்றன. இன்னும் புரியும்படி சொல்லவேண்டுமானால் வேதனை, வருத்தம், துன்பம், துயரம், தொல்லைகள், கவலை, கண்ணீர், அங்கலாய்ப்பு, புலம்பல், அழுகை ... போதுமா? இப்படியாக வேதனைப்பட்டு தேவனைத் தேடிவரும் ஒரு மனிதனுக்கு இந்த பிரச்சனைகள் தீருவதற்கு பதில் அதிகரிக்குமானால் ... ?

பாடுகளைச் சகிக்க முடியாமல் சோர்ந்து போய்; மீண்டுமாக பழைய பாவ வாழ்க்கையையே தொடருகிறார்கள்; சொல்லப்போனால் அதைவிட மோசமான பாவங்களுக்குள் தள்ளப்படுகிறார்கள். (இந்த நிலைமைக்கு பின்மாற்றம் என்று சபை பெயர் வைத்திருக்கிறது. ஆனால் அது சரியல்ல, அவர்களுடைய வாழ்க்கையில் தான் முன்னேற்றமே இல்லையே, பிறகு எப்படி பின்மாற்றம் வரும்!) இந்த நிலைமையைத்தான் வேதம் இரட்டிப்பின் நரகம் என்கிறது. சபையின் நியாயப்பிரமாணம் சார்ந்த உபதேசங்கள் இரட்டிப்பான நரகத்தின் வேதனைகளை அவனுடைய எல்லைகளுக்குள் இழுத்துக்கொண்டு வந்துவிடுகிறது.

இருக்கிற நிம்மதியையும் கெடுத்து நாசமாக்கக்கூடிய போதனைகளை அல்ல, விசுவாசத்தை கட்டியெழுப்பக்கூடிய போதனைகளைக் கேளுங்கள். நரக வேதனையிலிருந்து விடுவிக்கக்கூடிய பிரசங்கங்களைத் தேடிப்பாருங்கள். பரலோக செழிப்பிற்குள் நடத்துகிற வார்த்தைகளைப் பேசுகிற பிரசங்கியார்களைக் கண்டுபிடியுங்கள். பரிசுத்தாவியானவருக்கு இடம் கொடுங்கள், *சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்... யோவா. 16:13* சரியான சபைக்குள், சரியான பிரசங்கத்துக்குள், சரியான பிரசங்கியாரிடத்தில், அவரே நடத்துவார்.

*வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். மத். 11:28* என்று தான் இயேசு சொன்னார். என்னிடத்தில் வாருங்கள், உங்கள் பாரத்தை பலமடங்காக்குவேன்; உங்கள் முதுகில் கூனல் விழும் என்று இயேசு சொன்னதாக உங்களுக்கு அறிவித்தவன் யார்? நிர்வாணமாக இல்லாமலிருந்தும் நிர்வாணி என்று ஆதாமுக்கும் ஏவாளுக்கும் அறிவித்த அதே சாத்தான்தான். இன்றளவும் அதே பொய் மூட்டைகளுடன் வருகிறான், எச்சரிக்கையாயிருப்போம்!

## சிகரங்களை நோக்கி ... :

முன்னேறுவதற்குத் தூண்டும் வார்த்தைகளைக் கேளுங்கள். முன்னேறுவதுதான் உயிர்களின் இயல்பு. நத்தை மிகமிக மெதுவாக நகர்ந்தாலும் அது முன்னேறவே செய்கிறது! சப்பாணிகூட மனதளவில் முன்னேறுகிறான். மனிதனின் காலடிகள் பட்டுப்பட்டு புல்வெளியில் பாதைகள் உருவாகின. முன்னேறுவதற்காகவே பாதைகள் உருவாக்கப்பட்டன. பூமியின் மீது ஒரு உயிர்ப்போராட்டமே நடந்து கொண்டிருக்கிறது. பூமியின் உருவாக்கப்பட்ட உயிர்த்தன்மையுள்ள எந்தவொரு வஸ்துவானாலும் அவைகள் வாழவே துடிக்கின்றன. அதற்கான சாத்தியக்கூறுகளைத் தேடித் தவிக்கின்றன, கிடைத்துவிட்டாலோ பிடித்துக்கொண்டு முன்னேறுகின்றன... ஜெயிக்கின்றன.

தாவர உலகின் கடைசி நிலை உயிரினமான பாக்டீரியாவின் வளர்ச்சி, முன்னேற்றம் மிகவும் பிரம்மிக்கத்தக்கது. இவை ஒரு அங்குலத்தில் 25 ஆயிரத்தில் ஒரு பங்கே அளவுடையது. சிலவகை பாக்டீரியாக்கள் மைக்ரோஸ்கோப்புக்கு கூட புலப்படுவதில்லை. ஆனால் இவற்றின் முன்னேற்றப்பாதை மிக வேகமானது. ஒரு செல் இரண்டாகி இதன் இனம் பெருகுகிறது. சாதகமான சூழ்நிலை ஏற்பட்டால் இனப்பெருக்கம் மிக

வேகமாக நிகழும். புதிதாக பிறந்த பாக்டீரியா 20 நிமிடத்தில் இரண்டாகிவிடும். இரண்டு மணி நேரத்தில் 64 ஆகிவிடும். இதே வேகம் நீடித்தால் 1 நாளில் 400 கோடியாக பெருகிவிடும்! 72 மணி நேரத்தில் இவற்றின் எடை பூமியின் எடையைவிட 33,000 மடங்கு அதிகமாகிவிடும்! ஆனால் அப்படி எதுவும் நடக்காமலிருப்பதற்கு காரணம், பாக்டீரியாக்கள் உணவுக்காகவும், நீருக்காகவும் போராடி போராடியே மடிந்து போகின்றன. 1 சதவிகிதத்திற்கும் குறைவான அளவிலான பாக்டீரியாக்களே உயிர் பிழைக்கின்றன, அதனால் தான் நாமும் பிழைத்தோம்!

பூமியிலுள்ள எதுவானாலும் அது தான் இருந்த நிலைமையிலேயே திருப்தியடைந்து நின்று விடுவதில்லை. மனிதனானாலும் சரி... நில, நீர், காற்று மண்டலங்களில் காணப்படுகிற சகலவிதமான ஜீவராசிகள், தாவர இனங்கள்... எதுவானாலும் சரி ஏதாவது ஒரு ரீதியில் முன்னால் போகவே விரும்புகின்றன. அது நல்லதோ, கெட்டதோ, பிரயோஜனமானதோ, அல்லது ஒன்றுக்கும் உதவாததோ, வாழ்வைக் கொடுப்பதோ, அல்லது சாகடிப்பதோ எந்தக் காரியமானாலும் சரி, தன்னுடைய எல்லையைக் கடந்து காலடி எடுத்து வைக்கவே பிரயாசப்படுகின்றன. காரணம் பூமியும் அதன் நிறைவும் ஆதியாகமம் 3–ம் அதிகாரத்தில் ஏற்பட்ட சாபத்தால் தாக்கப்பட்டபோதிலும்; தன்னுடைய சிருஷ்டிகரின் குணாதிசயங்களை வெளிப்படுத்தவே முயற்சிக்கின்றன. இது இயற்கையில் நாம் பார்க்கக்கூடிய பாராட்டத்தக்க "+" ஆன விஷயங்கள்.

ஆனால் இவை எல்லாவற்றையுமே நாம் அங்கீகரித்து விடவும் முடியாது. இயற்கை வெளிப்படுத்தும் நேர்மறையான, நல்ல, ஆசீர்வாதமான, தேவனுடைய சித்தத்திற்கிசைவான காரியங்களை மட்டும் கண்டுபிடித்து, அதில் ஆர்வம் காட்டவேண்டும் (enthusiasm), அதைத் தூண்டிவிட வேண்டும் (motivation), உந்தித்தள்ள வேண்டும் (push), கடக்க வேண்டும் (trespass) முடிவை அடைய வேண்டும் (reach the Goal) ஜெயிக்க வேண்டும். இங்கே சாத்தான் செய்கிற ஒரு காரியத்தையும் சொல்ல வேண்டியது மிக அவசியமாயிருக்கிறது. இயற்கையில் காணப்படுகிற எதிர்மறையான, மோசமான, சாபத்தீடான, தேவனுக்கு சித்தமில்லாத காரியங்களை அவன் கண்டுபிடிக்கிறான். மனுஷனுடைய சிந்தனைப் பகுதியில் கெட்ட நினைவுகளை எழுப்பி, அதில் ஆர்வத்தை உண்டாக்குகிறான். மனிதன் ஆசைப்படுகிற அந்த பாவத்திற்குள் விழ வைக்கிறான், முடிவில் தோல்வியையும், வேதனையையும், வியாதியையும், தரித்திரத்தையும், சாவையும் மனிதன் சந்திக்கிறான். தலை நசுக்கப்பட்ட, மூளை நசுக்கப்பட்ட, அதனால் மனநிலை பாதிக்கப்பட்டு, coma stage ல் இருக்கும் சாத்தான் இந்த அளவுக்கு வேலை பார்க்கிறான் என்றால் ... ? தேவனைப் போல் இருக்கும் நாம், பூமியின் ஆளுநர்களான நாம், தேவனுடைய சொந்தப்பிள்ளைகளான நாம், அவருக்குப் பதிலாக பூமியில் இயங்குகிற நாம் எந்த அளவுக்கு வேலை பார்த்திருக்க வேண்டும்?

தேவையான அளவுக்கு வேலை பார்த்திருந்திருப்போமானால் மனுக்குலம் என்றோ ஏதேனுக்குத் திரும்பியிருந்திருக்கும். கோட்டை விட்டோம், என்றாலும் பரவாயில்லை அதிக நிச்சயமான தீர்க்கதரிசன வசனங்கள் நமக்கு இருக்கிறது. *"கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார்; அவர் அதின் பாழான ஸ்தானங்களையெல்லாம் தேறுதலடையச்செய்து, அதின் வனாந்தரத்தை ஏதேனைப்போலவும், அதின் அவாந்தரவெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப் போலவும் ஆக்குவார்; சந்தோஷமும் துதியும் சீதசத்தமும் அதில் உண்டாயிருக்கும். ஏசா. 51:3"*

மனிதன் தேவனை பரிபூரணமாக அறியாவிட்டாலும், தேவன் அவனுக்கு இரகசியங்களை வெளிப்படுத்தவே செய்கிறார். ஏனென்றால் தேவன் மனிதனை அறிந்திருக்கிறார். அவருக்கு மனிதனை யார் என்று தெரியும், அவர்தானே உண்டாக்கினார்? தன்னைப் போலிருக்கும் மனிதன் விழுந்தாலும் எழும்புவான்,

சாதிப்பான் என்று அவருக்குத் தெரியும்! *நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான் ... நீதி. 24:16.* அதுமட்டுமல்ல, எல்லா ரீதியிலும் பரிபூரணமடைந்த ஒரு மனிதனிடம் தான் தன் இரகசியங்களை தேவன் வெளிப்படுத்துவார் என்றால்; யாரிடமும் கொடுக்க முடியாதே! பரிபூரணமடைந்தவர்களெல்லாம் தேவனிடம் ஏற்கெனவே போய்விட்டார்கள்! இப்போது மிச்சமிருப்பது நாம் தான்! கருகலான பகுதிகளும் (மறைக்கப்பட்டவை) வேதத்தில் கிடையாது. தேவன் தன்னுடைய காரியங்களை நமக்கு மறைத்தாரானால் அவருடைய சித்தம் இந்த பூமியில் நிறைவேறுவதெப்படி? பூலோகத்தை மீண்டுமாக பரலோகமாக்க முடியாமல் போகுமே?

தேவன் மனிதனின் தகுதியைப் பார்க்கவில்லை, அவனுடைய ஆர்வத்தைப் பார்க்கிறார். அவனுக்குள்ளே வாசமாயிருக்கும் இயேசுவை நம்பி தைரியமாக வெளிப்பாடுகளை கொடுத்துவிடுகிறார். அதாவது நமக்குள்ளே வாசமாயிருக்கிற அவருடைய வார்த்தையை நம்பி இரகசியங்களைத் தந்திருக்கிறார். பிதாவின் வார்த்தையும் இயேசுவும் ஒன்றே! புதிய பிரமாணத்தின் சத்தியங்களை அறிந்திருக்கிற நாம் நம்முடைய நீதியில் அல்ல, இயேசுவினுடைய நீதியில் நிற்கிறபடியால் பாவம் நம்மை மேற்கொள்ள மாட்டாது என்று அவருக்குத் தெரியும். *"நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிராமல் கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது. ரோமர். 6:14."* அதாவது *காகம் நம் தலைமேலாக பறந்து போகும், ஆனால் தலைமேல் கூடுகட்டாது!* முன்னொரு காலத்தில், பழைய உடன்படிக்கையான நியாயப்பிரமாணத்திற்குள் வாழ்ந்து கொண்டிருந்தபோது, தலையில் பறவைக்கூடுகளோடு அலைந்தோமே ஞாபகமிருக்கிறதா? அந்தக்கூடுகள் இயேசுவால் கலைக்கப்பட்டன!

நம்மிடம் குறைவுகள் இருக்கலாம், ஐசுவரியத்தை பிரசங்கிக்கிற நான் ஒருவேளை தரித்திரத்தில் இருக்கலாம்... தெய்வீக சுகத்தை பிரசங்கிக்கிற நீங்கள் ஒருவேளை வியாதியில் இருக்கலாம். *பவுல் ஜெயிலுக்குள் இருந்து கொண்டு தான் விடுதலையை பிரசங்கித்தார். துக்கப்படுகிறவர்கள் எனப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் எனப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும் சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப் பண்ணுகிறோம். 2 கொரி. 6:10.* ஏனென்றால் எங்களுடைய சுகவாழ்வு, செல்வம், ஆசீர்வாதம், செழிப்பு அதிக நிச்சயம் என்று எங்களுக்குத் தெரியும். ஆவிக்குரிய ரீதியில் உன்னதங்களில் இருக்கிற அவைகள் பூமிக்குரிய ரீதியாக மாறும் என்றும், மாறிக்கொண்டே இருக்கிறது என்றும், ஏற்ற நேரத்தில் அது எங்கள் கைகளில் வரும் என்பதும் எங்களுக்கு நிச்சயமாகத் தெரியும். *"... காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. 2 கொரி. 4: 17"*

எல்லாவிதத்திலும் தன்னைப் போலவே இருக்கிற ஒரு மனிதனிடம் தான் தன்னுடைய இரகசியங்களை ஒப்படைப்பேன் என்று தேவன் பிடிவாதமாக இருப்பாரானால்; உண்மையில் ஒருவர் கூட இருக்க மாட்டார்கள். பிறகு பூலோகத்தின் நிலவரம் வரவர இன்னும் மோசமாகிக் கொண்டுதான் போகும். அதனால் தன்னிடமிருந்து இரகசியங்களை பெற்றுக் கொண்டு, அதற்கேற்றபடி இயங்கி, தன் சித்தத்தை நிறைவேற்றி முடித்து, சகலத்தையும் புதிதாக்க பூலோக மக்களில் யாரை வேண்டுமானாலும் தெரிவு செய்து விடுகிறார்.

ஆனால் தன்னுடைய சித்தத்தை செய்து முடிப்பதற்கு ஏதுவாக அவனில் சில மாற்றங்களைச் செய்கிறார். தன்னுடைய ஆவியானவரின் மூலமாக அவனை

இரட்சிப்புக்குள் நடத்தி இயேசுவை அவனுக்குள் கொண்டு வருகிறார். அடுத்தக்கட்டமாக அவனுக்கு வெளிப்பாடுகளைக் கொடுத்து சத்தியத்தை அறிந்து கொள்ளும்படி செய்கிறார். உள்ளான மனிதனுக்குள் வசிக்கும் இயேசு தன்னைப் போலவே அவனை உருமாற்றம் செய்கிறபடியால், மெல்ல மெல்ல மனிதன் இயேசுவைப் போலவே மாற ஆரம்பிக்கிறான். தேவன் மனிதனை மனிதனின் தகுதிப்படியல்ல, இயேசுவின் தகுதியின்படி பார்க்கிறார். அவனை இயேசுவைப் போலவே பார்க்கிறார், இயேசுவாகவே பார்க்கிறார், இயேசு என்றே அழைக்கிறார்! *...தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களை தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்; ரோ. 8:29. கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடன் விசுவாசிக்கு (கிறிஸ்து) பங்கேது? 2 கொரி. 6:15.* பிதாவாகிய தேவன் தன்னுடைய குமாரனாகிய இயேசுவுக்கும் நமக்கும் எந்தவொரு வித்தியாசத்தையும் காட்டவில்லை, நம்முடைய தரத்தை குறைக்கவும் இல்லை! இயேசு கிறிஸ்து முதல் பேறானவர், நாமெல்லோரும் அவருக்கு அடுத்தடுத்த பேறானவர்கள்! வரிசைக் கிரமமாக அவருடைய குமாரர்களும் குமாரத்திகளுமாக queue-ல் இருக்கிறோம்!

## சூழ்நிலைக் கைதி :

ஆதியில் இருந்த பூமிக்கும் (ஆதி. 1, 2, 3) இப்போது நாம் பார்க்கும் பூமிக்கும் கொஞ்சமும் சம்பந்தமில்லை என்பதைப் பார்த்து வருகிறோம். ஆதி. 1, 2 அதிகாரங்களில் பார்க்கிற உலகம் தான் தேவனுடைய பரிபூரணமான சித்தத்தின்படி அமையப்பெற்ற உலகம். ஆதி. 3:7க்குப் பிறகு பூமியின் மீது இயங்கிக்கொண்டிருந்த பரிபூரணமான சித்தத்தின் பிரமாணம் (ஆசீர்வாதம்) மாறியது. தேவனுடைய சித்தத்திற்கு எதிரிடையான ஒரு பிரமாணம் (சாபம்) இயங்க ஆரம்பித்தது. அதற்குப் பிறகு மனிதன் மட்டுமல்ல, பூமியின் சகல வஸ்துகளும் கர்ப்பவேதனையை அனுபவித்து வருகிறது. *"... இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது. ரோமர். 8:22)"*

மனிதனின் பாவத்தால், எந்த பாவமும் செய்யாத ஜீவ ஜந்துக்கள் பசியினாலும், நோயினாலும், இயற்கை சீற்றங்களினாலும் வேதனைப்பட்டு அழிகின்றன. தாவரங்கள் போதிய இயற்கை சூழல் இல்லாமல் பூச்சிகளால் பட்சிக்கப்பட்டு, வெயிலினால் வாடி, தன் விளைச்சலைச் சரிவர கொடுக்க முடியாமல் திண்டாடுகின்றன. பூமியின் நிலப்பரப்போ ... பாலைவனமாக மாறி, தரிசு நிலங்களாகி, முட்களை முளைப்பித்து, தரம் கெட்டு மனிதனை எதிர்த்து போராடுகிறது. கடல் உப்பாகி, நிலப்பரப்பின் கழிவுகளினால் சீர்கெட்டு, கடல்வாழ் உயிரினங்களுக்கு ஆபத்தை உருவாக்கியது. தேவன் போட்ட கட்டளையை மீறி கரையை கடந்து மனுக்குலத்துக்குக் கேட்டை விளைவிக்கிறது. காற்று மண்டலம் ஓசோன் படல ஓட்டை(ozone hole), சூரியனின் தீங்கிழைக்கும் கதிர்கள் (X & Ultra violet rays), அசுத்தமான காற்று (air pollution) போன்ற பிரச்சனைகளால் தலையை பிய்த்துக் கொள்கிறது.

இப்படியாக இந்தப் பூமியும் அதிலுள்ள யாவும் சாபத்தின் பிடியில் சிக்கி, சூழ்நிலைக் கைதிகளாகிப் போயின. ஆதி. 3ஆம் அதிகாரத்திற்கு பிறகு இந்தப் பூமியின் மீது எதுவுமே தேவனுடைய சித்தத்தின்படி நடக்கவில்லை. அதற்கு பிறகு நடந்த காரியங்களை தேவன் அனுமதித்தார் என்று சிலர் சொல்கிற காரியங்கள் கூட என்னைப் பொறுத்தவரையில் ஏற்புடையதாக இல்லை. உதாரணமாக, தேவன் ஏதேனில் சைவ உணவைக் கொடுத்தார், அதற்குப் பிறகு அசைவ உணவை அனுமதித்தார் என்ற கருத்து. தேவனுக்கு சித்தமே இல்லாத ஒன்றை எப்படி அனுமதிக்க மட்டும் செய்வார்? அதாவது பூமி சாபத்தில் விழுந்து போனபிறகு; அது சாபப் பிரமாணத்தின்படி இயங்க ஆரம்பித்தது. தேவன் அதை அப்படியே விட்டுவிட்டார். ஆனால் தன்னுடைய சாயலில்

வாழும் தன்னுடைய புத்திரர்களுக்காக பூமியின் மீது சில மாற்றங்களைச் (alterations) செய்தார்.

தன்னைப் போல் உருவாக்கப்பட்ட மனிதன், தன்னுடைய வல்லமை, மகத்துவம், குணாதிசயங்களை தனக்குள் வைத்திருக்கும் மனிதன் சாபத்தோடு போராடி, எதிர்நீச்சல் போட்டு எப்படியும் வாழ்ந்து காட்டுவான் என்று அவருக்குத் தெரியும்! அதனால் தான் திட்டமிட்டு உருவாக்கியதற்கு மாறான திட்டத்தின்படி இயங்கிக் கொண்டிருந்த பூமியின் மீது தன்னுடைய அளவிடமுடியாத அன்பின், மனதுருக்கத்தின் அடிப்படையில் சில மாற்றங்களைச் செய்கிறார். ஆதி. 1: 14–24 வசனங்களில் அவர் செய்த மாற்றங்களை பார்க்க முடியும்.

மனுக்குலத்தையும், அவனுடைய வாழ்க்கையையும், பூமியையும் அதன் நிறைவையும் சாபத்திலிருந்து மீட்பதற்கான காரியத்தை ஆதி. வச. 14, 15–ல் செய்கிறார். தேவன் யாரையும் எதையும் சபிக்கவேயில்லை என்று பார்க்கலாம். "சபிக்கிறேன்" என்று அவர் சொல்லவேயில்லை, "சபிக்கப்பட்டிருக்கும்" என்று தான் சொல்கிறார். அதாவது ஆதாமும் ஏவாளும் *தன்னுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் போனதால் இந்த பூமிக்கும் மனுக்குலத்துக்கும் என்ன நேர்ந்தது? என்னென்ன கேடுகள் ஏற்பட்டன? என்பதைத்தான் சொல்கிறாரே தவிர சாபமிடவில்லை, அவரால் சாபமிடவும் முடியாது, ஏனென்றால் அவர் தேவன்!*

கர்ப்ப வேதனை தேவனுடைய சித்தமல்ல, ஆனால் பூமி சாபத்துக்குள்ளான பிறகு அந்த நியமம் மாற்றப்படுகிறது. (வச. 16) ஆண் = பெண் என்பது தான் தேவனுடைய ஆரம்ப நியமம்; அதுவும் சாபத்துக்குப் பிறகு மாற்றத்துக்குள்ளாகி "ஆண் > பெண்" என்று மாறியது. (வச. 16) பூமியிலும் பிரச்சனைகள் தோன்றின. மிகவும் கஷ்டப்பட்டு வியர்வை சிந்த பாடுபட்டால்தான் பூமி தன் விளைச்சலைக் கொடுக்கும், அதுவும் முழுமையாக அல்ல. (வச. 17) தேவன் கொடுத்த பழம், பூண்டு வகைகளைத் தவிர பூமியில் விளைகிற எல்லாவற்றையும் சாப்பிட வேண்டிய நிர்ப்பந்தம் வந்தது. (வச.18) மரணம் என்பது தேவனால் உருவாக்கப்பட்ட ஒன்றல்ல, அது சாபத்தினால் தோன்றிய ஒன்று. (வச. 19)

தேவன் மனிதனை உருவாக்கியபோது நிர்வாணமாக உருவாக்கவில்லை, தேவனுடைய மகிமை அவர்களை மூடியிருந்தது. நிர்வாணம் என்ற வார்த்தை சாத்தான் மூலம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, அதை நம்பியதால் (அதைப் பேசியதால்) அது நிஜமாகிப் போனது. அதனால் ஆடை அணிய வேண்டிய சூழ்நிலை வந்தது. பூமியில் வாழும் சகல ஜனங்களும் தங்களை மறைக்க ஆடைகளை அணிகிறார்கள். அதற்கு என்ன காரணம்? மானத்தைக் காக்க, அழகாக இருக்க, பாதுகாப்புக்காக, நோய்கிருமிகளின் தாக்கத்திலிருந்து தப்பிக்க, குளிர் வெயில் தாக்காமலிருக்க, என்று ஆயிரம் காரணம் சொல்லுகிறார்கள். ஆனால் இந்த பிரச்சனைகள் எதுவுமே ஏதேனுக்குள் இல்லை! (வச. 20)

தேவன் குறித்த காலத்துக்கு முன்னதாகவே மனிதன் நன்மை எது? தீமை எது? என்பதை அறிந்து கொண்டது தான் பிரச்சனையாகிப் போனது. சாப பிரமாணம் இயங்கி வரும் பூமியின் மீது மனிதன் சாகாதபடி என்றென்றும் உயிரோடிருப்பானானால் அது எவ்வளவு மோசமாக, வேதனைக்கிடமாக இருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள். ஜீவ விருட்சத்தின் கனி என்றென்றும் ஜீவனோடிருப்பதற்காக உண்டாக்கப்பட்டது. ஆனால் இப்போதிருக்கும் சூழ்நிலையில் மனிதன் அதை புசிப்பது ஆபத்து என்பதால் தேவன் அதைத் தடுத்தார். அவனை ஏதேனிலிருந்து துரத்துகிறார், ஏனென்றால் சாத்தானால் புத்திமயக்கத்திற்குள்ளான ஆதாமும் ஏவாளும் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் ஜீவ விருட்சத்தின் கனியையும் சாப்பிட்டுவிடக்கூடாதென்பதற்காக

அவசரமாக வெளியேற்றுகிறார்! மட்டுமல்ல, அவன் திருட்டுத்தனமாக போய் பறித்துவிடக்கூடாது என்பதற்காக ஏதேனின் வழியையும் அடைத்துவிடுகிறார்.

தன்னுடைய அன்பின் மிகுதியினால் தேவன் பூலோகத்துக்கு நேர்ந்த ஆபத்தை சுட்டிக்காட்டுகிறார். பூலோகம் சாத்தானின் வார்த்தையால் சாபத்துக்குள்ளாகி; ஆதியில் தேவன் இயங்க வைத்த ஆசீர்வாத பிரமாணத்தைவிட்டு தடம் புரண்டு, சாப பிரமாணத்தின்படி இயங்க ஆரம்பித்த காரியத்தை விளக்கிக் காட்டுகிறார். விஞ்ஞான உலகம் இதைதான் **'Second Law of Thermodynamics'** என்று குறிப்பிடுகிறது. இந்த விஞ்ஞான விதி என்ன சொல்லுகிறதென்றால்; "ஒரு குறிப்பிட்ட அளவுள்ள சக்தி மற்றொரு சக்தியாக மாற்றப்படும்போது, அந்த சக்தியில் ஒரு பகுதி வீணாகிப் போகிறது." இந்த சக்தியிழப்பு பூமியில் தொடர்ச்சியாக நடைபெற்றுவருவதால், பூமி படிப்படியாக கீழான நிலைமைக்குச் சென்று கொண்டே இருக்கிறது.

இப்படிப்பட்ட பிரச்சனை பூமிக்கு ஏற்பட்டுவிட்டதால், பூமியின் இயற்கை தன்மையில் எப்படிப்பட்ட மாற்றங்களெல்லாம் நடக்கப் போகிறது என்றும், அதனால் மனிதனுக்கு என்னென்ன சம்பவிக்கப்போகிறது என்பதையும் சொல்லுகிறார். பிரமாணம் மாற்றப்பட்ட பூமியின் மீது பிரச்சனைகளை எதிர்கொண்டு மனிதன் எப்படி வாழப்போகிறான் என்பதையும் விளக்குகிறார். சில மாற்றங்களை ஏற்படுத்துகிறார்; அதை ஏற்றுக்கொண்டு பூமியின் சாபத்தோடு அனுசரித்துப் போகத்தக்க மாற்றங்களையும் மனிதனில் ஏற்படுத்துகிறார். ஏதேனிலிருந்த வாழ்க்கை முறைமையை மாற்றி, வேறுவிதமான ஏற்பாடுகளைச் செய்கிறார். பழங்களை மட்டுமே சாப்பிட்டு வந்த மனிதன்; மாமிசம் சாப்பிட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டதால், அதற்கேற்றபடி அவனில் மாற்றங்கள் **(digestion processing)** செய்கிறார். இந்த ஒரு காரியத்தில் மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாகவே மனிதனின் உச்சந்தலை துவங்கி உள்ளங்கால் வரையிலும், பூமியின் சகல சாப வெளியீடுகளையும் ஏற்றுக்கொண்டு, அதற்கேற்றபடி மாற்றிக்கொள்ளும் மாற்றங்களை செய்கிறார்.

மனிதனின் சரீரம் எத்தகைய சூழ்நிலைக்கும் தக்கவாறு தன்னை மாற்றிக் கொள்ளப் பழகியது, இன்றளவும் இந்தக் காரியங்கள் மனிதனின் உடலில் நடந்து வருகிறது. மனிதனில் மட்டுமல்ல, சகலவிதமான உயிரினங்களிலும், தாவரங்களிலும், இத்தகைய மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. *"ஆ! தேவனுடைய ... ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! ... அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! ரோமர். 11:33"* "தேவனைப் போலவே உருவாக்கப்பட்டிருக்கும் மனிதனுடைய ஞானம், அறிவு அப்படியே மிகவும் ஆழமானதுதான்! நாம் தேவனை சரியானபடி அறிந்து கொண்டு; அதே வெளிச்சத்தில் நம்மையும் அறிந்து கொள்ளும்போது, அந்த அறிவு, ஞானம் நம்மில் செயல்பட ஆரம்பிக்கிறது." தேவனுடைய இரகசியங்களை அறிந்து கொள்ள முடிகிறது, அதை வெளிப்படுத்தவும் முடிகிறது. இயற்கையிலும் (பூமி) மனிதனின் சரீரத்திலும் ஏற்படும் இந்த மாற்றங்களைத் தவறாகப் புரிந்து கொண்ட பரிணாமவாதிகள் தவறான கோட்பாடுகளை வகுத்து விட்டார்கள், அவ்வளவுதான்!

உயிரினங்களில் சிம்பன்சி, பெங்குயின், எறும்பு, நாய், திமிங்கலம், எலி ஆகியவைகள் அதிகப்படியான மூளைவளர்ச்சியுடன் புத்திசாலித்தனமாக செயல்படுவதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். இந்த வரிசையில் தற்சமயம் காகமும் சேர்க்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளில் காணப்படும் ரூக் என்னும் ஒருவகை காக்கையினத்தின் செயல்பாடுகளில் அதிகப்படியான புத்திசாலித்தனம் வெளிப்பட்டதை கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒரு சிறிய கைப்பிடியுடன் கூடிய சிறிய வாளியில் காக்கையின் உணவான சில புழுக்களை வைத்தனர். பிறகு நேராக நிறுத்தப்பட்டிருந்த நீண்ட கண்ணாடிக்குழாய்க்குள் அந்த வாளியை வைத்தனர். அருகில்

சில மெல்லிய கம்பிகளையும் போட்டு வைத்தனர். புழுவைப் பார்த்ததும் காக்கைகள் அதை கொத்த முயன்றன. தடைகளை உணர்ந்ததும் யோசிக்கத் தொடங்கின. பிறகு அருகில் கிடந்த கம்பியை எடுத்து அதை அலகால் நெம்பி கொக்கிபோல் அமைத்து, அதை உபயோகித்து கண்ணாடிக்குழாய்க்குள் இருந்த வாளியை கொக்கியில் கோர்த்து; ஆச்சரியப்படும் அளவில் மிக சிறப்பாக செயல்பட்டன!

அடுத்தபடியாக, பாறைக்குள் இருக்கும் தேரைத் தவளைக்கு எப்படி உணவு கிடைக்கிறது? அது எப்படி உயிர் வாழ்கிறது? என்ற காரியங்கள் மிக வினோதமாக இருந்து வந்து. அதற்கான காரணத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். குயின்ஸ்லாந்து யுனிவர்சிட்டியை சேர்ந்த விஞ்ஞானிகள் "சைகிலேரனா ஆல்பகட்டடா" என்ற இன தவளையை ஆராய்ச்சி செய்தனர். தவளையின் உடலில் உள்ள செல்களின் ஆற்றல் மையமான மைட்டோக்காண்ட்ரியா தனக்கு தேவையான சக்தியை தானாகவே தயாரித்துக் கொள்கிறது. அதாவது தாவரங்கள் தங்களுக்கு தேவையான சக்தியை தயாரித்துக் கொள்வதை போல. இந்த தேரைத் தவளையினங்கள் தூங்கும்போது அதன் உடலில் இத்தகைய இரசாயன மாற்றங்கள் ஏற்பட்டு சக்தியை உருவாக்குகிறது. இதனால் எவ்விதமான வேலையோ, உடல் அசைவுகளோ, உணவுகளோ இல்லாமல் உயிர்வாழும் ஆற்றலை பெற்றுக் கொள்கிறது!

ஆஸ்திரேலியாவில் காணப்படும் "பவ்வர்" என்ற பறவையினத்தைச் சேர்ந்த ஆண் பறவைகள் தீப்பிடிக்காத கூடுகளை அமைத்து அவைகளில் வசிக்கின்றன. எலும்புத்துண்டுகள், கற்கள், ஓடுகள், பழத்தோல்கள், தீப்பற்றாத தன்மையுடைய இலைகளை கலந்து கட்டுகின்றன. இவ்வாறாக தீ விபத்துகளில் இருந்து தப்பித்துக் கொள்கின்றன. தமிழ்நாட்டில் மாஞ்சோலை எஸ்டேட் மலையடிவாரங்களில் மக்காச்சோளம் பயிரிடப்படுகின்றன. அவற்றை யானைகளிடமிருந்து பாதுகாப்பதற்காக விவசாயிகள் மின்சார வேலிகள் அமைப்பதுண்டு. இதனால் சில யானைகள் உயிரிழந்ததை கவனித்த சில புத்திசாலி யானைகள் செய்த காரியம் ஆச்சரியமானது. பெரிய மரக்கிளைகளை உடைத்து; அதனால் மின்வேலிகளை அடித்து அறுத்து அப்புறப்படுத்திவிட்டு, உள்ளே நுழைந்து மக்காச்சோளத்தை ஒரு (கும்பி)கை பார்த்தன! இந்த சில உயிரினங்கள் என்று மட்டுமல்ல, பூமியிலுள்ள சகல ஜீவராசிகளுமே பிரச்சனைக்குள் மாட்டிக்கொள்ளும்போது, மிக அவசியமான நேரங்களில், முக்கியமாக இன்றைக்கு இதுதான் உணவு, வேறு வழியில்லை என்ற சூழ்நிலை உருவாகும்போது (சூழ்நிலை கைதியாகும் போது) அவைகள் தங்களுக்கென்று இருக்கும் அளவீட்டு அறிவை மீறி அதிகப்படியான புத்திசாலித்தனத்துடன் செயல்பட்டு, போராடி ஜெயிக்க முயற்சிக்கின்றன, பெருமளவில் ஜெயிக்கவும் செய்கின்றன. அப்படி அவை ஜெயித்து வருவதால் தான் 20,00,000–க்கும் மேற்பட்ட ஜீவராசிகள் இன்றளவும் பூமியில் வாழ்ந்து வருகின்றன!

சாதாரணமான உயிரினங்களே இப்படி செயல்படுமானால் ... தேவனைப் போல படைக்கப்பட்டிருக்கும் மனிதன் ஏன் முயற்சிக்கமாட்டான்? சாபம் விழுந்த பூமியின் மேல் சூழ்நிலைக் கைதியாக்கப்பட்டான் மனிதன்! என்றாலும் மனிதனுக்கு வேறு வழியில்லை, அவனுக்காக கொடுக்கப்பட்டிருப்பது இந்த பூமிதான், அதில் எத்தனை பிரச்சனைகள் இருந்தாலும் வாழ்ந்து தான் ஆக வேண்டும். மனிதன் உடனே சோர்ந்துபோய் நாடியில் கை வைத்துவிட்டு உட்கார்ந்து விடவில்லை. ஏதேனை விட்டு வெளியேறிய நிமிஷம் முதல் அவனுடைய போராட்டம் தொடங்கியது... நடந்தது... நடக்கிறது... முடியவும் போகிறது. தேவனை சரியான விதத்தில் அறிந்து கொண்ட புதிய ஏற்பாட்டின் புதிய உடன்படிக்கையின் பிள்ளைகளைப் பொறுத்தவரையில் போராட்டம் முடிந்தும் விட்டது, அல்லேலூயா!

பூமியின் சாபத்துடன், சாத்தானுடன் போராடி போராடி ஒருவழியானாலும், அயராது உழைத்து, வியர்வையை வாளியில் பிழிந்து, தன் விதைப்பின் மேல் ஊற்றினான் மனிதன்! தனக்குள் இருக்கும் தெய்வத்துவத்தைப் பயன்படுத்தி சாத்தான் தோற்கடிக்கப்படாத காலங்களிலும் ஜெயித்தான் மனிதன்! பழைய ஏற்பாட்டின் காலத்தில் தற்காலிகமாக கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் உதவியுடன் போராடி சாதித்தான். அதுமட்டுமா, சாத்தானுடைய ஆளுகைக்குட்பட்ட பூமியில் இருந்து கொண்டே, அவனுக்கு எதிராக என்னவெல்லாம் செய்ய முடியுமோ அத்தனையையும் செய்தான்! தீர்க்கத்தரிசனம் உரைத்தான், தேவனுடைய சித்தம் செய்தான். பழைய உடன்படிக்கையின் சாபத்திற்குள் இருந்து கொண்டே தீர்க்கத்தரிசனம் உரைத்து; இயேசுவை பூமியில் பிறக்க வைத்து, புதிய சகாப்தத்தையே படைத்தான். இயேசுவின் மூலமாக சிலுவையில் புதிய உடன்படிக்கை மலர காரணமானான்! இவைகளையெல்லாம் பழைய ஏற்பாட்டின் மனிதர்கள் செய்யும்போது இயேசு அவர்களுக்குள் வாசம் செய்யவில்லை, நிலையான பரிசுத்த ஆவியின் அபிஷேகமும் கிடையாது, அந்நிய பாஷைகள் கிடையாது ... இப்படியாக எத்தனையோ மழுங்கடிக்கப்பட்ட சாத்தியக்கூறுகள் நிரம்பிய சூழ்நிலையில் முன்னேறினான்.

பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களை, நம் முற்பிதாக்களை நான் பலவேளைகளில் நன்றியோடு, கண்ணீரோடு நினைப்பதுண்டு. நாம் புதிய உடன்படிக்கையின் பொற்காலத்துக்குள் வந்திருக்கிறோமென்றால், அதற்கு அவர்களின் பாடுகளும், தீர்க்கத்தரிசன வார்த்தைகளும்தான் முக்கிய காரணம். *"உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ் சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள்; தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். தங்கள் நிமித்தமல்ல, நமது நிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; ... 1 பேதுரு. 1: 10, 11, 12."*

அவர்களுடைய சூழ்நிலை அவர்களுக்கு அறிவிக்கப்பட்டபோது வேதனைப் பட்டாலும் நமக்காக அவற்றை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார்கள்! *"இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளை கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள். எபி. 11:13." இப்படியாக பழைய ஏற்பாட்டின் நம் முற்பிதாக்கள் பல வேதனைகளை அனுபவித்தார்கள். வாக்குத்தத்தங்கள் தங்களுக்கு சொந்தமாகாது என்று அறிந்தும், தங்களுடைய பின் சந்ததிகளான புதிய ஏற்பாட்டின் மனிதர்கள் அவற்றை பெற்றுக் கொள்வார்கள் என்று அறிந்து ஆறுதலடைந்தார்கள். தங்களால் முடியாமல் போன காரியங்களை அவர்கள் சாதிப்பார்கள் என்ற ஆறுதலோடு மரித்தார்கள்.*

பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களுக்கும் தேவ இரகசியங்கள் வெளியாக்கப்பட்டது தான். என்றாலும் அவர்களால் எதுவும் செய்ய முடியாமல் போனது. காரணம் பூமியின் சாபமும், சாத்தானும். என்றாலும் கிறிஸ்து வெளிப்படவும், பூமியை மீண்டும் ஆதி மேன்மைக்குக் கொண்டு செல்லும் ஒரு புதிய சந்ததி உருவாக வேண்டும் என்பதற்காகவும் பரிசுத்தாவியானவர் அவர்களைக் கருவியாக பயன்படுத்தினார்! *"அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார். எபி. 11: 40"*

தன்னுடைய வழிகளை தெரிந்து கொள்ளாமல் சீர்கெட்டுப்போன மனிதனின்

வழிகளுக்குள் அவர் இறங்கி வருகிறார்! தேவனின் மனதுருக்கத்தை நினைத்து ஆனந்த கண்ணீர் வடியுங்கள்! அன்பே உருவான தெய்வத்தை, தப்புத்தப்பாக ஏடாகூடமாகப் புரிந்து கொண்டு; தேவன் அன்புள்ளவர்தான், ஆனால் பட்சிக்கிற அக்கினி என்று விளக்கவுரை கொடுத்தால்? ஒரு ரூபாய் நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பது போல தேவன் இருக்கிறாராம். ஒரு நாணயத்தின் ஒரு பக்கம் நல்லதாகவும், அடுத்தப் பக்கம் கெட்டதாகவும் இருந்தால் அந்த நாணயம் செல்லாக்காசாகிவிடுமே! கவனியுங்கள், நாணயத்தின் இரண்டு பக்கமுமே நல்லதாக இருந்தபடியால்தான் கடைக்காரன் அதை வாங்கிக் கொண்டு சாக்லேட் கொடுக்கிறான்! தேவனுடைய பரிசுத்த தன்மை அக்கினிக்கு ஈடாகச் சொல்லப்படுகிறது. அந்த பரிசுத்த அக்கினி பூமியின் சாபத்தால் ஏற்பட்ட எல்லா கேடுகளையும் அழித்துப் போடுகிற (சுட்டெரிக்கிற) தாயிருக்கிறது. இந்த ரீதியில்தான் தேவனைப் பற்றி வேதத்தில் சொல்லப்படுகிறது.

தேவனுடைய செயல்கள் எல்லாமே அவருடைய அன்பையும், இரக்கத்தையும் சார்ந்தே வெளிப்படுகிறது. தேவன் தன்னைப் போலவே ஞானமுள்ளவனாக மனிதனை உருவாக்கியபோதிலும்; அந்த ஞானம் செயல்படுத்தப்படாமல், ஊக்குவிக்கப்படாமல் (activate) இருந்ததால் அவனால் தேவனைப் புரிந்து கொள்ளமுடியாமல் போனது. மட்டுமல்ல, தேவனைத் தவறாகப் புரிந்து கொண்டதால் முதல் கோணல் முற்றிலும் கோணல் என்ற சூழ்நிலை உருவானது. பரிசுத்தாவியானவர் இந்தக் கடைசி காலங்களில் தன்னுடைய ஆளுகைக்குட்பட்டவர்களுக்கு வெளிப்பாடுகளைத் தந்து கோணலானவைகளை செவ்வையாக்கி வருகிறார். *"பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடுமுரடானவைகள் சமமாக்கப்படும் ... ஏசா 40:4"* "... என்று ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தில் எழுதியிருக்கிற பிரகாரம், அவன் (யோவான் ஸ்நானன்) *யோர்தான் நதிக்கு அருகான தேசமெங்கும் போய், பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கித்தான். (லூக். 3:5,6)"*

சூழ்நிலைக் கைதியாக்கப்பட்ட இந்த பூமியையும், அதன் நிறைவையும் விடுதலையாக்கவே நாம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறோம். அதற்கான சூத்திரத்தை (formula) இயேசு சிலுவையில் எழுதினார். அந்த சூத்திரத்தை பிரயோஜனப்படுத்தி நாம் கணக்குப் போட வேண்டும். பழைய வாத்தியார் நம்மை விசுவாசத்திற்குள் நடத்தி விட்டு வேலையில் இருந்து ஓய்வு (retirement) பெற்று சென்று விட்டார். அவரை ஓய்வெடுக்க விடாமல் மீண்டுமாக கூட்டி வந்து evening class, tuition எடுக்க வைத்தார்கள். இப்படியாக ஆதி அப்போஸ்தல திருச்சபைகளில் மீண்டுமாக நியாயப்பிரமாணம் நுழைந்தது. வேதம் இந்த உபதேசத்தை புளித்துப் போன (கெட்டு, இனிமேல் உபயோகப்படுத்துவதற்கு உதவாத) மாவுக்கு ஒப்பீடாக சொல்லுகிறது.

"இயேசு அவர்களை நோக்கி: *பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்றார். மத். 16:11 ... அவர் அப்பத்தின் புளித்தமாவைக்குறித்து... சொல்லாமல், பரிசேயர், சதுசேயர் என்பவர்களின் உபதேசத்தைக்குறித்தே அப்படிச் சொன்னார் என்று அறிந்து கொண்டார்கள். மத். 16:12"* அதாவது நியாயப்பிரமாண உபதேசத்தைக் குறித்தே அப்படிச் சொன்னார். கணக்கு சரியாக வராததினால் தான் நியாயப்பிரமாணத்தை இயேசு சிலுவையில் முடித்து வைத்தார். *"நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து; ... " "துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துக்கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிச்சிறந்தார். கொலோ. 2:14,15"* நமக்கு எதிரிடையாக, விரோதமாக இருந்த நியாயப்பிரமாணக் கட்டளைகளை சிலுவையில் தோற்கடித்து, இயேசு வெற்றி பெற்றார். இயேசு கிறிஸ்து

தோற்கடித்த காரியங்களை மீண்டுமாகக் கொண்டு வந்து ஜெயிக்க முயற்சித்தால் எப்படி நடக்கும்? பாவத்திலிருந்து விடுதலையாக, சபையில் கொடுக்கப்படும் உபதேசங்களும், அதை கேட்பவர்களின் முயற்சிகளும் பகல் கனவாகி பறந்து போனதற்கு காரணம் இதுதான்.

சாபத்தால் சூழ்நிலை கைதியாக்கப்பட்டிருக்கும் இந்த பூமியும் அதன் நிறைவும், சபையும் அதன் விசுவாசிகளும் இப்படிப்பட்ட பிரசங்கங்களால் இன்னும் அதிகப்படியான சிக்கலில் மாட்டிக் கொண்டு சங்கடப்படுகிறார்கள். பூமியின் சகல மக்களையும் இந்த தர்மசங்கடங்களிலிருந்து விடுவிக்க ஏற்ற ஒரே ஆயுதம்; இயேசு சிலுவையின் மூலமாக கொண்டு வந்த புதிய பிரமாணம் தான். இது ஒரு ஒப்பந்தம் போல செயல்படுகிறது. முதல் மனிதனால் ஏற்பட்ட சாபத்தால் பாவத்துக்குள்ளாகி தத்தளித்த மனுக்குலத்தை சரிப்படுத்த, நல்வழிப்படுத்த தேவன் பத்துகட்டளைகளை எழுதிக் கொடுத்தார். என்றாலும் அதனால் முழுமையான பலனைத் தர முடியவில்லை. இதில் ஒரு பிரச்சனை என்னவென்றால் ஒரு கட்டளையை மீறினாலும் எல்லாவற்றையும் மீறினதைப் போல அர்த்தமாகிவிடுகிறது. ஒன்பது கட்டளைகளை மனிதன் சுயகட்டுப்பாட்டினால் ஐம்புலன்களையும் அடக்கி ஓரளவுக்கு கைக்கொள்ள முடிந்தது. ஆனால் பத்தாவது கட்டளையை நிறைவேற்ற முடியாமல் போனது. ஏனென்றால் அது "இச்சியாதிருப்பாயாக" என்றது. யாத். 20:17. ஏனென்றால் அது இருதயத்திலிருந்து புறப்பட்டு வருகிற ஒரு காரியமாயிருக்கிறது.

*"பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய வீட்டையும், அவனுடைய நிலத்தையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும் ... யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார். உபா. 5:21"*

அதனால் அதை ஐந்தறிவினால் மேற்கொள்ள முடியாமல் போகிறது. அதை மேற்கொள்ள வேண்டுமானால்; அதற்கு ஆறாவது அறிவு ஒன்று தேவையாயிருக்கிறது. அந்த 6–வது அறிவு மாம்சம் சார்ந்த அறிவாக இருந்தால்; அதை பிரயோஜனப்படுத்தி இச்சை என்ற பாவத்தை ஜெயிக்க முடியாது. அதனால் அந்தப் பாவத்தை ஜெயிக்க உதவி செய்யப்போகிற 6வது அறிவு ஆவிக்குரியதாயிருக்க வேண்டும். அந்த ஆவிக்குரிய அறிவுதான் வெளிப்பாட்டின் அறிவு. அந்த அறிவு இயேசுவின் மூலமாக, அவர் சிலுவையில் செய்து முடித்த காரியங்களின் மூலமாக, புதிய உடன்படிக்கையின் மூலமாக நமக்கு கிடைக்கிறது.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் – மோசேயின் மூலமாக நியாயப்பிரமாணம் வழங்கப்பட்ட அந்த காலக் கட்டத்தில் இந்த அறிவு வேலை செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாமலிருந்தது. ஏனென்றால் இயேசு மனிதனாக பூமிக்கு வரவில்லை, சிலுவையில் சாத்தானை ஜெயிக்கவில்லை, புதிய உடன்படிக்கை வழங்கப்படவுமில்லை. இப்படியாக ஆயிரக்கணக்கான வசதிகள் இல்லை... இல்லை... இல்லை... இல்லை! மனிதனால் பாவத்தை ஜெயித்து வாழ முடியவில்லையென்பதற்காக, போனால் போகிறது, மனிதன் பாவத்தோடேயே வாழ்ந்து முடிக்கட்டும் என்று தேவன் அப்படியே விட்டுவிடவில்லை. இந்தப் பிரச்சனைக்கான மாற்று ஏற்பாட்டைச் செய்தார். பாவம் செய்து தேவ மகிமையை இழந்த மனுக்குலத்தை மீண்டுமாக அந்த மகிமைக்குள் கொண்டு வருவதற்காக, மீண்டுமாக மனிதனுக்கு தேவ சாயலைக் கொடுப்பதற்காக, தன்னுடைய சொந்தப் பிள்ளைகளாக மாற்றுவதற்காக, மீண்டுமாக பூலோகத்தை பரலோகமாக இயங்க வைப்பதற்காக தேவன் செய்த காரியம் நாம் கொஞ்சமும் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. *"... அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை (captain of their salvation) உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது. எபி. 2:10."* நம்

தேவன் தன் குமாரன் இயேசுவின் மீது வைத்திருந்த நேசத்தின் அதே அளவீட்டின்படியே நம்மையும் நேசித்ததினால்; இந்த மகத்தான காரியத்தை செய்ய அவர் யோசிக்கவில்லை, தயங்கவில்லை. தன்னுடைய செல்லக் குமாரனாகிய இயேசு, சிலுவையில் 100 சதவிகிதம் மனிதனாக்கப்பட்டிருந்த இயேசு கதறிய போது; தனக்கு ஏற்பட்ட மனவேதனைகளை, வியாகுலங்களை நம் பிதாவாகிய தேவன் வேதத்தின் எந்த இடத்திலும் வெளிப்படுத்தவில்லை! அதை வாசித்து நாம் வருத்தப்படக்கூடாது என்பதாலோ? என்னமோ?!

சூழ்நிலைக் கைதியாக்கப்பட்ட பூமியின் கைவிலங்கை உடைத்து, அதை விடுதலை செய்ய என்னென்ன தேவையோ எல்லாவற்றையும் தேவன் தன் குமாரன் மூலமாக சிலுவையில் ஏற்படுத்தி முடித்தார். அதை ஆராய்ந்து எடுத்து, சரியானபடி உபயோகித்து, கைவிலங்குகளை உடைக்கவே நாம் வைக்கப்பட்டிருக்கிறோம். பரிசுத்தாவியானவர் நமக்குள்ளே இருந்து அதற்கான வழிமுறைகளையும் சொல்லிக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். எவ்வளவுக்கெவ்வளவு இந்தக் காரியத்தைத் துரிதமாக செய்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நமக்கும், நம் எல்லைக்குட்பட்டவர்களுக்கும், தேசங்களுக்கும், இயற்கைக்கும், ஏன் பரலோகத்துக்கும் நல்லது! ஏனென்றால் பரலோகத்தின் **extension** தான் நாம் வாழும் பூலோகம். அதனால் இங்கே பிரச்சனை என்றால்; அங்கே அதன் தாக்கம் கண்டிப்பாக இருக்கும். அதனால் பூமியின் பிரச்சனைகளின் உச்சத்தில் **(climax)** நிற்கும் நாம் கண்டிப்பாக செயல்பட்டே ஆக வேண்டிய நேரமிது.

*"நம்முடைய வேலை கஷ்டமானதும் அல்ல. என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது ... மத். 11:30 என்கிறார் இயேசு."* எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டு, உள்ளே வைத்து பூட்டி சாவியை நம் கையில் கொடுத்துவிட்டார் இயேசு. *"பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்தில் நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும் ... கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார். மத். 16:19."* கவனியுங்கள் நாம் பூலோகத்தில் செய்யும் காரியங்கள் பரலோகத்தை தாக்குகிறது என்பதை இந்த வசனம் நமக்கு நிச்சயமாக அறிவிக்கிறது. கண்காணாத பரலோகம் கண்களால் காணக்கூடிய பூலோகத்தை ஆளுகை செய்வதால்; நிச்சயமாக ஒன்றுக்கொன்று அதிக தொடர்புடையதாக, பிரிக்க முடியாத ஒன்றாக இருக்கிறது. சாவியை மட்டுமல்ல, **Key word**-ம் நமக்கு இரகசியமாக கொடுத்திருக்கிறார். திறந்து பார்ப்போம் வாருங்கள்!

## தேவ அன்பும் மனித அன்பும்:

ஒரு **strawberry** பழத்தைப் பறித்து கையில் வைத்துக் கொண்டு; அதன் சிவப்பு நிறத்தைப் பற்றியும், அதன் அமைப்பைப் பற்றியும், அதன் **chemical formula** பற்றியும் பேசிக்கொண்டிருந்தால் அதன் ருசி தெரியுமா? நிச்சயமாகத் தெரியாது. அப்போ செய்ய வேண்டியது என்ன? அந்த சிவப்பு பழத்தை வாயில் போட்டு சுவைத்து சாப்பிட வேண்டும். அப்படி சாப்பிட்டவன் இனிமேல் ஸ்ட்ராபெர்ரி பழத்தை சிவப்பு பழம் என்று சொல்லமாட்டான். அழகான, சிவப்பான, ருசியான பழம் என்பான்! *"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்; ... சங். 34:8"!*

தேவனுடைய அன்பு இன்று நேற்று உண்டானதல்ல. உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே நம்மில் அன்பாயிருந்தார். அதனால் தான் நமக்காக தன்னுடைய பரலோகத்தை விஸ்தாரமாக்கி; அதன் ஒரு பகுதியை பூலோகமாக்கி கொடுத்தார். நமக்கு மண்ணால் ஒரு சரீரத்தை உருவாக்கி அதற்குள் குடியிருக்கும்படி செய்தார். தன்னுடைய சாயல் + ரூபத்தில் நம்மை உருவாக்கியதிலிருந்தே அவருடைய அன்பு எவ்வளவு பிரமாண்டமானது என்பது புரிந்திருக்க வேண்டுமே! தன்னைப் போலவே மனிதர்களை

படைக்க அவர் யோசிக்கவில்லை. அவருடைய மகத்தான அன்பு பூமியையும் அதன் நிறைவையும் நமக்குத் தந்தது, அதன் மீது ஆளுகையையும் தந்தது. நாம் அதை கோட்டை விட்டு விட்டதால் அவர் அன்பு மாறிவிடவில்லை. அதே அன்பு தன்னுடைய குமாரனை அனுப்பி ஆளுகையை நமக்கு மீட்டுத் தந்தது.

அந்த இரகசியத்தை நாம் தெரிந்து கொள்ள முடியாமல் கண்கள் குருடாக்கப்பட்டிருந்தபோதும்; அந்த அன்பு நமக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தது. அந்த அன்பு தன்னுடைய பரிசுத்த ஆவியை நமக்குத் தந்து; சகலத்தையும் நமக்கு கற்றுத் தந்தது. அப்படி நாம் கற்றுக் கொண்ட காரியங்கள் அநேகம். தேவனுடைய அன்பு ஆவிக்குரியது; அதாவது இயற்கைக்கு அப்பாற்பட்டது (that cannot be explained by natural laws - supernatural) அன்பு கண்களால் காணக்கூடாதது. நாம் முன்னதாக பார்த்த மனிதன், விசுவாசம், வார்த்தை போன்ற காரியங்களைப் போலவே இதுவும் ஆவிக்குரிய ரீதியிலானது.

இந்த அன்பின் அடிப்படையிலான சில சத்தியங்களை விளக்கி முடிக்கலாம் என்றிருக்கிறேன். இது வாலிப பிள்ளைகளுக்கு பிரயோஜனமாயிருக்கும், மறுரூப அனுபவத்துக்குள் அவர்களைக் கொண்டு வரும். அன்பு, அது ஆவிக்குரியது. உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே தேவ அன்பு இருந்ததால்; அது உலகத்திலிருந்து உண்டானதல்ல என்று அறியலாம். ஆதியில் ... ஏதேனில் இந்த அன்பு காணப்பட்டது. தேவன் தன்னுடைய தான் உருவாக்கிய ஆரம்ப மனிதர்களான ஆதாம், ஏவாளுடன் இந்த ஆவிக்குரிய ரீதியிலான அன்புடன் தான் உலாவிக்கொண்டிருந்தார். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இடையிலும் இவ்வகையான அன்புதான் காணப்பட்டது.

பூமி சாபத்தால் தாக்கப்பட்டபிறகு, சாப பிரமாணம் பூமியின் மேல் இயங்க ஆரம்பித்தது. அந்த சாபம் பூமியின் மீதிருந்த எல்லாவற்றையுமே ஊடுருவியது, பாதிப்புக்குள்ளாக்கியது. அன்பையும் அது ஊடுருவித் தாக்கியது என்பதை சொல்லாமலேயே புரிந்து கொள்ளலாம். ஆரம்பத்தில் இருந்த அந்தத் தெய்வீக அன்பில் குறைவுகள் காணப்பட துவங்கி; சாபத்தால் அதன் தரம் குறையத் துவங்கியது. முடிவில் அது மனுஷீக அன்பாக உருமாற்றம் அடைந்தது. சாதாரணமாக நாம் உலக மனிதர்களிடமும் சகல உயிரினங்களிடமும் இதைப் பார்க்க முடியும். எல்லா மனிதர்களுமே தன் பிள்ளைகளை நேசிக்கின்றனர்; பிள்ளைகளுக்காக தன் உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். தேவனை அறியாத உலக மனிதர்கள் கூட அன்புக்காக ஏங்குகிறார்கள். எத்தனையோ உலக வழிகளில் அதை மற்றவர்களுக்கு கொடுப்பதிலும், மற்றவர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதிலும் கவனமுள்ளவர் களாயிருக்கிறார்கள்.

தேவனிடமிருந்து அவரைப் போலவே இருக்கும் எந்தவொரு மனிதனுக்குள்ளும் கடந்து வரக்கூடிய தெய்வீக சுபாவம் இது. கோழி தன் குஞ்சுகளை இறக்கையின் அடியில் வைத்து அணைத்துக் கொள்கிறது. திமிங்கிலங்கள் முதலாய்க் ... தங்கள் குட்டிகளுக்கு பால் கொடுக்கும்; ... புல. 4:3 அவருடைய சாயலில் படைக்கப்படாத உயிரினங்களிடத்தில் கூட இந்த அன்பு பிரதிபலிக்கிறது. தேவனுடைய சிருஷ்டிப்பு எதுவாக இருந்தாலும் சரி, அவற்றால் தனக்குள் பதிந்து கிடக்கும் அன்பை வெளிப்படுத்தாமல் இருக்க முடியாது. நாய்கள் மனிதனின் நண்பன் என்று பெருமையுடன் போற்றப்படுகின்றன. இவை தன் எஜமானன் தங்கள் மேல் செலுத்தும் அன்பைவிட மிக அதிகப்படியான அன்பை தங்கள் எஜமான்கள் மேல் செலுத்துவதாக ஓர் ஆய்வு தெரிவிக்கிறது.

தேவனுடைய அன்பு இவ்விதமாக சாபம் விழுந்து போன மனுக்குலத்தால் தரம் குறைந்து போனது; நாளடைவில் சாத்தானால் கெடுக்கப்பட்டும் போனது. சாத்தான்

இந்தத் தெய்வீக அன்பை எதிர்மறையாக திருப்பி மெதுவாக காய்களை நகர்த்த ஆரம்பித்தான். அன்பு பலவித பரிணாம மாற்றங்களை அடைந்து கடைசியில் லௌகீக அன்பாக மாறியது. சுயநல அன்பு, மாயமான அன்பு (அன்பு காட்டுவதாக நடிப்பது), வஞ்சக அன்பு (காலுக்கு கீழ் குழி வெட்டுவது) என்றெல்லாம் மாறிப் போனது. கடைசியில் மனிதனின் இருதயத்தில் இருந்து புறப்பட்டு வரும் பாவங்களுக்கும் (காதல், காமம்) சாத்தான் அன்பு என்று விளக்கம் கொடுத்தான். அக்காலங்களில் கல்வெட்டுகள், குகை ஓவியங்கள், காவியங்கள், காப்பியங்கள் வழியாக இதற்கு விளக்கவுரை கொடுத்த சாத்தான்; இக்காலங்களில் பத்திரிக்கைகள்(கதைகள்), சினிமாக்கள், சீரியல்கள் மூலமாக விளக்கம் கொடுத்து வருகிறான். அவனுடைய விளக்கவுரையை உண்மையென்று நம்பிய அக்கால இராஜாக்கள் நாட்டை இழந்தார்கள்; இடைக்கால இராஜாக்கள் தாடி வளர்த்தார்கள், இக்கால இராஜாக்கள் என்ன செய்கிறார்கள் என்பது அவர்களுக்கே வெளிச்சம்! இந்த விதமான அன்பு மாம்சத்தின் கிரியைகள் பட்டியலில் வருகிறது. (கலா 5:19) இது பூமி தோன்றிய பிறகு உருவான அன்பு. ஆரம்பத்தில் ஏதேன் தோட்டத்தில் அன்பு ஆவிக்குரியதாகத்தான் இருந்தது. சாபம் பூமியைத் தாக்கிய பிறகு; பூமியில் உள்ள எல்லாமே பாதிப்பிற்குள்ளாகியது என்று பார்த்தோம். அதுபோலவே இந்த அன்பும் பாதிப்பிற்குள்ளாகியது. அதற்குப் பிறகு அது பூமிக்குரிய மாம்சீகமான சரீர சம்பந்தப்பட்ட அன்பாக மாறியது.

உண்மையான அன்பு பூமி உருவாவதற்கு முன்னதாகவே இருந்தது. எப்படியென்றால் அன்பே உருவான தேவன் உலகத்தோற்றத்திற்கு முற்பட்டவர். இந்த தெய்வீக அன்பு ஆவியின் கனிகள் பட்டியலில் முதலாவதாக வருவதை பார்க்கிறோம் (கலா. 5:22). அதாவது உண்மையான அன்பு உள்ளான ஆவிக்குரிய மனிதனிடமிருந்து வெளிப்படுகிறது. சாத்தானால் விஷக்கிருமிகள் ஏற்றி கெடுக்கப்பட்ட இக்கால சினிமா அன்பு; அது ஆவிமனிதன் தங்கியிருக்கும் பூமிக்குரிய மண் கூடாரமாகிய சரீரத்திலிருந்து வருகிறது. இரண்டுக்கும் சம்பந்தமே இல்லை, ஏணி வைத்தாலும் எட்டாது, ராக்கெட் விட்டாலும் போகாது!

நம்முடைய சரீரம் ஆவி மனிதன் தங்குவதற்காக தேவனால் வடிவமைக்கப்பட்ட ஒரு கூடாரம்தான் என்பதை மிகத் தெளிவாக புரிந்து கொண்டிருப்பவர்களுக்கு; எல்லாமே புரிந்திருக்கும். தேவன் அன்பாகவே இருக்கிறார். அதனால் அன்பு என்பது தேவனிடமிருந்து மட்டுமே மனிதனுக்குள் கடந்து வரக்கூடிய ஒரு குணாதிசயம். இந்த குணாதிசயம் ஆவியான தேவனிடமிருந்து மனிதனின் ஆவிக்குள் கடந்து வருகிறது. அதாவது ஆவிக்குரிய உள்மனிதனிடம் வருகிறது. அதனால்தான் இதை ஆவியின் கனி என்கிறோம்.

சாத்தான் உலகத் தோற்ற முதல் கொண்டு பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு ரீதியில், விதவிதமான யுக்திகளை கையாண்டு வாலிபர்களை ஏமாற்றி மோசம் போக்கியிருக்கிறான். பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களில் அநேகர் இந்த வஞ்சக வலையில் விழுந்தார்கள். “அவன் (தாவீது) ... அதிகமான மறுமனையாட்டிகளையும் ஸ்திரீகளையும் (more concubines and wives) கொண்டான்; ... 2 சாமு. 5:13.” அதாவது பல பெண்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டு; ஆனால் திருமணம் செய்யாமல் வாழ்வது. (a woman who lives with a man; but is not married to him - dated!) இது போல ஒன்றுக்கு மேற்பட்டவர்களை திருமணம் வேறு செய்திருந்தான்! பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவன் இதையெல்லாம் அனுமதித்திருந்தார் என்று வாய்கூசாமல் பிரசங்கங்கள் வேறு! வாயைக் கழுவுங்கள்! நம் தேவன் மகா பரிசுத்தர், கண்ட கண்ட அசிங்கங்களையெல்லாம் தேவன் அனுமதிப்பதாவது? அப்படியானால் ...? தேவன் காணாதவர் போலிருந்தார்; அவ்வளவுதான்! அதற்காக அவருக்கு எதுவும் தெரியாது என்று அர்த்தமல்ல!

*"அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார் அப். 17:30."* ஜனங்கள் தேவனைக்குறித்த அறிவில்லாமலிருந்த அக்காலச் சூழ்நிலை வேறு; தேவனே நமக்குள் வந்து தங்கியிருக்கும் இக்காலச் சூழ்நிலை வேறு. தாவீது தவறு செய்தானே? தேவனால் நற்சாட்சி பெற்றவனே அப்படிச் செய்தானே? என்று புரியாமல் பேசி பாவத்துக்கு சாக்குப் போக்குத் தேடக்கூடாது. தேவன் தனக்கு சித்தமில்லாத எதையும் அனுமதிக்கவும் இல்லை என்பதுதான் சத்தியம். எனக்கு கிடைத்த வெளிப்பாட்டின்படி நான் விருப்பமில்லாத எதையும் அனுமதிப்பதில்லை; போய்த் தொலையட்டும் என்று வேண்டுமானால் விட்டுவிடுவேன்!

புதிய ஏற்பாட்டிலும் இந்த பிரச்சனைகள் இருந்தது. கடந்த 100 வருட காலக்கட்டங்களில் சினிமா – காதல் என்ற கோட்பாட்டில் வாலிபர்களைக் கெடுத்த சாத்தான், இக்காலங்களில் நவீன தொழில்நுட்பங்களை தன்வசப்படுத்தி வாலிபப்பிள்ளைகளை சிக்க வைத்து, வாழ்க்கையை கெடுத்து, கொன்று வருகிறான். உலகம் கம்ப்யூட்டர் மயமாக்கப்பட்டிருக்கும் இக்காலத்தில், விண்வெளி செயற்கைக் கோள்களை (Satellites) தன் வசப்படுத்தியிருக்கும் சாத்தான், சினிமா தியேட்டர்களை minimize செய்து வீட்டுக்குள் கொண்டு வந்தான். இந்த மாய அன்பு, இன்னும் பல புதிய பரிமாண மாற்றங்களை சந்தித்து வருகிறது. இன்னும் சிறியதாக்கி கை தொலைபேசியில் (Cell Phone), மோதிரம், மூக்குக்கண்ணாடி (spectacle) வரையிலும் வந்திருக்கிறது. உலகமே வலைப்பின்னலுக்குள்(Internet) சிக்கிக் கொண்டு முழிக்கிறது *"...நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் (provoking lust) புரட்டி, ... யூதா. 1:4."*

இன்று நாம் கண்களால் காண்கின்ற சரீரம் மனிதனே அல்லவென்றும்; அவன் தங்கியிருக்கிற கூடாரம் தான் என்றும் பார்த்தோம். தேவன் மனிதனைத்தான் உண்டாக்கினார். ஒரே மனிதனுடன் நிறுத்திக் கொள்வது தேவனுடைய நோக்கமல்ல, ஒரு மனிதனுக்கு இவ்வளவு பெரிய பூமி தேவையுமில்லையே! பூமி 6,00,00,000,00,00,000,00,00,000 டன் எடையுடையது (ஆறு கோடி கோடி கோடி)!ஒரு மனிதனையும் ஒரு மனுஷியையும் அவர் படைக்கவில்லை. அவர் ஒரு மனிதனைத்தான் ஆணும் பெண்ணுமாக படைத்தார் என்று அறிகிறோம். ஆணைப் படைக்கும்போதே அவனுக்குள் ஒரு பெண்ணையும் வைத்து சேர்த்து சிருஷ்டித்து; பிறகு அவனுக்குள் இருந்து பெண்ணை தனியே பிரித்து எடுக்கிறார். பூமியின் மீது மனிதர்கள் பெருக வேண்டும் என்பது தேவனுடைய நோக்கமாயிருந்தது. ஆவி உருவத்தில் இருக்கும் ஒரு மனிதனை இந்தப் பூமிக்கு இறங்கி வரச் செய்யுமுன் அவன் குடியிருக்க தேவையான ஒரு கூடாரத்தை (உடலை) அவனுக்கென்று உற்பத்தி செய்து தயாராக வைக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. அதற்காக மனிதனின் உடலை மீண்டும் மீண்டுமாக மறுபதிவு செய்யும் ஒரு முறை (process) அவசியமாயிற்று. அதைத் தான் உருவாக்கிய ஒரு மனிதனைக் கொண்டு செய்வது சாத்தியமாகாது என்பதால் அவனிலிருந்து இன்னொரு வித்தியாசமான உடற்கூறுகளையுடைய ஒரு மனிதனை வெளியே எடுக்கிறார். கவனியுங்கள் பெண்ணும் ஒரு ஆண்தான்; அதாவது ஒரு குழந்தையை பெற்றெடுக்க வேண்டிய விதத்தில் வடிவமைக்கப்பட்ட கர்ப்பப்பையையுடைய ஒரு ஆண்தான்!!! அதாவது womb (கருப்பை) – wo(mb) + man - wo + man = woman !!!

ஆண், பெண் என்ற வித்தியாசம் கூடாரத்தில் மாத்திரம் தான். உள்ளே ஆவியாக இருக்கும் மனிதனுக்கு ஆண் பெண் என்ற வித்தியாசமெல்லாம் கிடையாது. கண்களால் காணக்கூடிய பூமியில் அவர்கள் வாழும்படி அனுப்பப்படுவதால்; வித்தியாசம் தெரியும் அளவில் கூடாரம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. ஆணைப் போல வடிவமைக்கப்பட்டிருக்கும் கூடாரத்திற்குள் வசிப்பவனும் மனிதன் தான்; பெண்ணாக

வடிவமைக்கப்பட்டிருக்கும் கூடாரத்தில் வசிப்பவனும் மனிதன் தான்! தேவன் இந்த கூடாரத்தை வடிவமைத்தபோது அது தேவமகிமை நிறைந்ததாக இருந்தது. வார்த்தைகளால் விளக்க முடியாத அழகுடையதாக இருந்தது! சாபம் வந்த பிறகுதான் மனிதன் அந்த மகிமையை இழந்து போனான் என்று அறியுங்கள். அதற்கு பிறகு மனிதனின் அழகு அழிந்தது, இளமை அழிந்தது, வயது ஏற ஏற உடலின் தோல் சுருங்கி, உயரம் குறைந்து, உருக்குலைந்து கடைசியில் மண்ணோடு மண்ணாகும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டது. தேவன் இப்படிப்பட்ட தரம் குறைந்த நோக்கத்தோடு மனிதனை உருவாக்கவில்லை. அவன் என்றென்றும் அழகோடு, தன்னுடைய மகிமையோடு சாகாமல் நித்தியமாக வாழத்தகுந்த விதத்தில்; அதற்கேற்ற உடலமைப்புடன்தான் படைக்கப்பட்டான்.

ஆண் கூடாரத்தையும், பெண் கூடாரத்தையும் உபயோகித்து இன்னொரு கூடாரத்தை உருவாக்கும் விஷயத்தில் தேவனுடைய முறைமை **(process)** என்னவென்பதும், அவர் அதைப் பற்றி என்ன, எப்படி திட்டமிட்டிருந்தார் என்பதெல்லாம் வேதத்தில் வெளிப்படையாக இல்லை தான்; ஆனால் அதைக்குறித்த வெளிப்பாடுகள் உண்டு! நிச்சயமாக இக்காலங்களில் நாம் அறிந்திருக்கும் முறைமை அல்ல, சாத்தானால் கொண்டுவரப்பட்ட பாவங்களின் முறைமைகளும் அல்ல. தேவன் ஏற்படுத்தின முறைமை மகிமையுடையதாக, அழகானதாக, பரிபூரணத்துவம் உள்ளதாகத்தான் இருந்திருக்கும்.

ஆனால் தேவன் இந்த முறைமையை செயல்படுத்தும் முன்னதாகவே மனிதன் பாவத்தில் விழுந்து பூமியைச் சாபத்தில் தள்ளிவிட்டுவிட்டான். ஏதேனின் கதவு பூட்டப்படுகிறது. பூமிக்குரிய கூடாரமாகிய சரீரம் தன் மகிமையை இழந்தது, சாபத்தால் பூமியின் சகல சட்டங்களும் எதிர்மறையாக திருப்பிவிடப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இந்த முறைமை நிறைவேறுகிறது. ஆதி. 4:1ல் செயல்படுத்தப்பட்ட இந்தக் காரியத்தில் நிச்சயம் மாற்றம் இருந்திருக்கும், குறைபாடுகள் இருந்திருக்கும், ஏகப்பட்ட – இருந்திருக்கும், நிச்சயமாக அது தேவன் திட்டமிட்டிருந்தபடி இருந்திருக்காது, அதன் **formula** கூட மாற்றப்பட்டிருக்கலாம்! சாத்தானின் ஆளுகைக்குள் இந்த காரியங்கள் நடைபெற்றதால் இந்த காரியங்கள் சொல்ல முடியாத அளவுக்கு மோசமாகிப் போயின. இன்று பூமியின் மீது நாம் அவைகளைப் பார்த்து புருவத்தை சுருக்கி, முகத்தை சுளித்து, வேதனைப்பட்டு, அதிர்ச்சியடைந்து வருகிறோம்!

மாம்சமும், இரத்தமும், எலும்புமான இந்த உடலைப் பார்த்து; இதுதான் மனிதன் என்று உலகம் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறது. மாம்சத்தின் கிரியைகள் பட்டியலில் முதலில் வரும் விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம் போன்ற பாவங்களுக்கு இந்த தவறான நினைப்பும் ஒரு காரணம். இவர்கள் இப்படி நினைத்துக் கொண்டிருப்பதற்கு காரணம் உள்ளான மனிதனைப் பற்றி எதுவுமே தெரியாததால். அப்படி எதுவும் தெரியாமல் போனதற்குக் காரணம்; தேவனைப் பற்றிய அறிவில்லாமை. தேவனைப் பற்றிய அறிவில்லாமல் போனதற்குக் காரணம்; பிரகாசமுள்ள மனக்கண்கள் இல்லாமல் போனதால்தான்; அதாவது உள்ளான மனிதனுடைய கண்கள்; அதாவது காணக்கூடாத மனிதனின் கண்கள். இப்படி கண்கள் பார்வையிழந்துப் போனதற்கு காரணம் சபையில் காணப்படும் தவறான உபதேசங்கள். தவறான நியாயப்பிரமாண **(old covenant)** உபதேசங்களால் சபையின் விசுவாசிகளின் பார்வையிழப்பை சரிசெய்ய இயலவில்லை. கடைசியில் குருட்டுப்பூனை விட்டத்தில் பாய்ந்த கதையாய் ...

"மனிதனின் இந்தக் கூடாரத்தைப் பார்த்து இச்சை கொள்ளும் விபரீத மனிதர்கள்... விநோதமான மனநோயாளிகள் பூமியெங்கும்!" இக்கால சினிமா உலகத்தின் கைகளில் இந்த விவகாரம் குரங்கு கை பூமாலையாக படாதபாடு படுகிறது. யாரைச் சொல்லியும் குற்றமில்லை; சாத்தான் அவ்விதமான தவறான அபிப்பிராயத்தை உண்டாக்கினான்.

வெளித்தோற்றத்தை வைத்து ஏதோ ஒன்றை தங்கள் விருப்பத்திற்கேற்றவாறு முடிவெடுத்து; அதுதான் சரி என்று தங்கள் மனதிலே நிலைநாட்டிக் கொள்ளும் செயல் **(wrong mind setting).** சாத்தான் தன் வஞ்சகப் பேச்சினால் ஏவாளை பல விஷயங்களில் ஏமாற்றினான்; அதிலே இந்த காரியமும் கலந்தே இருந்தது. சாபமாகிப் போன பூமியில் இந்த பாவம் விஸ்வரூபம் (ராட்சதனைப் போல பிரமாண்ட) எடுத்தது. மனிதர்களை விழுங்க ஆரம்பித்தது. தேவன் மனிதர்கள் நன்றாக இருக்க வேண்டும் என்று ஏற்படுத்தியிருந்த ஆசீர்வாதங்களையெல்லாம்; பூமியின் சாபம் விழுங்கி ஏப்பம் விட்டது. எதிர்மறையான கெட்ட விளைச்சலை அது கொடுத்தது; பாவம் அதை விழுங்கி பலவானாகிப் போனது.

இந்த பிரச்சனையில் இருந்து வாலிபர்களும், வாலிபர்களாவதற்கு தயாராகிக் கொண்டிருக்கும் டீன் ஏஜ் சிறுவர்களும், வாலிப வயதைக் கடந்த நடுத்தர வயது வாலிபர்களும், வயதான வாலிபர்களும் தப்பிக்க வேண்டுமானால் ... அதற்கு ஒரேயொரு வழிதான் இருக்கிறது. *“வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுவதினால்தானே. சங். 119:9”*

எந்த வசனத்தினால்? *“சுயாதீனப் பிரமாணமாகிய பூரண பிரமாணத்தை (new covenant) உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான். யாக். 1:25.”* இரட்சிக்கப்பட்டும், பரிசுத்தாவியின் நிறைவைப் பெற்றும், வரங்களுடன் ஊழியம் செய்து கொண்டிருந்தும், இன்னும் கண்களின் இச்சை என்ற பாவத்திலிருந்து விடுதலையாக முடியவில்லையே என்று இரகசியமாக வருத்தப் படுகிறவர்களையும், சொல்லி அழுகிறவர்களையும் பார்த்தால் நமக்கே வேதனையாக இருக்கும்போது; தேவனுக்கு எப்படி இருக்கும்?

தன் குமாரனைக் கொண்டு “செய்ய வேண்டியதெல்லாவற்றையும்” சிலுவையில் செய்து முடித்தார். “என்னென்ன செய்தார்” என்பதை தன்னுடைய ஆவியானவரைக் கொண்டு நமக்கு “வெளிப்படுத்தியும் விட்டார்”. அதை நாம் “பெற்றுக் கொள்வதற்கேதுவான விசுவாசத்தை”யும்; அதை “அறிக்கை செய்வதற்கேதுவான வசனங்களை”யும், வார்த்தைகளையும் கற்றுத்தந்தார். பாவத்திலிருந்து நம்மை விடுதலையாக்கக் கூடாமலிருந்த “பழைய பிரமாணத்தை ஒழித்து புதியதை ஏற்படுத்தினார்”. பூமியின் சாபத்தால் வந்த சகல கேடுகளுக்கும் பரிகாரம் **(Remedy)** செய்த பிறகும்; பிடிவாதம் பிடித்து அழுது கொண்டிருக்கும், பால் குடிக்கும் குழந்தைகளாக விசுவாசிகள்!

உங்கள் பாவத்திலிருந்து உங்களை விடுதலை செய்யாத, உங்கள் விசுவாசத்தை கட்டியெழுப்பாத பிரசங்கங்களை கேட்டுக் கேட்டு நேரத்தை வீணடிப்பதை விட ஏதாவது ஒரு வேலையில் கவனத்தைச் செலுத்துவது நமக்கு நலமாயிருக்கும். விசுவாசம் மட்டுமல்ல, அவிசுவாசம் கூட கேள்வியினால் தான் வரும்! விடியவிடிய பிரசங்கம் பண்ணி, அவிசுவாசத்தை ஊட்டி விட்டு, பாவத்திலேயே விழுந்து கிடக்கும்படி செய்து, சாவை நோக்கி இழுத்துக் கொண்டு போகும் நியாயப்பிரமாணம் சார்ந்த உபதேசங்களை கேட்பதை நிறுத்தி; இந்த (அல்லது இதைப் போன்ற) புதிய உடன்படிக்கை உபதேசங்ளைக் கேளுங்கள். சிவப்பு கண்ணாடியை கழட்டிவிட்டு; இயேசுவின் மூலமாக நாங்கள் இலவசமாகத் தரும் இந்த பச்சைக் கண்ணாடியை மாட்டிக் கொள்ளுங்கள்.

*“வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! ... என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது ... என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.*

*(மத். 11: 28, 30, 29).”*

தேவனுடைய அன்பின் அகல ஆழ உயர நீளங்களில் மூழ்கி எடுத்த முத்துக்களில் சிலவற்றை தந்திருக்கிறோம். இன்னும் ஏராளமான முத்துக்கள் கடலின் ஆழங்களில்... சேகரித்துக் கொண்டிருக்கிறோம் ஒவ்வொன்றாய்... விரைவில் அடுத்த முத்தை எதிர்பாருங்கள்.

*“... இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்கு காண்பிக்கிறேன்... 1 கொரி. 12:31”*

இன்னும் வரும்...